

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# மங்கலதேவி கண்ணகி கோட்டம்

டாக்டர் துளசி. இராமசாமி

# மங்கலதேவி
# கண்ணகி கோட்டம்

(நாட்டுப்புறவியலார் அணுகுமுறை)

டாக்டர். **துளசி. இராமசாமி**
கலை-பண்பாட்டியல் துறை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**International Institute of Tamil Studies**
டி. டி டி. ஐ. அஞ்சல், தரமணி, சென்னை-600113.

# Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title of the book | : | Mangala devi Kannaki Kottam |
| Author | : | Dr. Thulasi. Ramasamy |
| Publisher | : | International Institute of Tamil Studies, Tharamani Madras - 600113 |
| Publication Number | : | 133 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | Sep 1987 |
| Paper used | : | 14kg. white print |
| Size of the book | : | 14 X 21 cms |
| Printing Type used | : | 10 Point |
| Number of Copies | : | 1200 |
| Number of pages | : | VIII+104+9 |
| Price | : | Fifteen Rupees |
| Printer | : | Jayasree Printers, 238, Bharathi Salai, Triplicane, Madras-5 |
| Artist | : | Ganesan |
| Subject | : | A Study on Mangala Devi Kannaki Kottam. |

# பதிப்புரை

ஆய்வுக் களத்தில் இறங்கி அரிய சிந்தனைக் கருத்துக்களை அறிந்து உலகுக்கு வழங்கவேண்டியது ஆய்வு அறிஞரின் கடமை. நல்ல ஆய்வுக்குரிய தரவுகளைச் சேகரிப்பது முக்கியப் பணி. டாக்டர் துளசி. இராமசாமி 'மங்கலதேவி கண்ணகி கோட்டம். என்ற இந்தச் சிறிய ஆய்வு நூலை எழுதுவதற்குப் பெரிதும் முயன்று கரடுமுரடான மலைகளின் மீதும் கள ஆய்வு செய்துள் ளார்.

சுருளி மலைத்தொடரில் உள்ள மங்கலதேவிக் கோயில் தான்கண்ணகி கோட்டம் என்று நாட்டுபுறவியல் நோக்கில் ஆய்வு செய்து கருத்துக் கூறப்பட்டுள்ளது. இது பற்றிய கருத்துக் களை நன்குஆய்ந்து இந்தநூலை ஆசிரியர்எழுதியுள்ளார். இது வரையில்மங்கலதேவி கண்ணகி கோட்டம் பற்றி நல்ல ஆய்வு நூல்கள் வெளிவரவில்லை 4830 அடி உயரத்தில் மலையின் மேல் உள்ள மங்கலதேவிக்கோயில் விலங்குகளின் தாக்குதலி னால் சிதைவு பெற்றுள்ளது. இங்குள்ள கல்வெட்டுக்களும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. மங்கலதேவி கோயில் தான் கண்ணகிகோயில் என்றுஉறுதிப்படுத்த இந்த நூலாசிரியர் பெரிதும் முயல்கிறார். இவருடைய ஆய்வு பலருடைய சிந்தனை க்கு வேலை கொடுக்கும் என்பது உண்மை.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம ஆய்வு நிலையில் நல்லபணி களை ஏற்று நடத்த பேரன்புடன் துணைநின்று உதவும் தமிழக அரசின் நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் கல்வியமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன், தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் சிலம்புச்செல்வர், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன், நிறுவன நிர்வாகக் குழுத் தலைவர். அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர். வ. செ. குழந்தைசாமி ஆகிய பெருமக்கள் அனைவருக்கும நிறுவனம் பணிவன்புடன் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறது.

இந்த நூலை விரைந்து சிறப்பாக அச்சிட்டுத்தந்த ஜெயஸ்ரீ அச்சகத்தார்க்கு எங்கள் அன்பான நன்றியும் வாழ்த்தும் உரியன.

இந்த ஆய்வு நூலைப் படித்து நன்கு சிந்தித்து தமிழ் உலகம் பயனடையும் என்று நம்புகிறோம்.

அன்புள்ள,

டாக்டர் அ.நா. பெருமாள்
இயக்குநர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

சென்னை-600 113.
21-9-1987.

# முன்னுரை

தமிழக நாட்டுப்புறத்தெய்வங்கள் பற்றிய கள ஆய்விற்காக மதுரை மாவட்டத்தில் ஈடுபட்டபோது கிடைத்த ஆதாயம் தான் இந்நூல். உண்மைகளைத்தேடிக்கண்டு பிடிப்பது ஆய்வாளனின் கடமை. அந்த முறையில் மறைந்தும் மறைக்கப்பட்டும் கிடந்த உண்மைகளையெல்லாம் 'மங்கலதேவி கண்ணகி கோட்டம்' பற்றிய ஆய்வில் கண்டுகொள்ள முடிந்தது. இரண்டு திங்கள் முழுக்க இந்த ஆய்வில் ஈடுபட்டேன். உத்தமபாளையம். வட்டம் அதாவது கம்பம் பள்ளத்தாக்கில் என் ஆய்வு நிகழ்ந்தது இவ்வாய்விற்கு உறுதுணையாக இருந்தவர்கள் கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள கூடலூர் கண்ணகி கோட்டச் சீரமைப்புக்குழுவினர்கள் தாம். அவர்கள் இல்லையென்றால் இந்த ஆய்வு முடிவு பெற்றிருக்காது. அவ்வளவு ஈடுபாட்டோடு எனக்குத் தேவையான போது உதவியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தலைவர் கூடல் தா. இராமசாமி, செயலர் இரா. தமிழாதன், பொருளாளர் சா. அக்கிம், கண்ணன் ஆகியோர். அவர்களுக்கு வாஞ்சையோடு நன்றி சொல்லக் கடமைப்பட்டவன்.

இவ்வாய்விற்கு முன்னோடியாக இருந்து ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்த அறிஞர்களாகிய புலவர். சோம சுந்தரனார், பேராசிரியர் சி. கோவிந்தராசன், புலவர் செ. இராசு ஆகியோர்களை இவ்வேளையில் நினைவு கூரத்தான் வேண்டும். உண்மைகளைச் சொல்லத்தான் வேண்டும் என்ற ஆய்வாளனின் கடமையால்தான் செயல்பட்டிருக்கிறேனே யொழிய குறை கூறவேண்டுமென்ற நோக்கு எனக்கில்லை. ஆகவே பெரியவர்கள் என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

ஆய்வின் எல்லா நிலைகளிலும் எனக்குத் துணையாக இருந்து வரும் நிறுவன இயக்குநரின் தூண்டுதலால் ஆய்வில் முழுமனதுடன் ஈடுபட முடிந்தது. அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டவன். மனம் கோணாது எனக்கு நேர்காணலில் உதவிய அன்பர்கள் அத்தனை பேர்களுக்கும் நன்றி. கையெழுத்துப்படியினைச் சரிபார்த்து ஆதரவோடு கருத்துப் பரிமாற்றம் செய்த பேராசிரியர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு, மதுரை காமராசர் பல்கலைக் கழக நாட்டுப்புறவியல் இணைப் பேராசிரியர்

டாக்டர் சரசுவதி வேணுகோபால் ஆகியோர்களுக்கு நன்றி. வேண்டிய போது தேவையான நூல்களைத் தேடிக் கொடுத்து உதவிய உலகத்தமிழாராய்ச்சி நிறுவன நூலகர்களுக்கு என் நன்றி.

அச்சுப்பிழைகளைத் திருத்தி உதவிய ஆய்வாளர் பெ. அனந்தசயனம் அவர்களுக்கு நன்றி; விரைவாக ஓரிரு வாரங்களில் அச்சிட்டுக் கொடுத்த ஜெயபூரீ அச்சகத்தார்க்கு என் நன்றி; ஓவியருக்கும் என் நன்றி.

அன்புடன்,

டாக்டர் **துளசி. இராமசாமி**

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | ஆராய்ச்சி முன்னுரை | 1— 5 |
| 2. | தெய்வம் பற்றிய திராவிடர்களின் கொள்கை | 6—10 |
| 3. | கம்பம் பள்ளத்தாக்கு | 11—17 |
| 4. | கம்பம் பள்ளத்தாக்கின் திராவிடத் தெய்வங்கள் | 18—30 |
| 5. | மங்கல தேவி மாலைத் தெய்வமே | 31—33 |
| 6. | மங்கலதேவியே கண்ணகி | 34—60 |
| 7. | மங்கல தேவி கண்ணகி கோட்ட அமைப்பு | 61—64 |
| 8. | திராவிடச் சக்தி வழிபாட்டில் கண்ணகியின் இடம் | 65—79 |
| 9. | மங்கலதேவி கண்ணகி கோட்டம் இருப்புப் பற்றிய சிக்கல் | 80—89 |
| 10. | முடிவுரை | 90—91 |
| | துணைநூற்பட்டியல் | 92—94 |
| | சொல்லடைவு | 95—104 |
| | படங்கள் | (64 அ—64 ஏ) |
| | வரைபடம் | 40 அ |

# ஆராய்ச்சி முன்னுரை

மக்களின் ஆரவாரப் பண்பாடே நாட்டுப்புறம் என்பது; இப்பண்பாடு கிராமப்புற மக்கள் வாழ்வியலிலும் இருக்கும்; நகர மக்களின் வாழ்விலும் ஊடோடி இருக்கக் கூடியதுதான். ஆக, நாட்டுப்புறம் என்பது நகர, ஊர்ப்புற மக்களின் வாழ்வியலில் வேறுபாடு இல்லாது நிறைந்து இருக்கக் கூடிய பண்பாடாகும். நாட்டுப்புறப் பண்பாட்டின் அங்கம்தான் நாட்டுப்புறச் சமயம்; நாட்டுப்புறத் தெய்வங்கள். இந்நாட்டுப்புறத் தெய்வமே திராவிடத் தெய்வமாகும். தென்னகத்திலுள்ள நாட்டுப்புறத் தெய்வங்கள் எல்லாம் திராவிடத் தெய்வங்களே ஆகும். திராவிடத் தெய்வங்கள் இல்லாது திராவிடர்கள் இல்லை. அதாவது முன்னோர்கள் இல்லாத பின்னோர்கள் இல்லை. முன்னோர் வழிபாட்டை-தம் குல, இன ஊர் முன்னோர் இறந்து தெய்வமானதற்கு வழிபடும் வழிபாட்டை உடையவர்கள் தாம் திராவிடர்கள்-தமிழர்கள். இம்முறையில்தான் கண்ணகி இறந்து தெய்வ நிலைக்கு உயர்ந்ததைக் கொண்டு கோட்டம் அமைத்து வழிபட்டனர் தமிழர்கள். ஆகவே கண்ணகி வழிபாடு நாட்டுப் புறத் தெய்வ வழிபாடே ஆகும். அதுதான் திராவிடத் தெய்வ வழிபாடாகும். இக்கண்ணகி மங்கலதேவியாகிக் கோட்டம் கொண்டு இருப்பதைப் பற்றிக் கூறுவதுதான் இவ்வாய்வு.

மதுரை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள் பற்றிய ஆய்வுக்காக ஆய்வாளர் ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது வருசநாடு, கம்பம் பள்ளத்தாக்கு ஆகிய பகுதிகளிலுள்ள ஊர் களுக்கும் சென்று கள ஆய்வு செய்தார். அப்போது மங்கலதேவி மலை, மங்கலதேவி எஸ்டேட், மங்கலதேவி காடு என்று அடிக்கடி அப்பகுதி மக்கள் சொல்லுவதைக் கேட்டு விளக்கம் கேட்க, கண்ணகி தெய்வமான இடம்தான் மங்கல தேவி மலை; அப்பெயரால் அதைச் சார்ந்த எஸ்டேட் மங்கல தேவி எஸ்டேட் என்று வழங்கப்படுகிறது; இபபகுதி மக்கள்-குறிப்பாக கூடலூர் மக்கள் எக்காலத்திலும் நினைத்து வழிபடக் கூடிய தெய்வம் மங்கலதேவி; தங்கள் வாழ்வில் ஏற்றம் இறக்கம்

காணும்போதும் மங்கலதேவியை நினைத்துப் பார்க்கிறார்கள் என்பது தெரியவந்தது.

அச்சமயத்தில்தான் உத்தமபாளையத்தில் கல்லூரியில் பேரா சிரியராக உள்ளவரும் கண்ணகி கோட்டங்கள் பற்றி ஆய்வு செய்து வருபவருமான திரு. சங்கிலியைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவரின் வழி காட்டலோடு ஆய்வாளர் கம்பம் பள்ளத்தாக்குக் கூடலூர்க்குச் சென்றார்.

கூடலூர் மக்களுக்குப் பாத்தியப்பட்ட கோவில் போன்று இருப்பதுதான் மங்கலதேவி கோட்டம். இம்மங்கலதேவி கோட்டமே கண்ணகி கோட்டம் என்று முதன்முதலில் உலகுக்குச் சொல்லி வந்தவர்களே கூடலூர் மக்களாவார்கள்; ஆனால் செவிடன் காதில் சங்கு ஊதுவது போன்று இருந்தது; தமிழ கத்திலுள்ளவர்களும் அதைக் கண்டு கொள்ளவில்லை. குறிப்பாக, கம்பம் ஏல விவசாயிகள் ஐக்கிய சங்க மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த புலவர் சோமசுந்தரனார்தான் முதன் முதலில் மங்கலதேவி கோட்டம் கண்ணகி கோட்டமாகும் என்று முறையாக அறிக்கைவிட்டு, அதை அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு கு. காமராசு அவர்களிடம் 1957-இல் முறையிட்டு இக்கண்ணகி கோட்டத்தைச் சீர்படுத்த வேண்டும்; சுற்றுலா மையமாக்க வேண்டும் என்று வாதாடியிருக்கிறார். ஆனால் ஏனோ அவரின் முறையீட்டை யாரும் கண்டு கொள்ள வில்லை.

அதன்பின் அவருடைய மாணாக்கர்கள் இரா. கணபதி ராசன், கூடல். தா. இராமசாமி ஆகிய இருவரும் இதே சிந்தனையாகச் செயல்பட்டு வந்திருக்கிறார்கள்; குறிப்பாக, புலவர் இரா. கணபதிராசன் அவ்வப்போது தன் நாட்குறிப் பேட்டில் கண்ணகி, மங்கலதேவி மலையில் தெய்வமானதைக் குறிப்பிட்டு, இக்கோட்டம் பற்றி உலகுக்குச் சொல்ல வேண்டு மென்ற அவாவையும் குறிப்பிட்டிருக்கிறார். 1959-இல் கூடலூர் வந்த பேராசிரியர் மறை. திருநாவுக்கரசிடம் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். அதன்பின் கூடலூர் தமிழ் இலக்கியக் கழகம் தொடங்கப்படுகிறது. அதன் வாயிலாக கூடல். தா. இராமசாமியும் புலவர் இரா. கணபதிராசனும், சீரமைப்புக் குழுவின் புரவலர் மறைந்த வள்ளல் கே. பி. காமராசும் இச்செய்தியை- மங்கலதேவி கோட்டமே கண்ணகி கோட்டம் என்று முறையாக ஆய்வு செய்து சொல்ல வேண்டு மென்ற நோக்கில் தஞ்சையில் அப்போது இருந்த நண்பர் கி. இராசன் மூலமாகக் கரந்தைக் கல்லூரிப் பேராசிரியர்

சி. கோவிந்தராசனை அழைத்து வந்தனர். 1963-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் நாள் அவரை அழைத்துக்கொண்டு மங்கலதேவி மலைக்குச் சென்றார்கள். அவரும் பார்த்துவிட்டு உடைந்து கிடந்த கண்ணகி சிலையைக் கோணிப் பையில் கட்டிக்கொண்டு ஆய்வு நடத்த வேண்டுமென்று சென்றுவிடுகிறார். அவர் தன்னுடைய ஆய்வை முறையாக வெளியிட வேண்டும்; தமிழக மக்களுக்குப் பத்திரிக்கை வாயிலாக வெளியிட வேண்டும். அரசுக்குச் சொல்ல வேண்டுமென்று கூடலூர் தமிழ் இலக்கியக் கழகம் மீண்டும் மீண்டும் வேண்டிக் கொண்டிருந்தது ஆனால் பேராசிரியர் அதற்குப் போதிய அவகாசம் வேண்டும்; மீண்டும் வந்து ஆய்வு செய்ய வேண்டும்; அதற்குக் கூடலூர் மக்கள் துணையாக நிற்கவேண்டும்; இது தொடர்பான செய்திகளைத் திரட்டித் தரவேண்டும்; புகைப்படங்களை அனுப்ப வேண்டும் என்று வேண்டிக் கடிதம் எழுதியிருக்கிறார். 1965-இல் அவசரம்கருதி வெளியிடுவதாகக் கூடலூர் அன்பர்களுக்குக் கடிதம் எழுதிவிட்டு தமிழ்ப்பொழிலில் மங்கலதேவி கோட்டம் கண்ணகி கோட்டமே ஆகும்; இதுதான் சேரன் செங்குட்டுவன் கட்டிய கோயிலாகும்; சிலையும் இமயத்திலிருந்து கொண்டு வந்த கல்லில் அமைக்கப்பட்டதுதான் என்று சொல்லிக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது; முதன்முதலில் சுருளி மலைத் தொடரிலுள்ள மங்கலதேவி கோட்டத்தைக் கண்ணகி கோட்டம் என்று ஆய்வு செய்து சொல்லுகிறேன் என்று கூறியிருந்தார். இதனால் தமிழக மக்களுக்கு முதன்முதலில் மங்கலதேவி கோட்டத்தைக் கண்டு பிடித்து அதுதான் கண்ணகி கோட்டம் என்று ஆய்வு செய்து சொன்னவர் பேராசிரியர் சி. கோவிந்தராசன் என்று நம்பும்படியாக விளம்பரப்படுத்தப்பட்டது.

மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினர் 1965-இல் மங்கலதேவி கோட்டத்திற்கு வந்து கல்வெட்டுக்களைப் படியெடுத்துச் சென்று 1965-66 ஆண்டு அறிக்கையில் மங்கலதேவி கண்ணகியே என்று நிறுவினர்; இராசராச சோழன், கோயிலைப் புதுப்பித்த செய்தியையும் அதன்பின் பாண்டியன் மாறவர்மன் குலசேகரன் புதுப்பித்த செய்தியையும் சொல்லியிருந்தார்கள். முறையாகத் தொல்பொருள் துறையின் ஆய்வுக் கண்ணோட்டத்துடன்-கல்வெட்டுக்களை ஆய்ந்து கண்ணகி கோட்டம் பற்றிச் சொன்னவர்கள் கே. ஜி. கிருஷ்ணன் தலைமையில் இயங்கிய மத்திய தொல்பொருள் துறையினரே ஆவர்.

இக்காலகட்டத்தில்தான் கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழு ஒன்று கூடலூரில் அமைக்கப்பட்டது. மங்கலதேவி கோட்டம் பற்றிய அலுவல்களைச் செம்மையாக அன்றிலிருந்து

இன்றுவரைச் செய்து வந்து கொண்டிருக்கிறது. இக்குழுவின் வேண்டுகோளின்படி, பேராசிரியர் அப்துல் ரகுமான் குழுவினர் கண்ணகிகோட்டத்திற்கு வந்து போயிருக்கிறார்கள்; ஆனால் ஆய்வு நோக்கம் கொண்டு செயல்பட்டதாகத் தெரியவில்லை; அதன்பின் பேராசிரியர் சி. கோவிந்தராசன் கலைஞர். மு. கருணாநிதியிடம் செய்தி சொல்லியிருக்கிறார். அவர் 1971-இல் சென்னையில் நடந்த இளங்கோ அடிகள் சிலை திறப்பு விழாவில் சேரன் செங்குட்டுவன் அமைத்த கண்ணகி கோட்டத்தை, முதன் முதலில் கண்டுபிடித்தவர் கோவிந்தராசன் என்று சொன்னார். அதன்பின் தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத்துறையினர் வந்து பார்த்தனர்; தங்கள் துறை 1965-இல் வந்து பார்த்தது என்று சொன்னார்கள்; 1906-அளவிலேயே இக் கோயில் இருப்பது தங்கள் துறைக்குத் தெரியும் என்றும் அறிக்கை வெளியிட்டனர். 1972-ல் இந்து நாளிதழில் கே. ஜி. கிருஷ்ணன் மங்கலதேவிக் கோயில், கண்ணகி கோயிலே என்று சுடிதம் எழுதினார். புலவர் செ. இராசு மங்கலதேவி மலைக்குச் சென்று ஆய்வு செய்து கல்வெட்டையும் ஆராய்ந்து முறையாகக் கொங்கு இதழிலும் 1976-ல் மைசூரில் நடந்த அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் எட்டாவது கருத்தரங்கிலும் கட்டுரை படித்துச் செய்தி வெளியிட்டார். அடுத்து தமிழக அரசின் தற்போதைய பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை. து. நடராசன் தம் குழுவினருடன் சென்று கருத்துக் கூறியிருக்கிறார்.

ஆக, இப்படி பல ஆராய்ச்சி அறிஞர்கள் சென்று, ஆய்ந்து கருத்துக்கள் சொல்லி வந்தார்கள். இளைய தலைமுறையினர் பங்கிற்கு மீண்டும் ஆய்வாளர் ஆய்வைத் தொடங்கினார்; 1985-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 17-ஆம் நாள் சனிக்கிழமை (ஆவணி முதல் நாள்) கூடலூர் கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழுவின் தலைவர் கூடல். தா. இராமசாமி, செயலர் புலவர் இரா. கணபதிராசன், பொருளாளர் சா. ஹக்கீம், நூலகர் க. மதிவாணன் ஆகியோர் தொடர மங்கலதேவி கோட்டம் சென்று ஆய்வை மேற்கொண்டார்: நாட்டுப்புறவியல் நோக்கில் தன் ஆய்வைக் கூறுவதே இந்நூலாகும்.

முதலில், ஆய்வை மேற்கொள்வதற்கு முன் ஆய்வாளருக்கு இது கண்ணகி கோயிலாக இருக்காது என்றுதான் பட்டது; இது ஒரு குல தெய்வக் கோயிலாகவோ, இனத் தெய்வக் கோயிலாகவோ இருக்க வேண்டுமென்பதுதான் எண்ணம். இந்த அளவில் தான் செய்தி கேள்விப்பட்டிருந்தார்; கவுண்டர்கள் தாம் இக்கோயிலை முக்கியமாக வணங்கி வழிபடுகிறார்கள் என்பது தெரிய வந்தது. ஆனால் கள ஆய்வில் ஈடுபட்டு முறையாக ஆய்வு செய்தபின் இது—மங்கலதேவி கோயில், கண்ணகி கோட்டமேயாகும் என்று தெள்ளத் தெளிவாகத் தெரியவந்தது.

இலக்கியச் சான்று, கல்வெட்டுச் சான்று, கள ஆய்வுத் தரவுகள், ஆய்வாளரின் நாட்டுப்புறத் தெய்வம் பற்றிய கொள்கை இவற்றின்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வின் முடிவே இந்நூலாக்கம். பின்வரும் பகுதிகளாகப் பிரித்து நூலாக்கப்பட்டிருக்கிறது.

1. ஆராய்ச்சி முன்னுரை
2. தெய்வம் பற்றிய திராவிடர்களின் கொள்கை
3. கம்பம் பள்ளத்தாக்கு
4. கம்பம் பள்ளத்தாக்கின் திராவிடத் தெய்வங்கள்
5. மங்கலதேவி மாலைத் தெய்வமே
6. மங்கலதேவியே கண்ணகி
7. மங்கலதேவி கண்ணகி கோட்ட அமைப்பு
8. திராவிட சக்திவழிபாட்டில் கண்ணகியின் இடம்
9. மங்கலதேவி கண்ணகி கோட்டம் இருப்புப் பற்றிய சிக்கல்
10. முடிவுரை.

# 2. தெய்வம் பற்றிய திராவிடர்களின் கொள்கை

பெரியவர்களையும் மூத்தவர்களையும் நல்லவர்களையும் மதிப்பது தமிழர்களின் பண்பு; மரியாதையோடு நடத்துவது காலந்தோறும் நடந்து வரும் செய்கை; இம்மதிப்பு மரியாதை அளவுக்கு மிஞ்சி நடக்கும்போது அது பக்தியாகிறது; இப் பக்திக் கொண்டாட்டமே வழிபாடாகிறது. இம்மரியாதை வழிபாடு நல்லவர்களுக்கு மட்டுந்தானா நடக்கிறது? தீயவர்களுக்கும் — பயமுறுத்தும் முரடர்களுக்கும் நடத்தப்படுகிறது. முன்னது தானாக நடப்பது; பின்னது நடக்க வைக்கப் படுகிறது. இவை உலகம் முழுவதும் நாம் காணும் நடைமுறைகளேயாம்.

தாம் மதிக்கும் - நல்லது செய்து வாழ்ந்து இறந்த மனிதர்களை உயர்வாக மதிக்கிறார்கள்; வழிபாடு செய்கிறார்கள். இருக்கும்போது அந்த நல்லவர்கள் எப்படி தமக்கு உதவினார்களோ அதேபோல், இறந்த பின்பும் உதவ வேண்டும் என்று நினைக்கிறார்கள்; அந்த நினைப்பே வழிபாடாகிறது. அவர்களின் ஆவி உதவுவதாக நம்பப் படுகிறது. அந்த ஆவி, தமக்கு எப்போதும்போல் நன்மை செய்யும் என்ற நோக்கில் வழிபடப் படுகிறது; தமக்குத் தீயசக்திகளால் அழிவு ஏற்படும்போது வாழ்ந்தபோது உதவியதுபோல இப்போதும் அவர்களின் ஆவி உறுதுணையாக இருக்கும் என்ற நோக்கில் வணங்கி வழிபடப் படுகிறது.

இதுபோலவே, கெட்டவர்கள் - தீயவர்கள் வாழும்போது துன்பத்தைக் கொடுத்ததுபோல், அவர்களின் கொடூரமான ஆவி இப்போதும் தங்களுக்கு தீங்கு செய்யாது இருக்க வேண்டும் என்ற நோக்கில் பயத்துடன் வணங்கப்படுகிறது; வழிபாடு நடத்தப்படுகிறது. நல்லவர்கள் ஆவி வழிபாட்டிற்கு விரும்பி பலியிட்டார்கள்; வழிபடு பொருளை வைத்தார்கள். இப்போது தீயவர்களின் ஆவியினால் தீங்கு நேரக்கூடாது என்ற நோக்கில்— ஆவியை அமைதிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பலியிடு

கிறார்கள். ஆவி விரும்பி ஏற்கும் பொருட்களை வைத்து வழி படுகிறார்கள். இது திராவிடர்களின் - தமிழர்களின் மத்தியில் உள்ள பழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

இத்தகைய பண்பாடே இவர்களின் தெய்வமாகிறது; அதாவது இறந்தவர்களின் ஆவியை வணங்கி வருவது - வழிபட்டு வருவது இவர்களின் கடவுள் கொள்கையாகிறது; இறந்தவர்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள்; வணங்கி வாழ்த்தப் படுகிறார்கள்; வழிபடப்படுகிறார்கள். முன்னோர்களை - இறந்து தெய்வமானவர்களைத் தெய்வமாக ஏற்றுக் கொள்வது தான் திராவிடர்களின் பண்பாடு; இதுதான் அவர்கள் ஏற்றுக் கொண்ட கடவுள் பற்றிய கொள்கையாகும்.

தமிழ்நாட்டில் ஆய்வாளர் மேற்கொண்ட கள ஆய்வின் வழியாகத் தொகுக்கப்பட்ட தரவுகளின்படி மேற்கூறிய கருத்துக் களுக்கு வலுவூட்டப்படுகிறது. நெல்லை, மதுரை மாவட்டங் களில் அதிக ஈடுபாட்டோடும், பிற மாவட்டங்களில் அங்கொன் றும் இங்கொன்றுமாகச் செய்த ஆய்வின்படியே இக்கட்டுரை அமைகிறது.

இன்று தமிழ்நாட்டின் ஊர்களிலும் நகரங்களிலும் வணங் கப்படும் தெய்வங்கள் எல்லாம் முன்னோர் வழிபாட்டின்படியே அமையும் தெய்வங்களாகும்; அவைதாம் திராவிடத் தெய்வங் களாகும்; ஆனால் இவற்றை சிறு மரபுத் தெய்வங்கள் என்று ஏளனப்படுத்தினார்கள்; இவைகள் சிறுமரபுத் தெய்வங்கள் அல்ல; திராவிடத் தெய்வங்கள் என்று கூறப்படும் நாட்டுப்புறத் தெய்வங்களாகும்.

இந்துக்கள் என்று இப்போது கூறப்படும் நிலை, ஆரியர்கள் இங்கு வந்தபின் ஏற்பட்ட நிலை. இப்போது திராவிடத் தெய்வங்களை ஆரியத் தெய்வங்களோடு இணைத்து விட்டார் கள்; ஆரியர்களின் வசதிக்கேற்ப சில தெய்வங்களை உயர் மரபு- பெருமரபுத் தெய்வங்கள் என்றும், ஏனைய திராவிடத்தெய்வங் களை - நாட்டுப்புறத் தெய்வங்களை - கிராம தெய்வங்களை சிறுமரபுத் தெய்வங்களென்றும் ஒதுக்கிவிட்டார்கள்.

பெருமரபாக்கப்பட்ட அழகரும், சொக்கரும், மீனாட்சியும் முருகனும் வெவ்வேறு காலங்களில் மக்களிடையே வாழ்ந்து மடிந்தவர்களே யாவர்; இவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்கள் தாம்; -திராவிடத்தெய்வங்கள்தாம்; இன்று இந்துத் தெய்வமாக் கப்பட்டிருக்கிறார்கள்; பெருமரபுத் தெய்வங்களாகக் கொண் டாடப்படுகிறார்கள். (இராமசாமி, துளசி, 1985 : 15)

தென்னகத்திலுள்ள திராவிடத் தெய்வங்களைச் சிலஅமைப் புக்களில் அடக்கி விடலாம். தீக்குழியில் இறங்கித் தெய்வமான வர்கள் என்றும், சமாதியானவர்கள் என்றும் இரு பகுப்பாக்கி விடலாம்; இதுபோக, அகால மரணமடைந்தவர்களையும் தெய்வமாக்குகிறார்கள். இவர்களின் ஆவி நிலை கொண்ட இடத்தை வணங்குகிறார்கள்.

## மாலைத் தெய்வங்கள்

நல்லவர்களாயிருந்து பூக்குழி என்று சொல்லப் பெறும் நெருப்பில் பாய்ந்து உயிரைப் போக்கிக் கொள்ளும் பெண் களை மாலைத் தெய்வங்களாக மதித்தனர்; தம்முடைய மானம் காக்க வேண்டித் தற்கொலை செய்து கொண்டவர்களை யும் மாலைத் தெய்வங்களாக மதித்தனர்; மாலைத் தெய்வங்கள் பெரும்பாலும் சுமங்கலியாகத்தான் இருப்பார்கள்; அல்லது கன்னிப்பெண்களாக இருப்பார்கள். இவர்களை, இம்மாலைத் தெய்வங்களைப் 'பெறந்தாளு' என்று ஆந்திராவில் கூறுகிறார் கள். மங்கள வழிபாடு என்று கன்னடத்தில் கூறுகிறார்கள்.

## சமாதித் தெய்வங்கள்

நல்லவர்களாயிருந்து அடங்கியவர்களையும் முனிவர்களை யும் சமாதித் தெய்வங்கள் என்று கூறுகிறார்கள்; இறந்தவர் களைப் பொதுவாக புதைப்பதுதான் திராவிடர்களின் பழக்கம். இப்பழக்கத்தினால் புதைத்தவர்களுக்குச் சமாதி கட்டினார்கள்; இச்சமாதியை வழிபட்டார்கள். இத்தகைய வழிபாடு தமிழ் நாட்டில் மிகுதியாக இருக்கிறது. இம்முறை ஆண்களுக்குத்தான் இருக்கிறது.

## அகால மரணமடைந்தவர்களை வழிபடுவது

அகால மரணமடைந்தவர்களின் ஆவிகள் துன்புறுத்தும் என்பதற்காக அவற்றைச் சாந்தப்படுத்துவதற்காகப் பலி கொடுத்து வழிபடுகிறார்கள். இம்முறையும் தமிழ் நாட்டில் எங்கும் இருக்கிறது.

ஆக, இவ்வாறான வழிபாடு தமிழ்நாட்டில் இருக்கிறது. இத்திராவிடத் தெய்வங்கள் பற்றியும் வழிபாடு பற்றியும் விரிவாக ஆய்வாளரின் ''நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள்'' என்ற புத்தகம் கூறுகிறது.

இனி, இத்திராவிடத் தெய்வங்கள் ஊரைக்காக்க வேண்டி ஊர்த் தெய்வமாக வணங்கப்பட்டு வந்திருக்கின்றன; இவர்கள்

ஊர் நலம் காக்கும் முன்னோர்களாக இருந்திருக்கிறார்கள். இனம் காக்க வேண்டி இனத் தெய்வங்களை வணங்கி வந்திருக்கிறார் கள்; இத்தெய்வங்கள், இனத்தின் மானம் காக்கும் முன்னோர் களாக இருந்திருக்கிறார்கள். குலம் காக்க வேண்டி குலத் தெய்வங்களை வழிபட்டு வந்திருக்கிறார்கள்; இவர்கள், குலத் தின் முன்னோர்களாக இருந்திருக்கிறார்கள்.

திராவிடத் தெய்வங்கள், மனிதர்கள் இறந்தபின் நிலவும் ஆவியை அடிப்படையாகக் கொண்டது என்பது தேற்றமாகிறது. மாலைத் தெய்வமாகவோ சமாதித் தெய்வமாகவோ ஆவி நிலை கொண்டிருக்கிறது; பயங் கருதியே இத்தெய்வங்கள் வழிபடப்படுகின்றன; நோய் நொம்பல் தீர வேண்டும் என்ற நோக்கில் வழிபடப்படுகின்றன.

இவ்வாறு தெய்வமாகும் ஆவி நிலை கொண்ட இடத்தைக் குறிப்பிட ஒரு அடையாளம் வைக்கப்படும்; இந்த அடையாளம் ஒரு வடிவமற்ற கல்லாகவே இருந்தது. இக்கல் பலியிட வேண்டிய அடையாளத்திற்காகத்தான் வைக்கப்பட்டது. பின் நாளாவட்டத்தில் இது லிங்க வழிபாடாகிறது; இவ்வடை யாளக் கல்லில் ஆவி நிலைகொண்டிருக்கும்; ஆவி நிலைகொண்ட தால்தான் அக்கல் வழிபடக்கூடிய நிலை ஏற்பட்டது. அக்கல்லை வழிபடும் பொருளை மாற்றவும் செய்கிறார்கள். இவ்வாறு மாற்றும்போது மாற்றப்பட்ட பழைய கல்லில் ஆவி இருப்ப தில்லை. புதிய கல்லில் ஆவி குடிகொள்கிறது. ஆகவே, ஆவி குடிகொண்ட கல்லைத்தான் திராவிடர்கள் வணங்கி வந்திருக் கிறார்கள். ஆனால் இவ்வடையாளக் கல் முதலில் பலி கொடுக்க வேண்டிய அடையாள இடத்திற்காகத்தான் நடப்பட்டி ருந்தது. பலியே இன மரபுச்சின்ன முறைமைக்காகத்தான் கொடுக்கப்பட்டது. எல்லா உயிர்களையும் உடன் பிறந்தவை களாக ஏற்றுக் கொள்ளும் அம்சத்தின் அடையாளத்திற்காகக் கொடுக்கப்பட்டது.

பலி கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இம்முறைக்கு இல்லை இவ்வின மரபுச்சின்ன முறைமைப்படி உயிர் இனங்களை நேர்ந்து அத்தெய்வத்திற்கு விட்டார்கள். அவ்வினங்களைக் காட்டும் அடையாளமாகவும் அக்கல் இருந்திருக்க வேண்டும். இன்றும் எல்லாக் கோயில்களிலும் இம்முறை இருக்கிறது. குறிப் பாகக் கம்பம் பள்ளத்தாக்குக் கவுண்டர்கள் மத்தியில் இப் பழக்கம் இன்றும் இருந்து வருகிறது. தை மாதம் பிறக்கும் கன்றுக் குட்டிகளை ஊர்ப் பொதுத் தொழுவத்தில் கட்டி விடு கிறார்கள். இத்தொழுவத்தின் மத்தியில் இன்றும் கம்பம் ஒன்று

அடையாளமாக இருந்து வருகிறது. ஆனால் இதை இவர்கள் பெருமாள்-கண்ணன் கோயிலில் நெருப்பு ஏற்றும் கம்பமாக இருந்து இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

இவ் அடையாளக் கல் வழிபாட்டின்படி திராவிடத் தெய்வ வழிபாட்டில் உருவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வில்லை என்பது தெளிவாகிறது. இன்று பெரும்பாலான கோயில் களில் வெறும் பீடம் மட்டும் போடப்பட்டிருப்பதைக் காண லாம்; அல்லது ஒரு கல்லோ, சூலமோ நடப்பட்டிருப்பதைக் காணலாம். இதன் நோக்கமே உருவ வழிபாடு இல்லை என்பது தான்.

ஆனால் காலம் மாறும்போது இம்முறை மாறி வருகிறது; இப்போது களிமண்ணால் உருவம் செய்து வழிபடுகிறார்கள்; பொங்கலின்போது பழைய உருவங்களை மாற்றிப் புது உருவங் களை வைக்கிறார்கள். இவை இப்போது கல் சிலைகளாக மாற்றம் கொண்டு வருகின்றன.

# 3. கம்பம் பள்ளத்தாக்கு

மதுரைக்கு மேற்கே, வைகை ஆற்றுக்குத் தென் பகுதியி லிருந்து தொடர்ந்து செல்வதுதான் நாகமலைத் தொடர்; இத் தொடர் சுருளி மலைத் தொடராக நீள்கிறது. உசிலம்பட்டிக்கு மேற்கில் ஆண்டிப்பட்டிக் கணவாயிலிருந்து சற்று தென்பக்க மாகச் சாய்ந்து மீண்டும் மேற்காக ஆண்டிப்பட்டிக்கு தென்பக்க மாக நீள்கிறது; அதன்பின் தெற்காக நீண்டு வருச நாட்டுப் பகுதியைத் தன் உள்பக்கமாகக் கொண்டு நீள்கிறது; இத் தொடர் குமுளி மலைத் தொடர் வரைத் தொடர்ந்து சென்று பழனி மலைத் தொடரோடு சேர்கிறது. இடையில் சுருளி அருவியை உற்பத்தியாக்கும் மலையாகக் கிளைத்துக் காமயக் கவுண்டன்பட்டி வரை செல்லுகிறது. இதுதான் மதுரைக்கு மேற்கே உள்ளமலைத் தொடரின் வளர்ச்சி; வருச நாட்டுப் பகுதி யின் தொடர்ச்சியாகத் தென்கிழக்குப் பகுதியில் இருப்பது மகா லிங்கமலை என்று அழைக்கப்படும் சதுரகிரிமலை, அதாவது சாப்டூர் அருகில் உள்ளதும் ஏழுமலைக்குப் பக்கத்தே உள்ளதும் வத்திராயிருப்புக்கு அணமையிலுள்ளதுமான மலை. குமுளியி லிருந்து இம்மலைக்கு மலை வழியாகவே செல்லலாம். இவ் வளவும் மலைப்பகுதி; இம்மலைப் பகுதி கேரளாவைத் தமிழகத்திலிருந்து பிரித்துக் காண்பிக்கிறது.

வருச நாட்டுப் பகுதியும் கம்பம் பள்ளத்தாக்கும் இரண்டு குதிரை லாடம் வடிவில் உள்ள பகுதிகளாகும். சுற்றிலும் மலைப் பகுதி; மூன்று பக்கமும் சுவர் வைத்துக் சேர்த்தது போன்ற கச்சிதமான அமைப்பு. கீழ்ப் பகுதியிலுள்ள குதிரை லாடப் பகுதியில் இருப்பது வருச நாடாகும்; மேற்குப் பகுதியில் இருப்பது கம்பம் பள்ளத்தாக்கு ஆகும். சுருளி ஆறு இப்பள்ளத் தாக்கின் கிழக்கிலுள்ள மலைத்தொடரில் உற்பத்தியாகி ஓடி வருகிறது. பள்ளத்தாக்கின் தென்பகுதியில் இருப்பதுதான் மங்கல தேவி மலை; இதுவும் சுருளி மலைத் தொடர்தான்; ஒரு வசதிக் காகத் தென்பகுதி மலையை மங்கலதேவி மலையென்று அழைக்க லாம். இங்குதான் மங்கலதேவி கோட்டம் இருக்கிறது. அருகே

14 கி.மீ. தொலைவில்தான் குமுளி இருக்கிறது; இது கேரள எல்லைப்பகுதி; குமுளியின் நகர எல்லையிலிருப்பது தமிழகப் பகுதி; மங்கலதேவி கோட்டத்திற்குத் தென்பக்கத்தே பேரியாற்று நீர்த்தேக்கம் இருக்கிறது. இதுதான் தேக்கடியாகும். தேக்கடி மாநிலத்தின் சுற்றுலா மையமாகும். இந்த ஏரியில் படகில் செல்லும்போது வனவிலங்குகளைக் காணலாம்; அருகில் சுற்றிலும் பேரியாறு வன விலங்குச் சரணாலயம் உள்ளதே காரணம். மலைக்குப் மேற்குப் பக்கம் செல்லும் பேரியாற்றை மலையைக் குடைந்து எடுத்து கிழக்குப் பக்கமாகத் திருப்பி வீரவன் ஆற்றின் மூலம் தண்ணீர் விடுகிறார்கள். இது தமிழகப் பகுதி. இங்குதான் பேரியாற்று நீர் மின் நிலையம் உள்ளது; இதை லோயர் கேம்ப் பகுதி என்று அழைக்கிறார்கள்; நீர் மின்சாரம் எடுக்கப்படுகிறது; இந்தத் தண்ணீர் கூடலூருக்குத் தென் பகுதியில் சுருளியாற்றோடு கலந்து முல்லையாறாக வழிந்தோடுகிறது. இந்த முல்லையாறு உத்தமபாளையம், சின்னமனூர், வீரபாண்டி வழியாக ஓடி, தேனிக்குத் தென்பகுதியில் பாய்ந்து, குன்னூருக்குத் தெற்கே வருச நாட்டு மலைப் பகுதியிலிருந்து உற்பத்தியாகும் ஆற்றோடு சேர்கிறது. வருச நாட்டுப் பகுதியிலிருந்து வரும் ஆற்றில் எப்போதும் தண்ணீர் இருக்காது. முல்லை ஆற்றில்தான் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும்; ஆக, செழுமையான பூமி முல்லை ஆற்றுச் சமவெளிப் பகுதியே ஆகும்.

குன்னூர்க்குத் தெற்கே அமச்சியாபுரத்திற்கருகில் வருச நாட்டுப் பகுதி ஆறும், கம்பம் பள்ளத்தாக்கு ஆறும் சேர்ந்து கிழக்காக ஓடிவருகிறது. வருசநாட்டு ஆறுதான் வைகை ஆறாகிறது.

கம்பம் பள்ளத்தாக்கின் கீழ்ப் பகுதியிலுள்ள மலைப்பகுதி காமயக்கவுண்டன் பட்டிக்கு கிழக்கேயிருந்து தொடராக நீண்டு சுருளி மலைத் தொடராகி மங்கல தேவி மலையில் சேர்கிறது. இம்மலைப் பகுதியிலிருந்துதான் சுருளி ஆறு உற்பத்தியாகி வருகிறது என்று கூறப்பட்டது. காமயக்கவுண்டன்பட்டிக் கருகிலுள்ள மலை செங்குன்றாகும்; அடிமுதல் முடிவரை செம்மையாகவே காட்சியளிக்கிறது. இங்கு சண்முகநாதன் கோவிலும் இருக்கிறது. இம்மலைச்சிகரத்தின் கற்களை உடைத்துப் பார்த்தால் செவ்வரத்தம் பூப்போலக் காட்சியளிப்பதைக் காணலாம். ஒளியுடனும் அக்கற்கள் காட்சியளிக்கின்றன இதுதான் செங்கோடு ஆகும். இம்மலைத் தொடரின் தென் பகுதியில் உள்ளது வெண்குன்றாகும்; இப்பகுதி வெண்மையாகக் காட்சி அளிக்கிறது. கூத்தநாச்சியம்மன் கோவில் இங்குதான்

உள்ளது. இக்கோயில் பகுதி முழுக்க வெண்மையாக சுண்ணாம்பு கலந்த மண் இருக்கிறது. சிலப்பதிகாரம் குறிப்பிடும் வெண்குன்றாகவும் இருக்கிறது; இதுதான் வெண்கோடு ஆகும் சுருளித் தீர்த்தமும் சுருளி ஆண்டவர் கோயிலும் இப்பகுதியில்தான் உள்ளன. இப்பகுதியில்தான் சிலம்பு குறிப்பிடும் ஏரகம் எனும் முருகன் கோயில் உள்ள இரசக்க நாயக்கனூர் எனும் சிற்றூர் உள்ளதாகக் கருதுகிறார்கள். இச் சுருளி மலையாகிய செங்குன்றிற்குத் தென்மேற்கிலுள்ளது ஒருதனிக் குன்று: உயர்ந்த சிகரம் கொண்ட மலைப் பகுதி; ஏறத்தாழ 5000 அடி உயர்ச்சியை உடையது. இங்கு மூன்று வேங்கைக் கானல்கள் உள்ளன. இவ் வேங்கைக் கானலில் தான் மங்கலதேவி கோட்டம் உள்ளது. இக்கோட்டத்தின் கீழ்ப் பகுதியில் பழியர் எனும் பழங்குடியினர் வாழ்கின்றனர்; உயரம் தாழ்ந்த இடங்களில் வாழ்பவர்கள் தான் பழியர் ஆவர்; இவர்கள் சதுரகிரி மலையிலும் வாழ்கிறார்கள். காடுகள் அடர்ந்த கோட்டத்தின் தென்பகுதியில் பணியர், மன்னாமார், ஊராளியர் என்னும் பழங்குடியினர் வாழ்கிறார்கள். இது கேரளப் பகுதியாகும். இம்மலைப் பகுதி முழுக்க யானை போன்ற வனவிலங்கு வாழும் இடமாகும். மலைப்பயிர்கள், மலைத் தோட்டப் பயிர்கள் செழித்து வளரும் செழுமைப் பகுதிகள்.

இந்த மங்கலதேவி மலையின் வடபக்கத்தே உள்ளதுதான் கம்பம் பள்ளத்தாக்கு. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆளவந்த பின்தான், இப்பகுதிக்கு இப்பெயரிட்டனர். இப்பள்ளத்தாக்கு கேரளம் போன்று இருக்கும் சூழலைக் கொண்ட மலை சூழ்ந்த பகுதியாதலால், தட்பவெப்ப நிலை ஒரே சீராக இருக்கிறது; மழைப் பொழிவும் மிகுதி: குளிர்ச்சிக்கும் குறைவில்லை: மக்கள் வாழ்க்கைக்கும், கால்நடைகளின் பெருக்கத்திற்கும் வசதியான பூமி. கால்நடைகளின் பெருக்கத்தால், இம்மக்கள் வளமான வாழ்வு வாழ்கிறார்கள்.

இங்கு நெல், கடலை, சோளம், பருத்தி மிகுதியாக உற்பத்தி செய்கிறார்கள். இம்மக்களுக்கு அருகிலுள்ள மலைத்தொடரில் ஏலத் தோட்டங்கள் இருக்கின்றன: எல்லோரும் ஏல விவசாயிகள். கேரளப் பகுதியில்தான் ஏலத் தோட்டங்கள் மிகுதியான அளவில் இருக்கின்றன; அவை யாவும் இப்பகுதி மக்களுக்குச் சொந்தமானவைகளேயாகும்.

கூடலூர், கம்பம், உத்தமபாளையம் ஆகியவை இப்பள்ளத்தாக்கின் முக்கிய ஊர்கள். இப்பகுதியில்- இப்பள்ளத்தாக்கில் கவுண்டர்களும் தேவர்களும் மிகுதியான அளவில் இருக்-

கிறார்கள். நாயக்கர், செட்டியார், பிள்ளைகளும் அடுத்த நிலையில் இருக்கிறார்கள். கவுண்டர்கள் காப்பிலியர் என்று அழைக்கப்பெறும் கன்னடம் பேசக்கூடிய மக்கள் ஆவர்: இவர்கள் 14-ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேறியவர்கள்; நாயக்கர்களும் செட்டியார்களும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து குடியேறியவர்கள். இவர்கள் தெலுங்கு பேசக்கூடியவர்கள். தேவர் இனத்தார்கள் எல்லாம் உசிலம்பட்டி பகுதிகளிலிருந்து வந்தவர்களே ஆவர்; இவர்கள் கள்ளத்தேவர், பிரமலைக்கள்ளர் என்று அழைக்கப்பெறும் பிரிவினர். ஆகவே, இப்பகுதி மக்கள் அனைவரும் குடிபெயர்ந்த இனத்தவர்களே ஆவர்; முஸ்லீம் மக்களும் - மதம் மாறியவர்களும் இங்கு கணிசமான அளவில் வாழ்கிறார்கள்.

இப்பள்ளத்தாக்கில் வாழும் மக்கள் அனைவரும் வளமை நோக்கி அங்குக் குடிபெயர்ந்தவர்கள்; ஆனால் அங்கு மக்கள் கூட்டம் முன்பு இருந்ததில்லையா என்ற கேள்வி எழும்போது, அதற்கும் பதில் இருக்கிறது. முதுமக்கள் தாழி கூடலூர்க்குத் தெற்கில் கிடைத்ததாக அவ்வூர்மக்கள் கூறுகிறார்கள். தொல் பொருள் ஆய்வுத் துறையினர் செய்யாத செயலை இம்மக்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள்; பழமையைக் காப்பாற்றுவதில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். உலகப் புகழ்வாய்ந்த சின்னமனூர்ச் செப்பேடும் இப்பகுதியைச் சேர்ந்ததுதான்.

மழைமேகங்கள் கூடி மழைப்பொழிவை உண்டாக்கும் கூடலூர் என்றும், கண்ணகி கோவலனுடன் மீண்டும் கூடிய ஊர் கூடலூர் என்றும் இப்பகுதி மக்கள் தங்கள் ஊரைப்பற்றிப் புகழ்ச்சியாகக் கூறுகிறார்கள். இக்கூடலூர், 15 நூற்றாண்டு வரை கேரள மன்னர்களின ஆட்சியின்கீழ் இருந்திருக்கிறது. இதற்குக் கல்வெட்டுச் சான்று கூடலூர் அழகர்சாமி கோவிலில் இருக்கிறது. பூஞ்சையாற்றுத் தம்பிரான் வகையினர் இக் கூடலூரை ஆட்சி செய்ததாகக் கூறப்படுகிறது. கி. பி. 1772-ஆம் ஆண்டு பூஞ்சையாற்றுத் தம்பிரான் ரவிவர்மாவுக்கும் மதுரையை ஆண்ட ராணி மங்கம்மாவுக்கும் எல்லைப்போர் மூண்டது. இப்போர் காட்டூர் என்றழைக்கப்படும் உத்தம பாளையத்தில் தீர்த்து வைக்கப்பெற்றது. இதற்குப் பின் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி முழுவதும் தமிழ் நாட்டைச் சேர்ந்தது என சேர மன்னர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

கம்பம் என்ற தொன்மையான ஊரைக் கொண்டுதான் இப்பள்ளத்தாக்கு கம்பம் என அழைக்கப்படுகிறது. இன்றைய கம்பத்தின் தெற்கேயும் கிழக்கேயும், அழிந்துள்ள ஏராளமான கோயில்கள் ஆங்காங்கே தென்படுகின்றன.

மறைந்த கம்பம் நகரை ஆண்ட அரசன் பெயர் பச்சிராஜா. அவன் பெயரால் அப்பகுதி பச்சிநகர் என்று அழைக்கப்பெற்றது. இவ்வரசரின் ஆட்சிக் காலம் 13.ஆம் நூற்றாண்டாகும்.

14-ஆம் நூற்றாண்டில் கெஞ்சையன் என்பவன் பச்சிமாங்குளம் எனும் பச்சிக்கரை ய ஆண்டான் என்று சொல்லப்படுகிறது. இவன் கன்னட வகுப்பைச் சேர்ந்தவன். பச்சிநகரின் மறுமலர்ச்சிக்காகப் பல சிறந்த தொண்டுகள் செய்துள்ளான். கெஞ்சையன் எனும் அரசன் பச்சிநகருக்கு கிழக்கே, சுமார் 1 பர்லாங்கு தூரத்தில் குளம் ஒன்று வெட்டினான். அதற்குக் கெஞ்சையன் குளம் என்று பெயர் ஏற்பட்டுள்ளது. இதைக் கன்னடத்தில் கெச்சிக்கரை என்று இன்று அழைக்கின்றனர்.

பச்சிநகரில் மக்கள் ஒழுக்கமுடன் வாழ்ந்ததாகத் தெரிகிறது. தவறு செய்தவர்களைக் கடுமையாகத் தண்டித்தார்கள். தவறு செய்தவர்களைத் தண்டிப்பதற்கென்றே தலைவனால் நிறுவப்பட்ட 12 அடி உயரமுள்ள கல்தூண் ஒன்று மட்டுமே பச்சிநகரில் இன்றும் உள்ளது.

இத்தூணைக் கம்பத்திலுள்ளவர்கள் தெய்வமாக வழிபடுகின்றனர். இதனால்தான் இப்போது, இவ்வூர் கம்பம் என்று அழைக்கப்படுகிறது போலும். பச்சிநகருக்கு மேற்கே சுமார் 11 கி.மீ தூரத்தில் கம்பம் எல்லை இப்பொழுதும் இருக்கிறது. கம்பம் எல்லையில் இன்றும் கோயில் உள்ளது. இன்றைய கம்பத்துக் கவுண்டர்கள் திருவிழா போன்றவை நடத்தினால், அந்தக் கோயிலுக்குச் சென்று வணங்கி வருவது உண்டு. இதை முன்னோர் வழிபட்ட முறையில் வழிபட்டுவருகின்றனர்.

உத்தமபாளையம் முஸ்லீம் மக்கள் மிகுதியாக வாழும் ஊர். இவர்களனைவரும் லெப்பை முஸ்லீம் என்று அழைக்கப்படும் ராவுத்தர்களே ஆவர். மற்ற இனத்தாரோடு தாய் பிள்ளைகளாகப் பழகும் பண்பினர்.

கம்பம் பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதி வருசநாட்டுப் பகுதி என்று சொல்லப் பெற்றது. இவ்வருச நாட்டுப் பகுதி, கண்டமனூரிலிருந்து தொடர்கிறது. தேனி-மதுரைச் சாலையில் உள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலைக்கு அருகிலிருந்து பிரிந்துசெல்லும் சாலை கண்டமனூரிலிருந்து வருசநாடு வரை செல்கிறது. வருசநாடு வரைதான் பேருந்து வசதி உள்ளது. அதன்பின் மலையடிவாரத்திற்கு-தென்பகுதி மலையடிவாரத்திற்குக் கால் நடையாகச் செல்ல வேண்டும்; இவ்வாறு 20 கி. மீ வரை செல்ல வேண்டும். அவ்வாறு சென்றால் வையை மலைமீது ஏறும் இடம்

வருகிறது. இது பொம்மக்காள் கடை என்று அழைக்கப் பெறும் பகுதி;செங்குத்தான மலைமீது வையை இப்போது ஏறு கிறது; மேலே பாலாறு ஓடங்கல் என்று அழைக்கப்பெறும் பகுதி வருகிறது. இங்கு மலையிலிருந்து ஐந்து ஓடை வழியாக தண்ணீர் வந்து சேருகிறது. இவ்வாறு சேர்ந்த பகுதியான பாலாறு ஓடங்கலிலிருந்துதான் வைகை நதி கிளர்ந்து ஓடி வருகிறது.

பாலாறு ஓடங்கலிலிருந்து தென்மேற்குப் பகுதியான சந்தனக்காவிற்குச் செல்லலாம்; இங்கிருந்து வெள்ளிமலை என்று அழைக்கப்படும் பகுதி, சுருளி மலைத்தொடரின் மறுபக்கமாகிய கீழ்ப்பகுதியில் இருக்கிறது. இந்த வெள்ளிமலையில்தான் அமெரிக்கருக்குப் பாத்தியப்பட்ட தேயிலை எஸ்டேட் உள்ளது. இதன் வடபகுதியில் உள்ளது பச்சை காமாட்சி என்னும் மலைப் பகுதி; இங்கிருந்து கம்பம் பள்ளத்தாக்கைச் சேர்ந்த சின்ன மனூர்க்குச் செல்லலாம்; பேருந்து போக்குவரத்து உண்டு.

வருசநாட்டுப் பகுதியில் உள்ள முதல் ஊர் கண்டமனூர். இவ்வூரை ஒட்டாது, தொலைவில் மேற்காக வைகை ஓடி வருகிறது. இவ்வைகை குன்னூருக்குத் தெற்கே அமச்சியா புரத்திற்குப் பக்கத்தில் முல்லையாற்றோடு இணைந்து கிழக்கு முகமாக ஓடுகிறது.

இவ்வைகை வருச நாட்டுப் பகுதியில் வருச நாட்டு ஊரை ஒட்டியே ஓடி வருகிறது. வெள்ளப்பெருக்கிட்டு ஓடிவரும் போது ஊருக்கு அடிக்கடி சேதம் ஏற்படுவது வழக்கமாகி வருகிறது; அடுத்து மயிலாடும் பாறைக்குப் பக்கத்திலே ஓடி வருகிறது. இங்கு மூங்கிலாறு என்றுசொல்லப்படும் ஓடையும் வைகையோடு சேர்கிறது. இப்பகுதி முழுவதும்- மயிலாடுபாறை, வருசநாடு பகுதிகள் முழுவதும்- தோட்டங்கள் நிரம்பியவை; பல பண்ணை கள் தனிப்பெரும் முதலாளிகளுக்குப் பாத்தியப்பட்டவைகளாக இருக்கின்றன. வளமையான பகுதிகள். இப்பகுதிகள் முன்பு மலையடிவாரம் வரை கண்டமனூர் ஜமீனுக்குச் சொந்தமாக இருந்தவை. இப்போது தனிப்பட்டவர்களுக்குச் சொந்த மாயிருப்பவை.

மயிலாடும்பாறையிலிருந்து கண்டமனூர்க்கு இடையிலுள் ளது கடமலைக்குண்டு. இதுவும்வளமையான பகுதிதான். இது வரை உள்ள வருச நாட்டுப் பகுதிகள் செழுமையானவை. வருசநாட்டுத் தென்பகுதியில் மலையில் மலைத்தோட்டப்பயிர் கள் பயிரிடப்படுகின்றன. கடமலைக்குண்டிலிருந்து மலைச் சாலை வெள்ளி மலைக்குச் செல்கிறது. ஆனால், வெள்ளிமலை

எஸ்டேட்டுக்குச் செல்லும் வாகனங்களின் பாதையாகவே இருக்கிறது.

பல்வேறுபட்ட இனத்தவர்கள்-கவுண்டர், நாயக்கர், தேவர் போன்ற இனத்தவர்கள் இங்கு வாழ்கிறார்கள்; கடினமான வேலையைச்செய்யும் பாட்டாளிகள். முழுக்கமுழுக்க விவசாயத்தை நம்பி வாழும் மக்கள். வருசநாட்டுப்பகுதியிலிருந்து மதுரைக்குக் காய்கறிகள் நாள் தோறும் வருகின்றன. இவ்வருசநாட்டுப்பகுதி மக்கள் கம்பம் பள்ளத்தாக்கிலிருந்து வந்தவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே கம்பம் பள்ளத்தாக்கு மக்களும் உறவினர் போன்று இருப்பவர்கள். சுருளி மலையான நெடுவேள் குன்றத்தின் ''நாணயம்'' போன்ற பகுதிகள் தாம் கம்பம் பள்ளத்தாக்கும் வருசநாடும்.

ஆக, கம்பம் பள்ளத்தாக்கு என்பது மங்கலதேவி மலைக்கும் சுருளி மலைக்கும் பழனிமலைத்தொடரின் தொடர்ச்சியாகிய குமுளி மலைக்கும் இடைப்பட்ட பகுதியாகும் என்பது பெறப்பட்டது. ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆள வந்தவுடன்தான் இப்பகுதி தனிக்கவனம் செலுத்தப்பட்ட பகுதியாகிறது. அவர்கள்தாம் இப்பகுதியைக் கம்பம் பள்ளத்தாக்கு என்று அழைத்ததும்தெரிகிறது; இப்பகுதி மக்கள் கடினமான உழைப்பாளிகள் என்பதும் பழமையைப் போற்றிக் காக்கவேண்டும் என்ற நாட்டமுடையவர்கள் என்பதும் தெரிகின்றன.

# 4. கம்பம் பள்ளத்தாக்கின் திராவிடத் தெய்வங்கள்

கம்பம் பள்ளத்தாக்கு விரிவான பூமி; அப்பகுதியிலுள்ள எல்லா ஊர்களிலும் உள்ள நாட்டுப்புறத் தெய்வங்களைக் குறிப்பிட்டுக் கூறமுடியாது; ஆகவே விரிவஞ்சி, வசதிக்காக, கூடலூர், கம்பம் ஆகிய ஊர்களிலும் மலைப்பகுதியிலுமுள்ள நாட்டுப்புறத் தெய்வங்கள் இங்கு விளக்கப்படுகின்றன.

கம்பம் பள்ளத்தாக்கில் பெரும்பாலும் பெண் தெய்வங்களே மிகுதியான அளவில் காணப்பெறுகின்றன; ஆண் தெய்வங்கள் இல்லையென்றே கூறிவிடலாம்; ஆனால் சமீப காலங்களில் தான் ஆண் தெய்வங்கள் இப்பகுதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கோயில் கொண்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் அய்யனார், கோயில் இல்லாது இருக்காது; அவர்தான் ஊர்த் தெய்வமாக-காவல் தெய்வமாகப் போற்றி வணங்கப்படுவார். அதற்கடுத்த நிலையில் கருப்பசாமிக்கு இடமுண்டு. தனிக்கோயிலாகக் குடிகொள்ளாவிட்டாலும் முன்னோடியாக வாவது இருப்பார். ஆனால் இவ்விரண்டு தெய்வங்களுக்கும் இப்பகுதியில் வேலை இல்லை. அய்யனார் அடியோடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறார். இதற்குக் காரணம் என்ன? இது ஆராயப்பட வேண்டியதாகும்.

நீலகிரியில் பழங்குடி மக்கள் பெண் தெய்வத்தை அம்மனார் என்றும் ஆண் தெய்வத்தை அய்யனார் என்றும் அழைக்கின்றனர். அய்யனார் என்பது அப்பகுதியில் குறிப்பிட்ட ஆண் தெய்வத்திற்குப் பெயராக இல்லை; பொதுப் பெயராக-ஆண் தெய்வங்களுக்குப் பெயராக இருக்கிறது. இந்த அடிப்படையில் தான் கம்பம் பள்ளத்தாக்கிலும் அய்யனார் சாமி இல்லாது இருக்கவேண்டும். பொதுப்பெயராகவே அய்யனார் இருந்திருக்க வேண்டும்; ஆண் தெய்வங்கள் இல்லாததனால் அப்பெயரும் இங்கு இல்லாதிருந்திருக்க வேண்டும். கம்பம் பள்ளத்தாக்கும்

மலைசூழ்ந்த பகுதி; ஆகவே நீலகிரி போன்று இங்கும் தெய்வப் பாகுபாடு இருந்திருப்பதாகக் கொள்ளலாம்.

ஆண் தெய்வம் குறைவாகவும் பெண் தெய்வம் மிகுதியான அளவிலும் இருக்க வேண்டிய காரணத்தை அறியவேண்டும். எப்போதும் வளமைக்குப் பெண்மையைத்தான் தெய்வமாக்கு வார்கள். தென்னார்க்காட்டில் உள்ள ஊர்களில் வயல்களில் விளைச்சல் மிகுதிக்காக வயல்வெளிகளில் ஆண்பெண் உடலுறவு கொள்ளச் செய்வதாக கூறுகிறார்கள்; (கே. பழமலை15-6-1985) இங்கும் கூட, புதிய வீடு கட்டி முடிக்கத் தடங்கல் ஏற்பட்டால் அத்தகைய உடலுறவு கொள்ளச்செய்வார்கள்; இது ஒரு நம்பிக்கை. இந்த முறையில்தான் பெண் தெய்வங்கள் விவசாயக் கடவுளாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும். போருக்குத்தான் ஆண் தெய்வங்கள். ஆரிய தெய்வங்கள்-இந்துத்தெய்வங்கள் எல்லாம் ஆண்களாகவும், திராவிடத் தெய்வங்கள் எல்லாம் பெண் தெய்வங்களாகவும் இருப்பதற்கு இதுதான் காரணமாகும்.

கம்பம் பள்ளத்தாக்கு வளமையான பூமி; மலைப்பகுதி. ஆகவே பெண் தெய்வங்களையே மிகுதியான அளவில் கொண்டா டுகிறார்கள். பழங்குடியினராகிய பழியரின் இனத்தெய்வம் பழிச்சியம்மனாகும். இப்பழிச்சியம்மனின் மக்கள் ஏழுபேர்; இவ்வேழுபேரைத்தாம் பழியர் கன்னிமார் என்று வணங்கி வரு கிறார்கள். இவர்களும் வளமைக் கடவுளர்களே. மலையின் வளமைக்காக இவர்கள் வணங்கப்படுகிறார்கள். இன்றும் கம்பம் பள்ளத்தாக்கில் வயல்களிலும், ஏலத்தோட்டங்களிலும் அறுவடையின் போதும் நாற்று நடும்போதும் இக்கன்னிமார் தெய்வங்களை வணங்கி வருகிறார்கள்; ஏழு கல்லை வைத்து தோட்டங்களில்-வயல்களில் வழிபடுகிறார்கள். ஆகவே கம்பம் பள்ளத்தாக்கில் வளமை நோக்கிலே பெண் தெய்வங்கள் மிகுதி யான அளவில் வணங்கி வழிபடப் பெறுகின்றன.

இனி, இப்பகுதியிலுள்ள நாட்டுப்புறத் தெய்வங்களை— திராவிடத் தெய்வங்களைக் காணலாம்.

## பெண் தெய்வங்கள்

### கன்னிமார்

இது கூடலூர் குமுளிச் சாலையில் மேல்நிலைப் பள்ளிக்குத் தெற்கில் உள்ள கோவிலாகும். கற்சிலை இருக்கிறது. கவுண்டர் இதற்குப் பூசாரியாக இருக்கிறார். வளமைத் தெய்வமாகப் போற்றப் பெறுகின்றது.

## காமாட்சியம்மன்

காமாட்சியம்மன் கோவில் கூடலூரில் இரண்டும், கம்பத்தில் ஒன்றும் உள்ளது. கூடலூரில் ஊரின் மத்தியில் இருக்கும் கோயிலுக்குப் பூசாரியாக நாயக்கர் இருக்கிறார்.

பூஞ்ஞையாற்றுத் தம்பிரான் என்று சொல்லப்படும் ஜமீன் வகையறாக்களுக்குப் பாத்தியப் பட்ட கோயிலாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. முதலில் சிலை இல்லாது சூலம் மட்டும் வைக்கப்பட்டிருந்தது. அப்போது ஒரு படப்படியில் தான் இக்கோயில் இருந்தது. இப்போது சுற்றுச் சுவர் எழுப்பப் பட்டிருக்கிறது. கல்சிலை இருக்கிறது. பலி கொடுக்கப்படு கிறது (வி. இராமச்சந்திரன்.)

ஆசாரிகளுக்குப் பாத்தியப்பட்ட காமாட்சியம்மன் கோவிலும் கூடலூரில் இருக்கிறது. இதற்குப் பூசாரி ஆசாரியார்தான் இருக்கிறார். பொங்கல் வைத்து மாவிளக்கு, முளைப்பாரி எடுத்து வழிபடுகிறார்கள்.

கம்பத்திலுள்ள காமாட்சியம்மன் கோவில் ஆசாரிகளுக்குப் பாத்தியப்பட்டதுதான். காமாட்சியம்மன் ஆசாரிகளுக்கு—பொற்கொல்லர்களுக்கு இனத் தெய்வம் போன்றிருக்கிறது. காமாட்சியம்மன் கம்பத்தில் பிள்ளை இனத்தாரில் ஒரு பிரிவினருக்குக் குல தெய்வமாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. (இரா. கணபதிராசன் 10-8-85).

## மாரியம்மன்

இக்கோயில் கூடலூரிலும் கம்பத்திலும் இருக்கிறது. கூடலூரில் கட்டடம் கட்டப்பட்டக் கோயிலாக இருக்கிறது. வெறும் கல்தான் சிலையாக இருக்கிறது; நாகம் பக்கத்திலிருக்கிறது. இங்கு பலியிடப்படுகிறது. பண்டாரம் இதற்குப் பூசாரி. இது கூடலூர் மக்களுக்குப் பாத்தியப்பட்ட கோவிலாகும்.

கம்பத்திலுள்ள கோவிலும் எல்லா இனத்தாரும் சென்று வழிபடும் கோவிலாக இருக்கிறது. ஆனால் நிர்வாகப் பொறுப்பு பிள்ளை இனத்தாரிடம் இருக்கிறது. இதற்குப் பூசாரி பிள்ளை தான்.

## அங்காளம்மன்

இக்கோவில் கூடலூரில் இருக்கிறது. கற்சிலை வண்ணம் பூசப்பட்டிருக்கிறது; இதற்குப் பூசாரியாகப் பண்டாரம் இருந்திருக்கிறார்; இப்போது அவர் வருவதில்லை. பிள்ளை இனத்தா

ரின் குல தெய்வமாக இருப்பதால் பிள்ளை இனத்தைச் சார்ந்தவரே பூசாரியாக இருக்கிறார். பலிகொடுத்து வழிபடுகிறார்கள். மாசிமாதம் பொங்கல் கொண்டாடப்படுகிறது; அதுவும் சிவராத்திரி யன்றுதான் வழிபாடு.

இரவு 12 மணிக்கு வழிபாடு நடத்தும்போது காவு கொடுக்கிறார்கள். ஆட்டுக்கிடாயின் இரத்தத்தை மண் கலயத்தில் எடுத்துச் சோற்றுத் திரளையில் பிசைந்து, அதை வீசுவார்கள். மசானம் கருப்பசாமி, அக்னி வீரபத்திரன் போன்ற சாமிகளின் பெயரைச் சொல்லி மசானத்திற்குச் சோற்றுத்திரளை எறியப்படுகிறது. உறவினர்கள் எல்லோரும் அங்கேயே சோற்றைச் சாப்பிட்டுவிட்டுப் பொழுது விடிவதற்குள் வீட்டிற்கு வந்துவிடுவார்கள். வழிபாட்டின்போது 21 பந்தி போட்டுத்தான் பூசை நடத்துகிறார்கள்; 5 நாள் திருநாளில் கடைசி நாளில்தான் பலி கொடுப்பது வழக்கம். இத் தெய்வத்தை வணங்குபவர்கள் அங்கணன், கேணை, மாசானம் என்று பெயர் வைத்துக் கொள்கிறார்கள் (எஸ். இராஜமாணிக்கம், 15-7-1985.)

## முத்தாலம்மன்

முத்தாலம்மன் கோவில் கூடலூர், கம்பம் ஆகிய இரண்டு ஊர்களிலும் இருக்கிறது. இதற்குப் பூசாரி குயவர்; அன்றே பிறந்து அன்றே அழியக்கூடிய தெய்வமாகப் போற்றப்படுகிறது. சிலை ஒன்றும் கோயிலில் இருக்காது. பொங்கல் வைத்து வழிபடும் போது மண்சிலை செய்துவைப்பார்கள்; பொங்கல் முடிந்தவுடன் சிலையை நீர்த்துறையில் வைத்துவிடுவார்கள். (இரா. கோவிந்தராசன், 17-8-1985).

கம்பத்தில் முத்தாலம்மனை எல்லா இனத்தாரும் வழிபட்டு வந்தார்கள். இப்போது கவுண்டர்கள் மட்டும் வழிபடுகிறார்கள். இதற்குப் பூசாரியாகக் குயவர் இருக்கிறார்.

## சவுடம்மன்

சவுடம்மன் கோவில் கூடலூர் காந்திக் கிராமத்தில் இருக்கிறது. இது தேவாங்கச் செட்டியார்களின் இனத்தெய்வமாகும். இவர்கள் கன்னட மொழி பேசக் கூடியவர்கள். இக்கோயிலின் பூசாரியாக தேவாங்கச் செட்டியாரே இருக்கிறார். குறிகேட்டுத்தான் பொங்கல் வைக்கிறார்கள். பொங்கல் நடக்கும்போது எல்லோரும் சைவமாகவே இருப்பார்கள். (இரா. கணபதிராசன், 10-8-1985.)

## காளியம்மன்

இத் தெய்வக் கோயில் கூடலூர், கம்பம் ஆகிய ஊர்களில் இருக்கிறது. கூடலூரில் குத்துக்கல்தான் சிலையாக இருக்கிறது. அதற்கு முன் சூலம் குத்தப்பட்டிருக்கிறது. இது கம்பளத்து நாயக்கருக்குப் பாத்தியப்பட்ட கோயிலாக இருக்கிறது; அச் சாதியைச் சேர்ந்தவரே இதற்குப் பூசாரியாக இருக்கிறார். சித்திரை மாதத்தில் செவ்வாய்க் கிழமை பெரிய கும்பிடுஎன்கிற பொங்கல் நடத்துகிறார்கள்; புதன் கிழமை கிடா வெட்டுகிறார்கள். கூடலூரின் வடக்கு எல்லையில் எல்லாச் சாதியினரும் வணங்கும் காளியம்மன் கோயிலும் உள்ளது.

கம்பத்தில் மூன்று காளியம்மன் கோயில்கள் இருக்கின்றன. சாதிக்கொரு கோயிலாக இருக்கிறது. ஒட்டர் என்று சொல்லக் கூடிய போயமாருக்குப் பாத்தியப்பட்ட கோயில் ஒன்று; இதற்குப் பூசாரி ஒட்டர். சோளியச் செட்டியாருக்குப் பாத்தியப் பட்டக் கோயிலில் சோளியச் செட்டியார் பூசாரியாக இருக் கிறார். மறவர்களுக்குப் பாத்தியப் பட்ட கோயிலை முன்பு எல்லோரும் வணங்கிவந்தார்கள்; ஆனால் இப்போது மறவர் கள் மட்டும் வழிபட்டு வருகிறார்கள். கோயிலில் சிலை இல்லாது சூலம் மட்டும் வைத்திருக்கிறார்கள். அருகில் மூணுசாமிக் கோயில் இருக்கிறது. மூணுசாமி கருமாத்தூரில்தான் முதன்மை யாகக் கொண்டாடப்படுகிறது. இத்தேவர்கள் அப்பகுதியி லிருந்து இங்கு வந்து குடியேறியவர்களாதலால் மூணுசாமியைக் கம்பத்தில் பிடிமண் கோயிலாக வைத்து வழிபடுகிறார்கள்.

## ஜக்கம்மாள்

ஜக்கம்மாள் கோயில் கூடலூரில் உள்ள கோயிலாகும். கம்பளத்து நாயக்கர்களின் இனத்தெய்வமாகும். இக்கோயில் வழிபாட்டின்போது தேவராட்டம், சேவையாட்டம் என்ற நாட்டுப்புற ஆட்டங்களை ஆடுகிறார்கள். உறுமி தாளத்திற்குத் தக்கபடி ஆடுவது தேவராட்டம்; வெறும் ஆட்டம் மட்டும்தான். 24 வகையாக ஆடுவார்கள். ஆனால், பாட்டோடு கூடிய ஆட்டம் சேவையாட்டம் என்று கூறப்படுகிறது.

## துர்க்கையம்மன்

கூடலூரில் எல்லா இனத்தாரும் வழிபடும் தெய்வமாக இருக்கிறது.

## பகவதியம்மன்

பகவதியம்மன் கோயில் கூடலூரிலும் கம்பத்திலும் இருக் கிறது. கூடலூரில் குமுளிக்குச் செல்லும் சாலையில் குருவனூத்

ணைச் சார்ந்த பகுதியில், இக்கோயில் இருக்கிறது. இக்கோயில் மிகப் பழமையானது. இதற்குப் பூசாரியாகக் கவுண்டர் இருக்கிறார்; ஆனால், இதுஎல்லா இனத்தாரும் வழிபடும் கோயிலாக இருக்கிறது. வழிபாட்டின் போது பலி கொடுக்கப்படுகிறது.

இதை நெல்லூர் பகவதி என்றும், மலையாளப் பகவதி என்றும் கூறுகிறார்கள். இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெலுங்கு, கன்னடம் பேசக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் ஆந்திர நாட்டிலிருந்து வந்தவர்களாதலால் உடன்கொண்டு வந்த தெய்வத்தை நெல்லூர் பகவதி என்று அழைத்திருக்கலாம். மலையாள நாட்டு மன்னன் ஆதிக்கத்தின் கீழ், கூடலூர் இருந்திருக்கிறது. ஆகவே மலையாளப் பகவதி என்று அழைத்திருக்கலாம். கூடலூர் அழகர் கோயில் கல்வெட்டில், இக்கோயில் நடைக்கல் பகவதி என்று அழைக்கப்பட்டிருக்கிறது. தம்பிரான் இக்கோயிலுக்கு மானியம் விட்டதாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது.

பெரியாறு நீர்மின் திட்டப் பகுதியைச் சேர்ந்த மக்கள்தாம் இக்கோவிலைச் சிறப்பாக வழிபடுகிறார்கள்.

கம்பத்தில் இக்கோயில் எல்லா இனத்தாரும் வழிபடும் கோயிலாக இருக்கிறது. ஆனால், குயவர் இனத்தார்தாம் சிறப்பாக வழிபடுகிறார்கள். குயவர் பூசாரியாக இருக்கிறார். (காமராஜ், 18-8-1985).

## முத்துமாரியம்மன்

இக்கோயில் சுருளியாறு நீர்மின்திட்டப் பகுதியில் இருக்கிறது. முன்பு காட்டுக்குள் இருந்தது; இப்போது இதை இன்றையக் கோயில் பகுதிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இக்கோயிலில் வழிபடுகிறார்கள். பெரிய கும்பிடு பங்குனி மாதம் நடக்கும். அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் குறி சொல்லுவார்கள்; பெண் சாமியாடிதான் குறி சொல்லுகிறாள்; குறி சொல்லும்போது அன்னதானம் கொடுக்க வேண்டுகோள் விடுவது உண்டு. ஆகவே பக்தர்களுக்கு விருந்துபச்சாரம் நடக்கிறது.

இக்கோயிலுக்கு அருகே வெளியில் நாகதேவதை, மகராசி, ராஜேஸ்வரி கோயில்கள் உள்ளன. கறுப்பசாமி, சடையாண்டியப்பன் கோயில்கள் ஆலமரத்தடியில் உள்ளன.

## மதுரைவீரன்

கூடலூரில், மங்கலியர் என்று கூறப்படும் மருத்துவர்கள் வணங்கும் கோயிலாக இருக்கிறது. இது குலதெய்வக்கோயில்;

பூசாரி மருத்துவர். குத்துக்கல்தான் சிலை. ஆனால், கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இவர்கள் மதுரையிலிருந்து இங்குக் குடியேறியவர்கள் (பெருமாள் 13. 8. 1985)என நம்பப்படுகிறது.

## இராசாத்தியம்மன்

கூடலூரில் தெருவில் வேப்பமரத்தடியில் கல்சிலையோடு இத்தெய்வக்கோயில் இருக்கிறது. கட்டடம் இல்லை; தனித்து பூசாரி இல்லை. எல்லா இனத்தாரும் வழிபடுகிறார்கள். ஆடு, கோழி பலிகொடுத்துக் கும்பிடு நடத்துகிறார்கள்.

## கன்னிக்காளியம்மன்

கூடலூரில் சாலைக்கு மேற்புறம் உள்ளது கன்னிக்காளிபுரம். இங்கு இக்கோயில் உள்ளது. எல்லா இனத்தார் வழிபடும் கோயிலாக இருந்தது. அண்மைக் காலமாக நாயுடு வகுப்பார் சிறப்பு வழிபாடு நடத்துகிறார்கள்.

## மகராசியம்மன்

கூடலூரில் கவுண்டர் வழிபடும் கோயில் ஒன்றும், பிள்ளைமார்கள் வணங்கும் கோயில் ஒன்றும் உள்ளன. சுருளிமலையிலும் மகராசியம்மன் உண்டு. அதனால் அது மகராசி மலை என்றே அழைக்கப்படுகிறது.

## வீருநாகம்மாள்

கவுண்டரில் ‘பசிலார் கும்பு, வழிபடும் கோயில் தான் வீருநாகம்மாள்.

## மந்தையம்மன்

கூடலூரிலும் கம்பத்திலும் மந்தையம்மன் கோயில் உண்டு இரண்டு நாட்கள் கும்பிடு நடத்துகிறார்கள். கூடலூர் கோயிலுக்குச் சலுப்பச் செட்டியார் பூசாரி; கம்பத்துக் கோயிலுக்கு மறவர் பூசாரி. புரட்டாசி மாதம்தான் பெரிய கும்பிடு நடத்துகிறார்கள்; ஆடு பலி கொடுக்கிறார்கள். விழா முடிந்தவுடன் சிலையை நீர்த்துறையில் வைத்துவிடுகிறார்கள் (மூ. சரஸ்வதி, 15-8-1985).

## பட்டாளம்மன்

பட்டாளம்மன் கோவில் கம்பத்தில் இருக்கிறது. மாதாரி என்று கூறப்படும் சக்கிலியருக்குப் பாத்தியப்பட்ட இனத் தெய்வக் கோயிலாகும். பூசாரி சக்கிலியர்தான் இருக்கிறார். இக்கோயிலில் பலி கொடுத்து வழிபடுகிறார்கள். ஆனால், குறிப்

பிட்ட மாதத்தில் கும்பிடு நடத்துவது இல்லை. சக்திக் கடா வெட்டி வழிபடுகிறார்கள்.

### செல்லாண்டியம்மன்

குடும்பர் இனத்தார் வழிபடும் கோயிலாகக் கம்பத்தில் இருக்கிறது. இது குல தெய்வக் கோயிலாகும். குடும்பர்தான் கோயில் பூசாரி.

### பிளாக்கம்மன்

கம்பத்தில் உள்ள கோயிலாகும் இது. இப்பகுதியில் இப் பெயரையுடைய கோயில், இது ஒன்றுதான். பிளாக் (Plague) நோய் வராது இருப்பதற்காக இது வழிபடப்படுகிறது. முன் காலங்களில் அதிகமாக நோய் இவ்வட்டாரத்தில் பரவியதால் இத்தெய்வத்திற்கு முதன்மை கொடுத்து வழிபட்டார்கள். ஆனால், இப்போது இந்த நோயும் வருதில்லை; இதற்கு வழிபாடும் நடத்துவதில்லை.

வீரபாண்டிக்கோயிலுக்குப் போகும்போது மட்டும் இதை வணங்குகிறார்கள்.

### சாமாண்டியம்மன்

கம்பத்தில் பிள்ளைமார்களுக்குப் பாத்தியப்பட்ட கோயி லாக இது இருக்கிறது. வயலுக்குப் போகிறவர்கள் இதை வழி படுகிறார்கள். கம்பராயரின் தங்கையாகச் சொல்லுகிறார்கள். அண்ணனிடம் கோபித்து வந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இதற்குப் பலி உண்டு (காமராஜ், 18.8.1985).

### திம்மக்கம்மாள்

ஒக்கலியர்க்குப் பாத்தியப்பட்ட கோயில். கம்பத்தில் உள்ளது. தேள் போன்ற நச்சு உயிரினங்கள் தீண்டாது இருக்க இக்கோயில் வணங்கப்படுகிறது.

### கோணியம்மன்

கோணியம்மன் ஒக்கலியர் (கவுண்டர்) வணங்கும் தெய்வம். சூலம்தான் கோயிலின் அடையாளம்; அதுதான் தெய்வச் சிலையின் அம்சமாக இருக்கிறது.

## ஆண்தெய்வங்கள்

### கம்பராயர்

கம்பத்திலுள்ள கோயிலாகும் முன்பு திராவிடத் தெய்வமாக இருந்திருக்க வேண்டும். இது இப்பொழுது ஒரு வைணவக் கோயிலாக ஆக்கப்பட்டிருக்கிறது. கம்பம்-பலியிடுவதற்கு உள்ள அடையாளக் கம்பமாக இருந்திருக்க வேண்டும். காலப் போக்கில் வைணவக் கோயிலின் முன்னுள்ள கம்பமாக மாற்றப்பட்டு கிருஷ்ணன் கோயிலாக்கிவிட்டார்கள்.

இப்போது இக்கோயில் இந்து அறநிலையத்துறையிடம் இருக்கிறது. இதற்குப் பூசாரி ஐயர் ஆவர்.

### கருப்பசாமி

கூடலூரில் உள்ள தெய்வம். இத்தெய்வக் கோயில் இன்று கோனார்களின் குலதெய்வக் கோயிலாக இருக்கிறது. கன்னிமார் கோயில் உள்ள இடத்தில்தான் இக்கோயில் உள்ளது. வெளியூர்களிலிருந்து கோனார் இனத்தவர்கள் இதற்குச் சிறப்பு வழிபாடு நடத்துகிறார்கள். சிலை உண்டு.

ஓட்டைக் கோயில் என்று அழைக்கப்படும் கருப்பசாமிக் கோயில் வழிப் போக்கர்கள் வழிபடும் கோயிலாக இருக்கிறது. இவையெல்லாம் சமீப காலங்களில் ஏற்பட்ட கோயில்களாகும்.

### அழகர்சாமி கோயில்

கூடலூரில் உள்ள கோயில்; ஐயர் இதற்குப் பூசாரியாக உள்ளார். இதற்கு பூஞ்ஞையாற்றுத் தம்பிரான் காலத்தில் மானியம் அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது. இக் கல்வெட்டின் மூலம் பல கோயில்களுக்கு மானியம் கொடுக்கப் பட்ட செய்தி தெரியவருகிறது. மங்கலதேவிக் கோயிலுக்கும் நிவந்தம் அளிக்கப்பட்ட செய்தி இருக்கிறது. பூஞ்ஞையாற்றுத் தம்பிரான் கேரள மன்னன்.

இது ஒரு குலதெய்வக் கோயிலாக இருந்திருக்கிறது. சலுப்பச் செட்டியார்களின் குல தெய்வக் கோயில்; அழகர்சாமி என்பவர் குல முன்னோர்; அவர் தெய்வமானதைக் கொண்டு வழிபாடு நடந்து வந்திருக்கிறது. அழகர்சாமி என்றவுடன், காலப்போக்கில் மதுரை அழகரோடு தொடர்புப்படுத்தப்பட்டிருக்கிறார். அந்த அழகரே, குலதெய்வமாக இருந்து திருமலை நாயக்கரால் வைணவக் கடவுளாக ஆக்கப்பட்டிருந்தார். ஆகவே, இந்த அழகர்சாமியும் அவதாரக் கடவுளாக்கப்பட்டு

விட்டார். ஆகவே, சித்திரைப் பௌர்ணமிக்கு இங்கும் திருவிழா நடத்திவிட்டார்கள்; இப்போதும் நடத்தி வருகிறார்கள். (ரெங்கநாதன், 15-7-1985)

சித்திரைப் பௌர்ணமிக்கென்று பேயத்தேவரால் ஒரு அறக் கட்டளை நிறுவப்பட்டு இன்றும் நடந்து வருகிறது; அன்றைய செலவுகளை இவ்வறக்கட்டளை ஏற்றுக் கொள்கிறது; இதற்குத் திரு. ரெங்கநாதன் (பேயத்தேவரின் பேரன்) முதன்மையாக இருந்து கவனித்து வருகிறார். இந்தப்பேயத்தேவர்தான் முஸ்லீம் மதத்தினருக்கும் மொகரம் பண்டிகைக்காக ஓர் அறக் கட்டளை நிறுவியவர். சமுதாய ஒற்றுமைக்காக இவ்வாறு பாடு பட்ட பேயத்தேவர் வாழ்ந்த ஊர் இன்று சமூதாய-சாதிச்சண் டைகளால் அல்லல்படுகிறது.

## குன்றி வீரப்பன்

இக்கோயில் கூடலூர் பகவதியம்மன் கோவிலுக்குப் பக்கத் தில் உள்ளது. முன் காலத்தில் சிறப்பான வழிபாடு நடந்துவந்து இன்று அப்போதைக்கப்போது வழிபட்டு வருகிறார்கள். எல்லாச் சாதியினரும் வணங்கி வருகிறார்கள். மலைக்கு விறகுவெட்டப் போகிறவர்கள் இப்போதும் இதை வணங்கிவிட்டுத்தான் போகி றார்கள். அழகர்சாமி கோயில் தம்பிரான் கல்வெட்டு குறிப்பி டும் பெரியாற்று மலையாஊ சாஸ்தான் குன்றி வீரப்பனாகவே இருக்க வேண்டும்.

## வடமலை மொட்டையாண்டி

கம்பத்திலுள்ள இக்கோயில், சேர்வை இனத்தாருக்குப் பாத்தியப்பட்ட கோயிலாக இருக்கிறது. இது குலதெய்வக் கோயில் போன்று இருக்கிறது.

## வேலப்பர்

கம்பத்தில் வேலப்பர் கோயில் இருக்கிறது. இக்கோயிலுக் குத் திருப்பணி நடந்துவருகிறது. இக்கோயிலில் கல்வெட்டு இருக் கிறது. இங்கிருந்துதான் உற்சவ மூர்த்தி சுருளி வேலப்பர் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இக்கோயிலின் பரம் பரை பூசாரியாக ஆசாரி இனத்தவர் இருக்கிறார் (ஜோதிமணி, 18-8-1985).

கம்பத்திலிருந்து உற்சவமூர்த்தி சுருளிக்குச் செல்வது இப் போது தடைபட்டிருச்கிறது; கம்பராய கோயிலிலிருந்து செல்கிறது. இந்து அறநிலையத்துறை சுருளி கோயிலை எடுத்துக் கொண்டு, கம்பம் வேலப்பர் கோயில் பூசாரிக்கு உரிமை இல்லாது

ஆக்கிவிட்டார்கள். ஆகவே, இதை எதிர்த்துக் கம்பம் வேலப்பர் கோயில் பூசாரி நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

**சாஸ்தா**

கம்பத்திலுள்ள சலுப்பச் செட்டியார்களுக்குப் பாத்தியப் பட்ட கோயில்; இது இவர்களுடைய குல தெய்வமாகும். செட்டியார்தான் இதற்குப் பூசாரி. கம்பம் பள்ளத்தாக்கில் ஒக்கலியக் கவுண்டர்கள் மிகுதியான அளவில் வாழ்கிறார்கள். இதைப்பற்றிய செய்தி முன்னைய பகுதியில் கூறப்பட்டது. இக்கவுண்டர்கள் மதுரை மாவட்டத்தில் கம்பம், கூடலூரில் தான் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் 48 கும்புகளாகப் (கிளை) பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய ஒவ்வொரு கும்புக்கும் ஒரு தெய்வம் உண்டு. இத்தெய்வங்களின் கோயில்கள் வேறு பக்கங்களில் இருந்தால், இங்கு பிடிமணி கோயில் இருக்கும்; கம்பத்திலே மூலக் கோயில்கள் இருக்கின்றன.

இவர்கள் கால்நடைச் செல்வத்தில் நாட்டமுள்ளவர்கள்; அதே தொழிலைச் செய்து வந்தவர்கள். ஆகவே, சமுதாய அமைப்பை இக்கட்டிலிருந்தே தொடங்கி வைக்கிறார்கள். மாட்டுத்தொழுவந்தான் அவர்களின் பொது அமைப்பு. இதற்குத் தம்பிரான் மாட்டுத்தொழு என்று பெயர்; பின்பு நந்தகோபால சாமித் தம்பிரான் மாட்டுத் தொழு என்று பெயராகி இருக்கிறது.

சமுதாயக் கூட்டம் இங்குதான் நடக்கிறது. இத்தொழுவில் தைமாதம் பிறந்த கன்றுக் குட்டிகளை விட்டுவிடுகிறார்கள். அது பெருகி விடுகிறது. ஆனால் அதை ஏலம் விடுவதில்லை; பெருகிய இனத்தை மலைக்கு ஓட்டி மேயவிடுகிறார்கள். அங்கே பட்டி அமைத்து வைத்திருக்கிறார்கள்.

இந்தத் தொழு மாட்டிற்குத் தலைமைப் பொறுப்பேற்க, ஒரு மாட்டுக்குப் பட்டம் சூட்டுகிறார்கள். அதைத் தேர்ந்தெடுக்கும் முறை விநோதமானது. கரும்புத் தோகையைக் கரும்போடு போட்டுவிட்டு மாடுகளை அங்கே விடுவார்கள். எந்த மாடு சென்று அதைத் தின்றதோ அதைப் பட்டத்து மாடாக ஏற்றுக் கொள்வார்கள்; அதற்குச் சிறப்புச் செய்வார்கள். இது கம்பத்தில்தான் உள்ளது. ஆகவே, இங்குதான் அவர்களின் சமுதாய அமைப்பு—தோற்றம் முதலில் ஏற்பட்டிருக்க வேண்டும். பட்டத்து மாடு இறந்துவிட்டால், அதை மரியாதையோடு புதைக்கிறார்கள்.

இந்தத் தம்பிரான் மாட்டுத் தொழுவில்தான் எல்லாக் கும்புகளின் மாலைத் தெய்வங்கள் இருக்கின்றன. அதாவது மூலக்

கோயில்களுக்கோ, பிடிமண் கோயில்களுக்கோ கும்பிடு நடக்கும் போதுபெண்கள் வயதுவந்தவர்கள் கூட்டத்தில் போகமாட்டார்கள்.ஆகவே,அவர்களோடு ஆண்கள் வந்து வணங்குவதற்கென்று அமைக்கப்பட்டதுதான் மாலைக்கோயில் ஆகும். இங்குதான் பொங்கல் வைத்து வழிபடுகிறார்கள்; ஊர்வலமாக ஆர்ப்பாட்டத்தோடு போவார்கள். பச்சரிசி மாவு கொடுப்பார்கள். மீண்டும் மூலக்கோயிலுக்கோ, பிடிமண் கோயிலுக்கோ சென்று வழிபடுவார்கள்.

மூலக்கோயிலில் வழிபாடு நடக்கும் சமயம் கட்டியங்காரன், கும்புக்காரர்களை அழைத்து சாமி கும்பிடச் சத்தம் கொடுப்பார். கம்பளி, கம்பு, மூங்கில், குடுவை (அண்டை) வைத்துச் சத்தம் கொடுப்பார். குடுவையிலிருந்து கோமியம் தெளித்துக் கும்பிடச் சொல்லுவார்; அவர் கும்பிடு பிடிக்கும்போதும், எழுந்திருக்கும்போதும் சத்தம் கொடுப்பார்; கும்பிட விழுந்தவர் அவர் சத்தம் கொடுத்தால்தான் எழுந்திருக்க வேண்டும். பின் பிரசாதம் கொடுப்பார் (ஓ. கி. இராஜகோபால், 18-8-1985).

## கும்புக் கோயில்கள்

காஞ்சிவரதராயர் கோயில் இங்கு உள்ளது. இது மூலக்கோயிலாகும். மாராளிய கும்புக் கோயிலாகும். கச்சியம்மன் என்றும் இத் தெய்வத்தைக் கூறுகிறார்கள். கதிரேசசாமி மாராளிய கும்புக் கோயிலாகும்.

## சன்னிப்பசுத் தொழு

ஏந்தலார் கும்புக்கோயில் உள்ளது. தெய்வப் பெயர் வீரசிக்கம்மாள் ஆகும். இது பிடிமண் கோயில்; சிலை மலையில் மூலக் கோயிலில் உள்ளது.

## தாத்தப்பசாமி

லோக்னவர் கும்புக் கோயிலாகும் இது. ஊரை முதலில் அமைத்தவரே இவர்தான். இலந்தை முள் கோட்டை அமைத்துக் கட்டியவர். இவர் பெயரால் தாத்தப்பன் கண்மாய் என்று இருக்கிறது.

## வைரவசாமி

பெங்காயி பசலியார் கும்புக்கோயில்; இது பிடிமண் கோயிலாகும்.

## போலஜ்ஜியம்மன்

லாபேதாரு கும்புத்தெய்வம் இது. இது பிடிமண் கோயிலாகும்.

**மல்லையசாமி**

குத்தாலு கும்புக்கோயில். இது பிடிமண்கோயிலாகும்.

**சவுடம்மன்**

சாயாரு கும்புக்குப் பிடிமண்கோயில்.

**வெங்கடாசலபதி**

அம்மணி சிறையோர்க்குப் பிடிமண்கோயில். மூலக்கோயில் ஓடைப்பட்டியில் இருக்கிறது. அம்மணிதான் இவர்கள் தெய்வம். அது காலப்போக்கில் ஜெனாம்பிகையாகிப் (காளகஸ்தி) பின் வெங்கடாசலபதி ஆகிவிட்டிருக்கிறது.

**பாலதாயம்மாள்**

மணுக்குச்சௌத்திரியர் கும்புக்குக் குலதெய்வக்கோயில்; இதுவும் பிடிமண் கோயில் தான். சிலைமலையில் மூலக்கோயில் இருக்கிறது. அங்கிருந்து நாகலாபுரத்தில் பிடிமண் எடுத்து அமைத்தார்கள். அதன்பின் இங்கு வைத்து வழிபடுகிறார்கள்.

ஆக திராவிடர்கள் எல்லா இனத்தவர்களும் தங்கள் முன்னோர்களை வழிபட்டு வந்தவர்களே ஆவர் என்ற கருத்து வலுப்பெறுகிறது.

# 5. மங்கலதேவி மாலைத் தெய்வமே

மங்கலதேவிக் கோயில் கூடலூருக்குப் பாத்தியப்பட்ட கோயிலாக இருக்கிறது. கூடலூர்ப்பகுதி மக்கள்தாம் இங்குச் சென்று வழிபடுகிறார்கள். கோயிலுக்கும் ஊருக்கும் ஏறத்தாழ ஏழு மைல் தூரம் இருக்கிறது. அதுவும் சிக்கலான பாதை; வன விலங்கு துன்புறுத்தும் மலைப்பகுதி. இருந்தும், இப்பகுதி மக்கள் இக்கோயிலைச் சென்று வழிபடக் காரணம் என்ன?

இக்கோயில் ஒரு துடியான தேவதை குடியிருக்கும் இடம் என்பதால் தான். தங்களுக்குத் துன்பம் நேர்ந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தில் தான் துன்பத்தைப் பொருட்படுத்தாது சென்று, வணங்கி வருகிறார்கள்; தங்களுக்கு மழை வேண்டும் போதும் கால்நடைகள் சேதப்படாது இருக்க வேண்டியும், நோய் நொம்பல் வராது இருக்க வேண்டியும் அவர்கள் இத் தெய்வத்தை, வணங்கி வந்தார்கள்; வழிபட்டு வருகிறார்கள்.

இந்த அளவுக்கு மங்கலதேவி அவர்களைப் பாதித்திருக்கிறது. இந்த முறையில் இதை ஆராய்ந்தால், சில உண்மைகள் புலனாகின்றன. அகால மரணமடைந்தவர்கள் ஆவி மக்களைத் துன்புறுத்தும் என்று கூறப்படுகிறது. அப்படியிருந்தால், அதை அமைதிப்படுத்தக் கொடூரமான முறையில் பலி கொடுத்து வழிபடுவார்கள். இக்கோயிலில் இப்படியெல்லாம் வழிபாடு நடத்துவதில்லை. மாறாகக்குருபூஜை போன்றே சித்திரை பௌர்ணமி போன்ற நாட்களில் சென்று ஆக்கி படைத்து, விருந்துண்டு வருகிறார்கள். இப்படிச்செய்வது மாலைத்தெய்வ வழிபாடாகத் தான் இருக்கும். ஆகவே, மங்கலதேவி ஒரு மாலைத் தெய்வமாக இருக்க வேண்டும். இனி இக்கட்டுரை இதைப்பற்றி விளக்கம் அளிக்கும்.

திருமணத்திற்காக இருந்த கன்னிப்பெண்ணோ, திருமணமானப்பெண்ணோ, தங்கள் மானத்திற்கு இழப்பு வரக்கூடும் என்ற நிலையில் உயிரைப் போக்கிக்கொள்வார்கள்; தாலிப் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள அவ்வாறு உயிர்விடுகிறார்

கள். கணவனோ நிச்சயம் செய்யப்பட்ட மணமகனோ சண்டையிலோ வேறுகொடூரமான முறையிலோ இறந்துவிட்டால், தங்கள் மானம்காக்க வேண்டியும் இறந்துவிடுவார்கள். அப்படி இறப்பது தற்கொலை போன்று இருக்கும். ஆனால், அதை உலகம் அவ்வாறு ஏற்றுக்கொள்வதில்லை, தீப்பாய்ந்தே பெரும்பாலான பெண்கள் இறந்துவிடுகிறார்கள். சில பெண்கள் கொடூரமான துன்பத்தைச் சகிக்காமல், ஒன்றும் செய்யாமலே உயிர் விட்டு விடுகிறார்கள். துன்பத்தைக் கேள்விப்பட்டவுடனேயே, தமக்குஅடுத்து வாழ்வில் ஏற்படும் பயங்கரத்தை நினைத்த அளவிலே உயிர் விட்டு விடுகிறார்கள். இவ்வாறு இறந்தவர்களைத் தெய்வமாக மக்கள் நினைக்கிறார்கள். இதைத்தான் மாலைத்தெய்வம் என்கிறார்கள். மாலையம்மன் என்று வழிபடுகிறார்கள். பெரும்பாலும் தீப்பாய்ந்தே இத்தகைய பெண்கள் இறந்து தெய்வமாகியிருக்கிறார்கள். இதை மாலைக் காரியம்மன் என்றும் (திருமங்கலம்) தீப்பாய்ந்த அம்மன் என்றும் (பட்டுக்கோட்டை) (வே. முருகப்பன் 5. 5. 1985) அழைத்துவருகின்றனர். தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இத்தகைய அம்மன் வழிபாடு நடந்து வருகிறது.

இந்த மாலையம்மன் குடிகொண்டுள்ள கோயிலை மாலையம்மன் கோயில் என்றும் மாலைக்கோயில் என்றும் சொல்லுகிறார்கள். சம்பவம் நடந்த இடத்தில் கோயில் கட்டி வழிபடுகிறார்கள். இதை மாலைக் கோயில் என்று அழைக்கிறார்கள். இந்த மாலைக்கோயில் மூலக் கோயிலாக இருக்கும். இங்கிருந்து பிடிமண் எடுத்துச் சென்று தாங்கள் வாழும் இடத்தில் கோயில் வைத்து வழிபடுவார்கள். இது பிடிமண் கோயில் என்று அழைக்கப்பெறும்.

மாலைத் தெய்வத்தைத் தென்னகத்தில் எங்கும் காணலாம். சுமங்கலி வழிபாடு என்று வழங்குகிறார்கள்; குறிப்பாக ஆந்திராவில் இதைப் பெறந்தாளு வழிபாடு என்று கூறுகிறார்கள்.

கர்நாடகத்தில் மங்களம்மா என்று கூறுவது இம்மாலைத் தெய்வம் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

மங்கலமடந்தை என்று சிலம்பு கூறுவது மங்கலதேவி என்ற பொருளில்தான. மங்கலதேவி என்பது சுமங்கலிதான். சுமங்கலிதான் மங்கலதேவி. மங்கல வழிபாடுதான் மாலைத் தெய்வ வழிபாடு. மங்கலதேவியும் தீக்குழியில் இறங்கி தெய்வமானவளாக இருக்கவேண்டும். அல்லது தன் வாழ்நாளில் ஏற்பட்ட கொடிய துன்பத்தைக் கண்டு மனம் பொறாமல் உயிர்விட்ட பெண்ணாக இருக்க வேண்டும். இந்த நிலையில்தான், மங்கலதேவி கோயில்

ஏற்பட்டிருக்க வேண்டும். துன்பம் கண்டு பொறுக்காத பெண் உயிர்விட்ட இடத்தில் கோயில் எழுப்பப்பட்டிருக்கிறது. அதுவே மங்கலதேவி கோயில்.

தீப்பாய்ந்த அம்மன், மாலைக்காரியம்மன், மாலையம்மன் என்று சொல்லுவது போல தாலிச் சிறப்புக் கருதி மங்கலம்மன், மங்கலதேவி, மங்கல மடந்தை என்று அழைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு காலக் கட்டத்தில் ஒவ்வொரு வழக்குச் சொல் ஏற் படுவது வழக்கம்தான். இவ்வழக்கு வேறுபாட்டைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆகவே மங்கலதேவி மாலையம்மன்தான். இக்கோயில் மாலைக் கோயிலேதான்.

திருமணமான பெண்ணின் சிறப்பாகக் கழுத்தில் தாலியும், காலில் மிஞ்சும் இருக்கும். இது அக்கால மரபு. அக்காலத்தில் சில்ம்பு முக்கிய அம்சம் பெற்றிருக்க வேண்டும். இன்றுகூட சில வகுப்பாரிடையே, தாலி அணியும் வழக்கம் இல்லை; ஆனால், காலில் மிஞ்சு அணிந்து வருகிறார்கள். ஆகவே, அக் காலத்தில் சிலம்பு, மிஞ்சுக்குப் பதில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்க வேண்டும். இச்சிறப்புக் கருதியே இலங்கையில் கண்ணகி வழிபாட்டில் சிலம்பு முக்கிய இடத்தைப் பெறுகிறது. கயவாகு மன்னனும் சிலம்பில் ஒன்றை எடுத்துச் சென்றதாக வரலாறு கூறுகிறது.

மங்கலதேவி கோயிலில் விழா நடக்கும்போது, சாமியாடி புதருக்குள்ளிருந்து தாலியையும், சிலம்பையும் எடுத்து வருவது இன்றும் காணக்கூடியக் காட்சி.

கம்பத்துக் கவுண்டர் இனத்தில் தாலி அணியும் பழக்கம் இன்றும் இருப்பதில்லை.

ஆக இவற்றையெல்லாம் பார்க்கும்போது தீக்குழி போன்ற அமைப்பை ஏற்படுத்தி உயிரை விட்ட பெண்கள் தெய்வமாவது தான் மாலைத் தெய்வம் என்பது புலனாகிறது; இம் மாலைத் தெய்வத்தை மாலையம்மன் என்று இப்போது கூறுவது போல முன் காலத்தில் மங்கல மடந்தை என்றும் சொல்லிருக்க வேண்டும்.

ஆகவே, மங்கலதேவி மாலைய்ம்மனே யாகும்; மாலைத் தெய்வம்தான் என்பது தெளிவாகிறது.

# 6. மங்கலதேவியே கண்ணகி

மங்கலதேவி மலையிலுள்ள மங்கலதேவிக் கோயில், கண்ணகி கோட்டம் தான் என்று கூடலூர் மக்கள் சொல்லி வந்தார்கள்; ஆனால், எழுத்து வடிவமாகவோ, சொற்பொழிவு மூலமாகவோ அவர்கள் தாங்கள் கருத்தைச் சொல்லவில்லை. ஆகவே, அவர்கள் கருத்துக்கள் உலகுக்குக்கேட்கவில்லை. ஆனால் கம்பம் ஏல விவசாயிகள் ஐக்கிய மேல்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்து காலஞ்சென்ற புலவர் சோமசுந்தரனார் 1957-லும் கரந்தைத் தமிழ்ப் பேராசிரியர் சி. கோவிந்தராசன் 1965- இல் இரண்டாவதாகவும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருக்கும் புலவர் செ. இராசு 1976-இல் மூன்றாவதாகவும் கருத்துக்களை எழுத்து வடிவில் சொல்லி தங்கள் ஆய்வினை நிலைநாட்டினர். 1966-இல் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினரும் கண்ணகிக் கோட்டம் பற்றி ஆய்வுக் கருத்துக்களைத் தங்கள் ஆண்டறிக்கையில் சொல்லியிருந்தார்கள். இவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாக மேலும் ஆய்ந்து மங்கலதேவிதான் கண்ணகி என்றும் மங்கலதேவி கோயில் சேரன் செங்குட்டுவன் நிறுவிய கண்ணகி கோட்டமாகும் என்று முடிவு செய்து விளக்கிக் கூறுவதுதான் இக்கட்டுரை.

மதுரையின் கிழக்கு வாயில் வழியாக நுழைந்த கண்ணகி கணவனை இழந்தபின், கோட்டையின் மேற்கு வாயில் வழியாக மனமுடைந்து, வெறுப்புணர்ச்சியோடு தனித்து புறப்படுகிறாள். (சிலம்பு. 53:183). பின்வையை ஆற்றின் ஒருகரையைப் பின்பற்றி மேற்கு நோக்கி நடக்கிறாள் (23:185). சமவெளியில் பாய்ந்து வரும் வையை மலைமீது ஏறும்இடமாகிய நெடுவேள் குன்றத்தில் அடிவைத்து ஏறுகிறாள் (23:190). அருவிகளையுடைய குன்று தான் அது (24: 13). மலைமீது இருந்த பூத்த வேங்கைக் கானலில் நின்றாள் (23:191). தெய்வமானாள் (24: 3); இதைநேரில்கண்ட குறவர்களும் அவளைத் தெய்வமாகப் போற்றினர் (24: 14, 15).

குறவர்கள் தாம் கண்ட காட்சியை மலை வளம் காண பேரியாற்றங்கரையில் வந்துத் தங்கியிருந்த சேரன் செங்குட்டு

வனிடம் சொல்லுகிறார்கள். சேரன் செங்குட்டுவனும் கண்ண கிக்குக் கோட்டம் அமைக்கத் தீர்மானிக்கிறான். இமய மலை யிலிருந்து கல் கொண்டு வருகிறான். அப்போது வந்த ஆரிய அரசர்களைப் பத்தினிக் கோட்டம் திருப்பணி முடியும்வரை வஞ்சி நகர்ப்புறத்து மாளிகையில் இருக்குமாறு செய்கிறான் செங்குட்டுவன். (28-195-199)வேங்கை மரச் சோலையில் தெய்வ மானக் கண்ணகி தெய்வத்திற்கு, அறக்களத்து அந்தணர் ஆசான் பெருங்கணி சிறப்புடைக் கம்மியர் தம்மோடு வஞ்சியி லிருந்து சென்று பத்தினிக் கோட்டம் அமைத்தான் செங்குட்டுவன்.

சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்து, அதில் இமயத்திலிருந்து கொண்டுவந்த கல்லில் சிலை செய்து வைத்து வழிபாடு செய்தான்; இச் செய்திகளைக் காவேரிப் பூம்பட்டினத்திலிருந்து அறிந்த கண்ணகியின் செவிலித் தாயும் பணிப் பெண்ணும் தோழி தேவந்தியுடன் கண்ணகித் தெய்வத்தைக் காண புகாரிலிருந்து புறப்பட்டு வருகிறார்கள்; மதுரை வந்து மாதிரி மகள் ஐயையை அழைத்துக்கொண்டு, அவள் வழிநடத்திச் செல்ல வையை ஒருகரை வழியாகச் சென்று மலையேறிச் சென்று கண்ணகிக் கோயிலை அடைந்தனர்; அங்கு விழாவெடுத்த செங்குட்டுவனுக்குத் தங்கள் சோகக் கதைகளைக் கூறுகிறார்கள் (29: 1). இவைதாம் சிலப்பதிகாரம் காட்டும் கண்ணகி தெய்வமான வரலாறு. கண்ணகி வையை நதி வழியாகச் சென்று மலைமீது தெய்வமானாள் என்று கூறப் பட்டுள்ள செய்தி யாவரும் அறிந்ததே. கண்ணகி வையை வழியாக எப்படிக் கடந்து எந்த மலைமீது ஏறினாள் என்று காணவேண்டும்.

பேராசிரியர் புலவர் சோமசுந்தரனாரும், பேராசிரியர் சி. கோவிந்தராசனாரும் கண்ணகி வையை வழியாகச் சென்ற வழியைக் கூறுகிறார்கள்; இருவரும் இருவிதமாகக் கூறுகிறார் கள். புலவர் சோமசுந்தரனார் கூறிய வழியை முதலில் காண்போம்.

''வையைக் கரை வழியே ஆவேசமாகச் சென்ற கண்ணகி செல்லும் வழியிலுள்ள பள்ளத்தையும் மேட்டையும் பொருட் படுத்தாமல் சென்று, மேற்கு மலையில் உற்பத்தியாகி வரும் வையை நதி சேரும் இடமாகிய இப்போதுள்ள வீரபாண்டியில் தங்கினாள். பின் தன் நினைவோடு மலைப் பிரதேசத்தில் ஏறத் தொடங்கியவள், காமயக் கவுண்டன் பட்டிக்குக் கிழக்கே உள்ள சுருளி மலையாகிய நெடுவேள் குன்றில் அடிவைத்து ஏறினாள்.''

வைகை குன்னூருக்குத் தெற்கில், அமச்சியாபுரத்தருகில் இரண்டு நதியாகிறது,முல்லையாறு, வைகையோடு இங்குதான் சேருகிறது. முல்லையாறுதான் வீரபாண்டிக்குச் செல்கிறது. சுருளி அருவியிலிருந்து வரும் சுருளியாறு, இந்த முல்லையாறாக வருகிறது. ஆகவே கம்பம் சோமசுந்தரனார் கூறும் வழி சரியான தாக இருக்க முடியாது. ஆனால், நெடுவேள் குன்றம் என்று கூறுவது சரியானதே. இந்த நெடுவேள் குன்றத்தின் மறுபக்கத் தொடர்ச்சிதான் வருச நாட்டு மலைத்தொடர்.

இனி, பேராசிரியர் சி. கோவிந்தராசன் கூறும் வைகை வழியைக் காணவேண்டும். இவர், சிலப்பதிகாரம் சொல்லும் கண்ணகி சென்ற வழியைக் குறிப்பிட்டுவிட்டு, தன் ஆய்வைக் கூறுகிறார். (1). மதுரையிலிருந்து நரை வழியாகச் சென்றால், வைகையாற்றின் தென்கரையே அதற்குரிய வழியாகிறது. இதைப் பின்பற்றி மேற்கே 40 மைல் செல்லலாம். இவ்வழியின் ஆரம்பம் முதல் வைகை ஆற்றுக்குத் தென்புறம் தொடரும் நாகமலைத்தொடர், சுருளி மலைத்தொடராக நீளுகிறது. (2) சுருளிமலைத் தொடரின் மேற்குப் புறக் கோடியில் உற்பத்தியாகும் வைகைஆறு, பள்ளத்தாக்கின் வழியாக வடக்கு நோக்கி ஓடி தேனி அருகில் கிழக்குப் புறமாகத் திரும்புகிறது. இங்கு குன்னூர் இருக்கிறது.இங்கிருந்து கண்ணகி நடந்த வழியே போக காட்டிலும், கரம்பிலும், சதுப்பு நிலத்திலும் ஓடிவரும் வைகை ஆற்றையே, பின்பற்ற வேண்டும். (3). எதிரே வருசநாடு என்று குறிப்பிடப்பட்ட கம்பம் பள்ளத்தாக்கின் காட்டுப் பிரதேசம் பரந்து கிடக்கிறது. இப்பள்ளத்தாக்கைச் சூழ்ந்து முப்புறமும் சுவர் வைத்தாற்போல் சுருளிமலைத் தொடரும், பழனி மலைத் தொடரும் இணைந்து நிற்கின்றன. (4) குன்னூரிலிருந்து வைகை ஆற்றைப் பின்பற்றிச்சென்றால், எதிரில் நிற்கும் மலைத் தொடரின் குறுக்கே எங்காவது ஓரிடத்தில் மலைமேல் ஏறுவதைத் தவிர, வேறு வழியில்லை. (5). கண்ணகி ''வைகை ஒரு கரை கொண்டு ஆங்கு நெடுவேள் குன்றம் அடி வைத்து ஏறினாள்'' என்று இளங்கோவடிகள் கூறியிருப்பதற்கு ஏற்ப, இயற்கையின் அமைப்பு இங்கே இருக்கிறது. மேல் சுருளி மலையின் ஒரு பகுதியினை ஆராய லானேன்.சுருளி மலைதான் நெடுவேள் குன்றம்''.

ஒரு வசதிக்காகப் பேராசிரியர் கூறும் கருத்துக்களை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம். இப்பகுதிகளுக்குரிய, அவரால் வரையப்பட்ட வரைபடமும் அருகில் கொடுக்கப் பட்டுள்ளது; ஆய்வாளர் கொடுத்துள்ள வரைபடமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இனி, பேராசிரியர் கூறும் கருத்துக்களை ஆய்ந்து பார்க்கும் போது, பல உண்மைகள் புலனாகின்றன. பேராசிரியர் கூறும் முதல் பகுதியிலுள்ள கருத்துக்கள் உண்மையே; இவ்வழி சரியானதே.

## இரண்டாவது பகுதியிலுள்ள கருத்துக்கள்

சுருளிமலைத் தொடரின் மேற்குப் புறக் கோடியில் உற்பத்தியாவது வையை ஆறு அல்ல: சுருளி அருவியிலிருந்து ஓடிவரும் சுருளி ஆறே உற்பத்தியாகிறது. வீரவனாறும் சுருளி ஆறும் சேர்ந்து, முல்லை ஆறு ஆகிறது. படத்தில் முல்லையாறும் சுருளி அருவியிலிருந்து வரும் சுருளியாறும் வையை ஆறாகி, வருச நாட்டுப் பகுதியிலிருந்து உற்பத்தியாகி வருவதாகக் காட்டப் பட்டுள்ளது. இது முற்றிலும் தவறு. வையை ஆறு வருசநாட்டுப் பகுதியிலிருந்துதான் உற்பத்தியாகிறது. ஆனால், வருச நாடு சுருளி மலைக்கு மேற்கே இல்லை. கம்பம் பள்ளத்தாக்கில் இல்லை. கம்பம் பள்ளதாக்கு சுருளி மலைக்கு மேற்கிலுள்ளது; வருச நாடு சுருளி மலைக்குக் கிழக்கே உள்ளது. படமும் குழப்பம்; கூறப்பட்டக் கருத்துக்களும் குழப்பம்; பேராசிரியர் மதுரையிலிருந்தே நடந்து சென்றே எல்லாப் பகுதிகளையும் பார்த்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், கள ஆய்வில் ஈடு பட்ட அறிகுறியே இல்லை.

குன்னூரிலிருந்து தெற்கே, வையை ஆறு ஓடும் வருச நாடு முழுவதும் காடும் கரம்பும் சதுப்பு நிலமும் ஆகும். இப்பகுதியில் தான், கண்ணகி சென்று இருக்கவேண்டும்.

## மூன்றாம் பகுதி

இப்பகுதியில் வருச நாட்டில் எல்லைப் பகுதி கூறப்படு கிறது. இது முற்றிலும் தவறானது. வருச நாடு, ஆண்டிப் பட்டிக்குத் தெற்காக வந்து, கிழக்காக நீண்டு சுருளி மலைத் தொடரின் தெற்குக் கோடியில் இணைகிறது. ஆகவே, ஆண்டிப் பட்டி மலைத் தொடரான நாகமலைத் தொடருக்கு மேற்கி லும், சுருளி மலைத் தொடருக்குக் கிழக்கிலும் உள்ளதுதான் வருச நாடு ஆகும்.

## நான்காவது பகுதி

குன்னூரிலிருந்து வையை ஆற்றைப் பின்பற்றிச் சென்றால், எதிரில் நிற்கும் மலைத்தொடரின் குறுக்கே எங்காவது ஓரிடத் தில் மலைமேல் ஏறவேண்டும் என்ற கருத்துச் சரியானதே.

## ஐந்தாவது பகுதி

நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறினாள் என்ற கருத்துச் சரியானதே. அதற்கு ஏற்பவே இயற்கை அமைப்பு இங்கு இருக்கிறது. ஆகவே, இங்குக் கூறிய கருத்துக்களை ஆராயும்போது கண்ணகி, வையை ஆற்றின் ஒரு கரை, அதாவது தென் கரையைப் பற்றியே சென்றாள் என்பதும், அவ்வாறு ஆற்றின் தென்கரை வழியாக மேற்கு நோக்கிச் சென்றவள், குன்னூர் வரை சென்று பின் அங்கிருந்து முல்லையாற்றின் வழியாகச் செல்லாது, வையைக் கரையின் வழியாகவே தொடர்ந்து சென்று, வருச நாட்டுப் பகுதியிலுள்ள-வருச நாட்டு ஊருக்குத் தெற்கே 20கி. மீ. தூரத்திலுள்ள சில முத்தையா சாமிக் கோயிலுக்கும் தெற்கே உள்ள பொம்மக்கா கடை என்ற இடத்தில் வையை ஆறு மலைமீது ஏறும் இடத்தில், குன்றின்மீது அடி வைத்து ஏறினாள் என்பதும் தெரிகின்றது. இக்குன்று, சுருளி மலையின்தொடர்ச்சி; ஆகவே இது நெடுவேள் குன்றே யாகும்.

இவ்வாறு மதுரையை விட்டுப் புறப்பட்ட கண்ணகி, மலை மீது ஏறினாள். வருச நாடு, யானைகள் போன்ற வனவிலங்கு திரியும் காட்டுப்பகுதி; இம்மலையின் தொடர்ச்சியாகிய சுருளி மலையில், அலைந்து திரிந்து, இறுதியில் கண்ணகி, சுருளி மலையின் மேற்குத் தொடர்ச்சியான மங்கலதேவி மலைக்கு வருகிறாள். இம்மங்கலதேவி மலையை யானை முகம் போன்ற அமைப்புக் கொண்ட தனிக்குன்று என்று சொல்லப்பட்டது. இவ்வானைக் குன்றின் பிடரி போன்ற பகுதியில், மூன்று சோலைகள் உள்ளன. அச்சோலைகள் பூத்த வேங்கை மரக் கானல்களாகும். அம்மூன்றில், நடுவிலுள்ள சோலையில் வேங்கை மர நிழலில் வந்து, கண்ணகி தங்குகிறாள். இப்பகுதி முழுவதும் சிலப்பதிகாரம் வருணனை செய்யும் பகுதியாகவே இருக்கிறது. பின் அம்மலை வாழ் மக்கள் காண, அவர்கள் வியக்க, உயிர் துறக்கிறாள்; தெய்வமாகிறாள்.

இந்த வேங்கைமரச் சோலையில்தான், மங்கலதேவிக் கோயில் இருக்கிறது. இக்கோயில்தான் கண்ணகி கோட்டமாக இருக்க வேண்டும். இதுதான் சேரன் செங்குட்டுவன் கட்டிய பத்தினிக் கோட்டமாக் இருக்க வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் வரந்தரு காதையில் தேவந்தி தெய்வமுற்றுக் கூறியதாகவுள்ள பகுதியில்,

''மங்கலமடந்தைக் கோட்டத்து ஆங்கண்
செங்கோட்டு உயர்வரைச் சேணுயர் சிலம்பில்

பிணிமுக நெடுங்கற் பிடர்தலை நிரம்பிய
அணியகம் பலவுல ஆங்கவை இடையது
கடிப்பகை நுண்கலும் கவரிதழ்க் குறுங்கலும்
இடிகலப்பு அன்னா இழைந்துகு நீரும்
உண்டோர் சுனை''

என்று அம்மலையின் அமைப்பு சுட்டப்படுகிறது.

கண்ணகியே மங்கலமடந்தை; இதை, உ. வே. சா அவர்களும் உடன்படுகிறார். அவர் மங்கலமடந்தைக்கு மங்கலதேவி என்றே பொருள் கூறுகிறார்.

செங்குன்றில் உயர்வான இடத்தில் கண்ணகி கோட்டம் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது; அம்மலை எதிரொலிக்கும் மலையாகும்; அது யானை முகம் போன்ற குன்று; அவ்வானையின் பிடரியில் உள்ளது வேங்கைக் கானல்கள்; அந்த வேங்கை மரச் சோலைகளின் நடுவிலுள்ள சோலையில் இருப்பதுதான் கண்ணகி கோட்டம்; அந்தக் கோட்டத்தின் பக்கத்தில் நீர் உள்ள சுனை உள்ளது.

இச்சிலப்பதிகாரக் காட்சியின்படியே, மங்கலதேவிக் கோயிலும் யானை போன்ற குன்றின் கழுத்துப் பக்கத்திலுள்ள மூன்று வேங்கைமரச்சோலைகளின் நடுவிலுள்ள சோலையில் இருக்கிறது அருகே சுனையும் இருக்கிறது. சிலம்பு குறிப்பிடுவது போன்றே தண்ணீர் இருக்கிறது; மங்கலதேவியின் கோயிலுக்கு வெளியே உள்ள தோரண வாயில் பக்கத்திலிருந்து குரல் கொடுத்தால் எதிரொலிக்கிறது; இம்மலை சிலம்புகிறது. ஆகவே, சிலப்பதிகாரம் குறிப்பிடும் சேணுயர் சிலம்பிய உள்ளகோயில் அதுதான். மேலும், இம்மலை செங்குன்றாகும்.

ஆகவே, சிலப்பதிகாரம் கூறும் காட்சிக்கும், இப்போதுள்ள மங்கலதேவி கோயிலுள்ள காட்சிக்கும் ஒப்புமை சிறிதும் மாறுபடாமல் இருக்கிறது. சிலம்பின் வரிகளை படித்துவிட்டுச்செல்லுபவர்கள் மங்கலதேவி கோயில் சென்றால், கனவில் கண்டது நனவாவதுபோல் இருக்கும். இக்கோயிலுக்குச் சென்று, மலை மீது நின்று பார்க்கும்போது ஏதோ பழக்கப்பட்ட இடத்திற்கு வந்ததுபோல் தோன்றும்; அதன்பின், நினைவுக்கு வந்தவராய் சிலப்பதிகார வரிகளைச் சொல்லத்தோன்றும். அந்த அளவுக்குச் சிலப்பதிகாரத்தின் தாக்கம் இங்கே இருக்கிறது. ஆகவே, மங்கலதேவி கோயிலைக் கண்ணகிகோட்டமாக கொள்ளலாம்.

பேரியாற்றங்கரையில்தான், மலைவளம் காணவந்த சேரன் செங்குட்டுவன் தங்கினான். அந்தப் பேரியாற்றங்கரை என்னும்

பெரியாறு நீர்தேக்கம் இம்மங்கல தேவிக் கோட்டத்திற்கு நேரே தெற்கில் இருக்கிறது. இன்று கோவிலிருந்து பார்க்கும் போது இவ் ஏரி தெளிவாகத் தெரிகிறது.

கண்ணகி தெய்வமானதைக்கண்ட குறவர்கள் சென்று,சேரன் செங்குட்டுவனிடம் கூறினார்கள். இது சிலம்புச்செய்தி. இன்றும் குறவர்கள்-மலைசாதியினர், பழியர் இம்மலையின் அடிவாரத்தில் இருக்கிறார்கள். மன்னாமார் பணியர், ஊராளியர் போன்ற மக்கள் இக்குன்றுக்குத் தெற்கில் கேரளஎல்லையில் வாழ்கிறார்கள். மலைவாழ் மக்களாகிய முதுவர் இங்கு வாழ்கிறார்கள். அவர்கள் கண்ணகியோடு மதுரையிலிருந்து வந்ததாகக் கூறுகிறார்கள். முதுகில் குழந்தைகளைச் சுமந்துகொண்டு கண்ணகியோடு வந்துதங்கிவிட்டார்களாம். ஆகவே, முதுவர்கள் என்று அழைக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். (சி. சக்திவேல் 15-8-85). இம்மங்கலதேவி மலையில் பல விளைபொருட்கள், வனவிலங்குகள் உள்ளன.

சேரன் செங்குட்டுவன் அமைத்த கண்ணகி கோட்டம் மலையில் இல்லை; வஞ்சியில் தான் இருந்தது; ஆகவே, மங்கலதேவிக் கோயில் கண்ணகிகோட்டமாக இருக்க முடியாது என்றுகூறுவர். இக்கூற்று சரியானதல்ல.

மணிமேகலை இரண்டாம் முறையாக மணிபல்லவத் தீவு சென்றவள். அங்கிருந்து வஞ்சியும் செல்வேன் என்று அந்தரத்து எழுந்து செல்கிறாள். (மணிமேகலை 25: 238,239). அப்போது வழியில்,

''தணியாக் காதல் தாய் கண்ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமம்காணிய
வேட்கைதுரப்பக் கோட்டம் புகுந்து''

வழிபட்டுச் செல்கிறாள்; பின், வஞ்சிமாநகரின் புறஞ்சேரியை அடைகிறாள் (மணிமகலை:26).

மணிபல்லவத்திலிருந்து வஞ்சி செல்லும் நேர்கோட்டுப் பாதையிலேயே மங்கலதேவி மலை அமைந்துள்ளது(செ. இராசு: 1976:6). ஆகவே, கண்ணகி கோட்டம் வஞ்சியில் இல்லை என்பது தெளிவாகிறது. மேலும், வஞ்சிமாநகரில், வட நாட்டிலிருந்து வந்த அரசர்களைத் தங்கவைத்திருந்தான் மன்னன். இவர்களோடு, அந்தணர், கம்மியர், ஆகியவர்களோடு சென்று பத்தினிக்கோட்டத்தை அடைந்ததாகச் சொல்ல




பேராசிரியர் சி. கோவிந்தராசன் கொடுத்துள்ள வரைபடம்




நூலாசிரியர் கொடுத்துள்ள வரைபடம்

படுகிறது (சிலப். 28:220-225). இவற்றிலிருந்தும் மேற்கூறிய கருத்து வலுப் பெறுகிறது.

மலையில்தான், செங்குட்டுவன் கண்ணகி கோட்டம் அமைத்தான் என்பதற்கும் போதியஅகச்சான்றுகள் இருக்கின்றன.

மலைவளம் காணவந்த இடத்தில்தான், சேரன் செங்குட்டுவன் கண்ணகி தெய்வமானதை கேள்விப்படுகிறான்; அவன் தங்கியிருந்த இடத்திற்குப் பக்கத்திலுள்ள மலையில்தான், அவள் தெய்வமானாள் என்றும் கூறப்படுகிறது; தெய்வமான இடத்தில் தான், முதற்கோயில் கட்டுவார்கள். இது திராவிட மரபு. ஆகவே, செங்குட்டுவன் கட்டியக் கோயில் பேரியாற்றங் கரைக்குப் பக்கத்திலுள்ள மலை என்பது தெளிவாகிறது. கண்ணகியின் செவிலித்தாய், பணிப்பெண், ஐயை, தேவந்தி ஆகிய நால்வரும் கண்ணகி தெய்வமானதைக் கேள்விபட்டு, வையைக் கரை வழியாக வந்து மலைமீது ஏறி, கண்ணகி கோட்டம் வந்து வழிபடுகிறார்கள்; விழா எடுத்த செங்குட்டுவனிடம் தங்கள் கதையைக் கூறுகிறார்கள் (29 : 1). இதிலிருந்தும் செங்குட்டுவன் அமைத்த கண்ணகி கோட்டம் மலையில் உள்ளது என்பது தெளிவாகிறது. மேலும்,

> ''மங்கல மடந்தை கோட்டத் தாங்கள்
> செங்கோட்டு உயர்வரைச் சேணுயர் சிலம்பில்''
> (சிலம்பு. 30: 53-54)

என்ற அடிகளாலும், கோட்டம் மலைமேல் உள்ளது என்ற கருத்து உறுதியாகிறது.

கண்ணகி வானத்தில் தோன்றி செங்குட்டுவனுக்கு செய்தி கூறுகிறாள்:

> ''வென்வேலான் குன்றில் விளையாட்டு யான் அகலேன்''

என்பது அவள் கூற்று. இவ்வடியிலும் கோட்டம் மலையிலுள்ளதுதான் என்பது புலனாகிறது (26: 10-3).

கொடுங்கோளூருக்கு பக்கத்திலுள்ள செங்குன்றமென்னும் மலையில் தான், கண்ணகி கோட்டம் இருக்கிறது என்று அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இவருடைய கருத்தில் மாறுபாடு இருந்தாலும், மலை என்பதில் ஒற்றுமை இருக்கிறது. (பதிகம் 1: 9). திருச்செங்கோடு என்பார் அரும்பதகாரர். இவர் கூற்றும் மாறுபட்டதாக இருந்தாலும், மலை என்பதில் மாறுபாடு இல்லை. இவர்கள் கருத்துக்கள் பற்றி அடுத்த பகுதியில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. கண்ணகியைப்

பற்றிப் பாடப்பெறும் 'வட்டப்புரி அம்மன் கதை' என்ற நாட்டுப்புறப் பாடலில் கூட கண்ணகி தெய்வமான இடம் மலை என்றே வருகிறது.

> ''மலையாளத்து எல்லையிலே மயிலைனையாள் பேறு பெற்று''

என்பதே அத்தொடர் (சாமி. பி. எல். 1976: 119) ஆகவே, கண்ணகி தெய்வமான இடம், மலையேயாகும்; அதுவும் மங்கலதேவி மலையே என்பதும் தெளிவாகும்.

ஆக, சேரன் செங்குட்டுவனால் கட்டப்பெற்ற கண்ணகி கோட்டம் மங்கலதேவிக் கோயிலேயாகும்; 'இன்று காணப் பெறும் மங்கலதேவி மலையிலுள்ள மங்கலதேவிக் கோயில் கட்டடம் சேரன் செங்குட்டுவனால் கட்டப்பெற்றதுதானா?' என்ற வினாவிற்குப்பதில் கூறும்போது, ஆம் என்றோ இல்லை யென்றோ கூற இயலாது. சோழர்கால அமைப்பில் கட்டப் பெற்ற கட்டடங்கள்தாம் இன்று காணப்பெறுபவை. சேரன் அமைத்தகோயிலுக்குப் பிற்காலத்தில், பலர் திருப்பணி செய் திருக்கிறார்கள். அவர்களில் சோழ அரசன் இராஜராஜசோழன் முதன்மையான இடத்தை பெறுகிறான். இவனுடைய கல் வெட்டு கோயிலில் கிடைக்க பெற்றுள்ளது; இராஜராஜன் கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன. வட்டெழுத்தில் மிகச் சிதைந்துள்ளன (ஏ. ஆர். எண். 277, 280-1966). ஸ்ரீபூர்ண்ணி, என்ற சொல் தெளிவாக அக்கல்வெட்டில் உள்ளது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் கல்வெட்டிலும் 'ஸ்ரீபூர்ணி' என்ற தொடர் காணப்படுகிறது.

> ''எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
> குருகார் கழனியின் இதனைத் தாங்கள்
> ஏதிலாளன் கவலை கவற்ற
> ஒருமுலை குறைத்த திருமா உண்ணி''
>
> (நற். 216).

என்று மருதன் இளநாகனார் பாட்டு கண்ணகி வரலாற்றையே கூறுகிறது.

திருமா உண்ணி (கி. பி. 2-ஆம் நூ.)
ஸ்ரீபூர்ண்ணி (கி. பி. 10. ஆம் நூ.)
(ஸ்ரீபூரணி கி. பி. 13-ஆம் நூ.)

என்று மாற்றம் பெற்றிருக்க வேண்டும் என்று, புலவர் செ. இராசு (1976:12) கூறுகிறார். ஆகவே, இராசராசன் கல்

வெட்டில் குறிப்பிடும் ஸ்ரீபூர்ணி, மங்கலதேவியாகிய கண்ணகியே என்பது தெளிவு.

இராசராசன் இங்கு வந்து இக்கோட்டத்திற்குச் சிறப்புச் செய்து திருப்பணி செய்ய வேண்டிய தேவை என்ன? இராசராச சோழ அரசனுக்கும் கண்ணகிக் கோயிலுக்கும் தொடர்பு உண்டு என இலங்கை வரலாற்றைக் கூறும் சூளவம்சம் கூறுகிறது. இராசராசன் இலங்கைமீது படையெடுத்து ஐந்தாம் மகிந்தன் எனும் சிங்கள மன்னனை வென்றான்; அவன் மனைவியைச் சிறைசெய்து வந்தான்; அச்சிங்கள நாச்சியார் தஞ்சையில் பத்தினித் தெய்வ வழிபாடு இல்லாது உண்ணா நோன்பு மேற்கொள்ளுகிறாள். இலங்கையில் கயவாகு மன்னன் காலத்தில், கண்ணகித் தெய்வ வழிபாடு தொடங்கியது; இம்மன்னன் தான் மங்கலதேவி கண்ணகி கோட்டத்திலிருந்து சிலம்பைக் கொண்டு சென்று, அந்த வழிபாட்டைத் தொடங்கிவைத்தான். இன்றும் பௌத்தக் கோயில்களில், இவ்வழிபாடு இருப்பதைக் காணலாம். பௌத்தர்கள் பெண்தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுவதில்லை. ஆனால், இத்தெய்வத்திற்கு மட்டும் விதிவிலக்கு. அவர்கள், கண்ணகித் தெய்வ வழிபாட்டை 'பத்தினித் தெய்யோ' [பத்தினித் தெய்வம்] என்றுதான் கொண்டாடுகிறார்கள் [வி. சீ. கந்தையா. 1964: 59]

ஆகவே, அந்த முறையிலேயே சிங்கள நாச்சியார், பத்தினித் தெய்வ வழிபாடு நடத்த வேண்டுமென்கிறார். அதற்காகவே, இராசராசன் மங்கலதேவி மலைக்கு வந்திருக்க வேண்டும்; சிறப்பைக் கண்டிருக்க வேண்டும்; கோயிலுக்குத் திருப்பணி செய்திருக்க வேண்டும். அவன் இங்கிருந்து பிடிமண் எடுத்துச் சென்று, தஞ்சையில் பத்தினித் தெய்வ வழிபாட்டைத் தொடங்கி வைக்கிறான். சிங்கள அரசி-சிங்கள நாச்சியார் வணங்குவதற்காகவே கோயில் கட்டுகிறான். அக்கோயில்தான், இன்று தஞ்சையில் செங்கள நாச்சியார் என்று வழங்கி, பின் செங்களாச்சியம்மன் கோயிலாகி இருக்கிறது.

பிற்காலக் கல்வெட்டில் பூரணி என்று கண்ணகி அழைக்கப்படுகிறாள்; மலை பூரணகிரி என்று வழங்குகிறது. இலங்கையில் இன்றும் மட்டக்களப்புப் பகுதியில் கண்ணகி தெய்வ வழிபாடு-பத்தினித் தெய்வ வழிபாடு பூரணை நாளில்தான் நடக்கிறது. பௌர்ணமிதான்-பூர்ணமி; அது பூரணை ஆகியிருக்கிறது. ஆடி மாதம் பூரணியில்தான் கண்ணகி தெய்வமாயிருக்கிறாள். ஆகவே, கண்ணகியை-மங்கலதேவியைப் பூரணி என்று குறிப்பிட்டுள்ளார்கள். கன்னட நாட்டில் வழங்கும் கண்ணகி

கதையில், கண்ணகியை சந்திரா என்றே குறிப்பிடுகிறார்கள் [செ. இராசு. 1976:3].

இலங்கையில் ஆண்டு முழுவதும் பூட்டப்பட்டுக் கிடக்கும் கண்ணகி கோயில் வைகாசி பூரணை நாள் மட்டும் திறக்கப் படுகிறது. மட்டக்களப்பு கல்முனை என்னும் பகுதியில் விபுலானந்தம்அடிகள் வீட்டிற்கருகில் கண்ணகிக் கோயில் உள்ளது. கற்சிலை $1\frac{1}{2}$ அடி உயரம். மானிடப்பெண் போன்றுள்ளது, சிலம்பைத்தான் வழிபடுகிறார்கள். [திருநாவுக்கரசு க. த. 20.12.86] அன்றுதான், கண்ணகி கதைகள் படிக்கப் பெறுகின்றன; பாரதக் கதைகள் வீரத்தை ஊட்டுவதற்காக எவ்வாறு படிக்க ஏற்பாடு செய்யப்பட்டதோ, அதுபோல கண்ணகி கதைகளும் படிக்கப்படுகின்றன; பாரதக் கதைகளைப் படிக்க பல்லவ மன்னன் பரமேஸ்வரவர்மன் தென் ஆற்காடு மாவட்டத்தில் படிக்கச் செய்ததன் விளைவாகத்தான் திரௌபதியம்மன் கோயில்கள் ஏற்பட்டன. அதுபோலவே கண்ணகிக் கோயில்கள் இலங்கையில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

பாண்டியர்கள் இராசராசனை அடுத்து இக்கோயிலைப் புதுப்பித்திருக்கிறார்கள். அவர்கள் காலத்துக் கல்வெட்டுக் களும் காணப்பெறுகின்றன.

ஸ்வதிஸ்ரீ எம்மண்டலமும் கொண்
டருளிய ஸ்ரீகுலசேகர தேவர்க்கு
யாண்டு 29ஆவது ஸ்ரீபூரணகிரி
ஆளுடைய நா
ச்சியார்க்குத் திருநீலகண்டன் இரசாக்க
னாயகனான தொண்டை மானேனே இந்
நாச்சியார்க்குத் தேவதானமாக அமு
துபடிக்கும் பல நிமந்தத்துக்கும் இட்ட நிலத்
துக்கு எல்லையாவது வட எல்லை நேரிட்
டயாற்றுக்குத் தெற்கும் கீழெ
ல்லை மட்டப் பாறைக்கும் மகராசி மலைக்கும்
மேற்கும் தென்னெல்லை பாலைப்பாட்டத்
துக்கு வடக்கும் மே
லெல்லை முஸ்லைப்பாடிகிள்ளி யேரிப் பற்றுட்
படக்கிழக்கும் இப்பெரு நான்கெல்லைக்குட்
பட்டநன்
செய் புன்செய் கீழ்நோக்கின கிணறும்மேல்
நோக்கின மரமும் தேவதானமாகக்
குடுத்தேன் திருநீலகண்

டன் இராசாக்கணாயகனான தொண்டைமானேன்
இப்படிக்கு தொண்டைமான் எழுத்து அருளிச் செயல்
(எ. ஆர். எண். 284-1966)

பிற கல்வெட்டுக்களிலும் ஸ்ரீபூரணி, ஆளுடைய நாச்சியார் என்ற பெண்தெய்வப் பெயர்களே காணப்படுகின்றன. ஆண் தெய்வம் குறிக்கப்படவில்லை. எனவே இக்கோயில் தனிப் பெண் தெய்வத்துக்கு உரியதே யாகும். பண்டைய நாளில் ஊர்த் தேவதைகளுக்கு எல்லையில் சிறு கோயில் அமைவதுதான் வழக்கம். இக்கோயிலின் பரப்பு, பெருமை, பெண் தெய்வத்தின் பெயர் மட்டும் குறிக்கப் பெற்றிருத்தல் ஆகிய இவைகளை நோக்கி இதுவே கண்ணகிக் கோயிலாக இருக்கக் கூடும் என்று திரு. கே. ஜி. கிருஷ்ணன் கருதுகிறார். பிற கோயில்களில் ஆண் தெய்வத்தின் பெயர் மட்டும் இருக்கும். அல்லது ஆண் தெய்வமும் உடன் கூறப்பெற்றிருக்கும் [புலவர் செ. இராசு, 1976:15].

அக்காலத்தில் மங்கலதேவி மலை வணிகக் கூட்டம் செல்லும பாதையில் இருந்திருக்கிறது. சின்னமனூர் வழியாக இவ்வணிகக் கூட்டமாகிய சாத்து சென்று வந்திருககிறது. அவர்களும் இக்கோயிலுக்கு நிமந்தம் கொடுத்துத் திருப்பணி செய்திருக்க வேண்டும். இதுபற்றி ஒருகல்வெட்டில் -மாசாத்த வனிமந்தம (ஏ. ஆர். எண். 283-1966; என்ற தொடர் இருக்கிறது. கல்வெட்டின் துண்டுதான் காணப்படுகிறது. எழுத்தமைதி கொண்டு இக்கல்வெட்டு 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம. மாசாத்துவானின் வழியில வந்த ஒருவன் கொடையளித்திருக்கலாம். அல்லது பண்டைக்காலக் கல்வெட்டுக்கள் ஓரிரு வரிகளில்தான் அமையும். அதுபோல் முன்பு வெட்டப்பெற்றிருந்த கல்வெட்டு பிற்காலத்தில் மீண்டும் படி எடுத்து வெட்டப் பட்டிருக்கலாம். இது ஆய்வுக்குரியது (புலவர் செ. இராசு, 1976: 15).

குலசேகர பாண்டியனின் நாலாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (ஏ. ஆர்.எண். 279-1966). திருவாசல்மாடம் பற்றிக் கூறுகிறது. இது கோயிலின் சற்றுத் தொலைவில் சிதைந்து கிடக்கும் தோரணவாயில் அமைப்புள்ள மாடத்தைக் குறிக்கும் என்று கருதலாம். வட இந்தியச் சிற்ப முறையில் இது உள்ளது (புலவர் செ. இராசு 1976: 15).

கனகவீ(ர) என்பவர் (ஏ. ஆர்.எண். 278-1966) சக்கரகூடத்தின் மேல் வடத்தை அமைத்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. ஒரு கல்வெட்டு நாட்டாசாரியன் என்ற அதிகாரியைக் குறிப்பிடு

கிறது (ஏ. ஆர். எண். 282- 1966). இதே கல்வெட்டில், தொண்டைமானும் குறிக்கப் பெறுகிறான்.

நாயக்க மன்னர் காலத்தியக் கட்டடக் கலையின் அம்சமும் தெரிகிறது. பூஞ்ஞாறு யாத்துத் தம்பிரான் நாயக்கர் வழியில் வந்தவர்கள் என்பது சொல்லப்படுகிறது. அவர்கள் காலத்திய கூடலூர் அழகர் சாமிக் கோவில் கல்வெட்டில், மங்கலதேவிக்கு நிமந்தம் அளித்த செய்தியும் குறிப்பிடப்படுகிறது. ஆக பல்வேறு காலங்களில் திருப்பணி செய்யப்பட்டு நிமந்தங்கள் அளிக்கப் பெற்றுக் காத்து வந்த கோவிலைக் கட்டியவன் செங்குட்டுவனே என்பது தெளிவு.

சேரன் செங்குட்டுவன், இமயமலையிலிருந்து கனகவிஜயன் ஆகியவர்களால் கொண்டு வரப்பட்ட கல்லில், சிலை வடிக்கச் செய்து வைத்தான்; இது சிலம்புச் செய்தி. அவன் கண்ணகி தெய்வத்திற்கு மட்டும் சிலை செய்து வைத்திருந்தான்.

அது எந்தச் சிலை என்பது தெரியவில்லை: அங்கு நான்கு கல் கட்டடங்கள் கல் கூரையுடன் இருக்கின்றன. மற்றொரு பெரிய கட்டடத்தில் ஒரு விக்கிரகம் இருக்கிறது. இந்த விக்கிரகத்தை உத்தேசித்துத்தான் ஜனங்கள் போகின்றார்கள் என்று 1883-ஆம் ஆண்டு கெசட் கூறுகிறது. (புனித ஜார்ஜ் கெசட் - 1883: 13 நவம்பர் -1ஆவது பாகம், பக். 719- 721). ஆக, இந்தச் சிலையைத் தான், மக்கள் கண்ணகி சிலையாக எண்ணி, வழிபட்டு வந்திருக் கிறார்கள்.

அங்குள்ள நான்கு கோயில்களில், நான்கு சிலைகள் இருந்திருக்க வேண்டும். முதல் கோயில்தான் கண்ணகி கோயில்; அங்குள்ள சிலைதான் கண்ணகி சிலை; இதுதான் சேரன் செங்குட்டுவன் ஆக்கிய கோயிலாக இருந்திருக்க வேண்டும். காலப்போக்கில் வெவ்வேறு மன்னர்கள், திருப்பணி செய்யும்போது வேறு மூன்று கோயில்களைக் கட்டியிருக்க வேண்டும். தெற்கு வாசல் பக்கத்தி லுள்ள மூன்றாவது கோயிலில், சிவலிங்கம் இருந்திருக்கிறது; அதற்குள்ள அடிப்பாகம் இன்றும் இருக்கிறது; 25 ஆண்டுகளுக்கு முன், அங்கு லிங்கம் இருந்ததாகக் கூடலூர் மக்கள் கூறுகிறார் கள். அது இப்போது உடைத்தெறியப்பட்டிருக்கிறது. உடைத் தெறியப்பட்ட இடத்தில்தான், கேரள அரசினர் துர்க்கை சிலையைவைத்திருந்தார்கள். அதுவும் சமீபத்தில் உடைத் தெறியப்பட்டிருக்கிறது. இக்கோயிலில்தான், இராசராசன் கல் வெட்டு ஒன்று இருந்தது. இன்று அதுவும் உடைத்துப் பெயர்க் கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கோயிலில் இடுப்புக்கு மேற்பகுதி இல்லாத சிலையை அங்குச் சென்று வழிபட்டு வருகிறார்கள். அச்சமயம் அதுதான் கோயிலிலுள்ள சிலையாக இருந்தது. இது எந்தக் கோயிலில் இருந்ததோ தெரியவில்லை. ஒருவேளை இதே செங்குட்டுவனால் ஆக்கப்பட்ட சிலையாக இருந்திருக்கலாம். ஆனால்,அதையும் மகள், ஆய்வாளர்கள் இனங்கண்டு கொள்ள முடியாதபடி பேராசிரியா சி. கோவிந்தரசன் 1963-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17- ஆம் நாள் கோணிப்பையில் சுருட்டிக் கட்டிக் கொண்டு சென்று விட்டார். இப்போது, சிலையே இல்லாத கோயிலாக மங்கலதேவிக் கோயில் இருக்கிறது. ஒரு ஓரமாக-சுற்றுப்புறச் சுவர் ஓரமாக விநாயகர் சிலை மட்டும் கிடக்கிறது; இதுவும் ஒரு கோயிலில் இருந்து இருக்க வேண்டும். நான்காவது கோயிலில் இருந்திருக்க வேண்டும.

பேராசிரியர் சி. கோவிந்தராசன் அவர்கள் கொண்டுசென்ற சிலைபற்றிய விவகாரம் வந்தபோது, 1983-இல் அவர் விளக்கம் கொடுத்துள்ளார். மேலும், சிலைபற்றி ஆய்வு செய்வதற்காக எடுத்துச் சென்றேன். இந்தக் கல்லின் ஒரு பகுதியை எடுத்து டாடா ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பினேன். அவர்கள் இது இமயமலைக் கல்தான் என்று கூறியிருந்தார்கள். (இதயம் பேசுகிறது. 1983: 15மே.). ஆகவே இதுதான் கண்ணகி சிலை; இந்தச் சிலையின் அமைப்பும் அவ்வாறு எண்ணத் தூண்டியது. ஏறத்தாழ இரண்டடி உயர அளவில் ஒரே கல்லில் இரண்டு கைகளுடன் இடது காலை பீடத்தில் மடக்கி வலது காலை ஊன்றிய பாங்கில் இருந்த ஒரு பெண் சிலை; இதன் தலையில் கிரீடம் இல்லை;கொண்டையில் விரிந்த கூந்தல்போல்இருபுறமும் அழகு செய்யப்பட்டிருந்தது. இதுவே செங்குட்டுவன் அமைத்த சிலை; கண்ணகி சிலை. சிலை செய்யப்பட்ட கல், திண்மையில் லாத ஒருவகைக் கருங்கல். அதனால் அழிந்த கட்டடத்தில் இருந்து விழுந்த கற்களால் சிதைந்து போயிருந்தது. [ஆனந்த விகடன், 1971].

இச்சிலையைக் கலைஞரிடம் கொடுத்துவிட்டேன்; பூம்புகார் கலைக்கூடம் அமைக்கும்போது அதில் வைப்பதற்கு, இந்தச் சிலைக் கல்லிலிருந்தே சிலை செய்து வைத்துவிடலாம் என்று சொல்லியிருந்தார். நான் அவர் கொடுக்கச்சொல்லி, பூம்புகார் கலைக்கூடப் பணியைச் செய்துவந்த பொறியியலாரிடம் கொடுத்துவிட்டேன் [இதயம்பேசுகிறது, 1983: 15 மே].

இதுதான் பேராசிரியர் கொடுத்துள்ள சிலை பற்றிய அறிக்கை. இதிலிருந்து கண்ணகி கோட்டத்திலிருந்த அந்த ஒரே

சிலையும், போய்விட்டது. இப்போது விநாயகரைத் தவிர, வேறு எந்தச்சிலையும் இல்லை. ஒரு சிறந்த ஆராய்ச்சியாளராக மதிக்கப்பெற்ற பேராசிரியர் என்ன செய்திருக்க வேண்டும்? அச்சிலையைக் கோயிலிலேயே வைத்துவிட்டு, அதிலிருந்து ஒரு துண்டு கல்லை எடுத்துச் சென்றிருக்கலாம்; அல்லது ஆராய்ச்சி முடிந்தபின் சிலையைக் கொண்டுவந்து கோயிலில் வைத்துவிட வேண்டும்; இல்லை, கூடலூர் கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழுவிடம் ஒப்படைத்திருக்க வேண்டும்; அல்லது தமிழகத் தொல் பொருள் ஆராய்ச்சித்துறையிடமோ, மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிடமோ ஒப்படைத்திருக்கவேண்டும்; அல்லது ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்திடமோ, கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலோ சிலையைக் கொடுத்திருந்தால் பாதுகாக்கப் பட்டிருக்கும்; இளைய தலைமுறையின் ஆராய்ச்சிக்குப் பயன்பட்டிருக்கும்.

இப்போது வேறுவிதமாக எண்ணத் தோன்றும்படியான நிலையில் இருக்கிறது. பேராசிரியர் கொண்டு சென்ற சிலை ஏதோ ஒரு சிலையாக இருந்திருக்க வேண்டும். விநாயகர், லிங்கம் போன்ற கோயிலில் கிடந்த ஏதோ ஒரு சிலையாக இருந்திருக்க வேண்டும்; தான் கொண்டு சென்றது தான் கண்ணகி செங்குட்டுவன் அமைத்த சிலை என்று மக்கள் நம்புவதற்காக, உண்மை வெளியே தெரியாது இருப்பதற்காக [கண்ணகி சிலை, இது இல்லையென்ற உண்மை] மறைக்கப்பட்டிருக்க வேண்டும். சிலை ஆராய்ச்சி உலகிற்கே பெருத்த இழப்பாகும்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கல்லில் மனித உருவத் தைத் தற்காலத்தில் செதுக்குவது போன்று அமைத்துக் கோயில் களில் வைக்கும் பழக்கமில்லை; கோயில்களில் நடுகல்லைத்தான் நட்டு வந்திருக்கிறார்கள். சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்னும் இதே நிலைதான்.

இப்போதும் கிராமங்களில், நகரங்களில் திராவிடத் தெய்வச் சிலைகள் அவ்வாறு குத்துக்கல் அமைப்பிலேயே இருக் கின்றன: அவைதாம் திராவிடத் தெய்வங்களின் அமைப்பாகும். முன்னோர்களை வழிபடும்பழக்கம் உள்ளவர்தான் திராவிடர் கள். அந்த முன்னோர்களே, அவர்களுக்கு இறந்த நிலையில் தெய்வம் ஆகி இருக்கிறார்கள். அவர்கள் போரில் மடிந்தவர்களாகவும் இருக்கலாம்; வேறுவகைச்சிறப்பில் இறந்த வாகளாகவும் இருக்கலாம். இவ்வாறு இறந்தவர்களுக்கு நடுகல் நட்டு, தெய்வமாக்கி வழிபட்டதைப் பட்டினப் பாலைக் குறிப்பிடுகிறது: அந்த நடுகல்லுக்கும்

பக்கத்தே அவர்கள் பயன்படுத்திய பொருட்களை வைத் திருந்ததையும் குறிப்பிடுகிறது. (78-79). அந்த தெய்வம் ஏறிய நடுகற்களில் அவர்களைப் பற்றிய மேன்மைச் செய்திகளையும் குறிப்பிட்டார்கள்; மரத்தினடியில் இக்கற்களை அடையாளத் திற்காக நட்டு வைத்து வழிபட்டார்கள். (மலைபடுகடாம் 394—396.) இறந்தவர்களின் பெயர் பொறிக்கப்பட்டு, வழிபட்ட நடு கற்கள் ஐங்குறு நூற்றிலும் இருக்கின்றன (352: 1—5). மயில் தோகையை இத்தகு தெய்வமேறிய நடுகற்களுக்குச் சூட்டி வழி பட்டதை, அகநானூறும் புறநானூறும் குறிப்பிடுகின்றன. (67;8—11; 264: 1-4) நடுகற் கடவுளை வழிபடுவதற்கு அக் கல்லில் மயிற்றோகைகளைச் சூட்டி, துடியை அடித்து, நெல் லாலாக்கிய கள்ளோடு செம்மறிக் குட்டியைப் பலி கொடுத்து வழிபட்டிருக்கிறார்கள் என்பதை அகநானூறு குறிப்பிடுகிறது (35:8—9). புறநானூறும் இதைத் தெளிவாக்குகிறது (264: 1—4). இத்தகைய தெய்வமேறிய கல்லில் மயிற்றோகைகளைச் சூட்டி துடியை அடித்து' நெல் அரிசிச் சோற்றோடு செம்மறிக் கடாயை அடித்துப் பலி கொடுப்பர்; கள்ளையும் சேர்த்து வைத்து வழி படுவர் (அகநானூறு 35 : 8—9). கள்ளை அக்கால மக்கள் வழக்கமாக இத்தெய்வங்களுக்குப் படைத்த செய்தியைக் காண்கிறோம் (புறநானூறு 232:3—4). ஆக, இக்காலத்தில் நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு மதுவும் சோறும் மலரும் கறியும் படைக்கப்பட்டு வழிபடுவது போன்று அக்காலச் சமுதாயத்தும் நடைமுறைப் பழக்கம் இருந்ததை அறிகிறோம். ஆகவே, நடுகல் நட்டு தெய்வத்தை—திராவிடத் தெய்வத்தை வணங்கிய முறை தான் இருந்து வந்திருக்கிறது. இதை இன்று தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்படுவோர் வணங்கும் தெய்வங்களான மதுரை வீரன், இருளன், கறுப்பன், நொண்டி . முதலியன நடுகல் வகுப்பைச் சேர்ந்தவை என டாக்டர் சு. வித்தியானந்தன் கூறுவ திலிருந்தும் அறியலாம் (1971;125).

நடுகல் நட்டுத் தெய்வம் வணங்கும் முறை அக்காலத்தில் இருந்தமையால், தொல்காப்பியரே பொருளதிகாரத்தில் இதற்கு விதி வகுத்துள்ளார்; நடுகல்லை எப்படி அமைக்க வேண்டும் என்பது பற்றி விளக்கிக் கூறுகின்றார் (60:19—21).

> ''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
> றிருமூன்று வகையிற் கல்லொடு''

என்பதே அச்சூத்திரம்.

(1) காட்சி-அளவும் அமைதியும் நோக்கிக் கல் தெரிந்தெடுத்தல். இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட பின்னால் அக்கல்லில் ஓர் உருவம் செதுக்கப்படும். அவ்வுருவம் சிலவிதிகளுக்கேற்ப அமைந்திருத்தல்வேண்டும்.

(2) கால்கோள்-அக்கல்லை நடுதற்குரிய நல் நிமித்தம் பார்த்தல்.

(3) நீர்ப்படை-அக்கல்லை நீராட்டுதல்.

(4) நடுதல்-ஏற்ற இடத்தில் கல்லை நடுதல்.

(5) விழா-கோயிலுக்கு வேண்டிய கட்டடங்கள் கட்டுவதும், வீரன் செயல்களைக் கல்விற் பொறிப்பதும் இவ்விழாவில் நடைபெறுவன.

(6) வாழ்த்துதல்-கல்லை வணங்குதல்.

இவ்வாறு,டாக்டர் சு.வித்தியானந்தன் விளக்கம் கூறுகிறார் இக்கற்றெய்வங்களைச் சங்க நூல்கள் அடிக்கடி கூறுகின்றன வாதலின் அக்காலத்திலே அவை சிறப்புற்றிருந்தன வென்றே கொள்ள வேண்டும். மேலே கூறியவாறு. இப்பொழுதும் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் காணப்படுகின்ற ஐயனார் கோயில்கள் வீரர்க்கு, கல்லமைக்கும் இவ்வழக்கத்தோடு தொடர்புடையனவாய் இருக்கலாம் என்றும் கருதுகிறார் (1971: 126).

ஆகவே ஆய்வாளர் கொண்ட கருதுகோளின்படி திராவிடத் தெய்வக் கோயில்களில் சிலை இன்றுள்ள அமைப்பின்படி அமைக்கப்படவில்லை என்பது தெரிகிறது; நடுகல் பழக்கம்தான் இருந்து வந்திருக்கிறது. ஆகவேதான் இன்றும் கிராமக் கோயில்களில் இம்முறை இருந்து வருகிறது. இதன்படியேதான் சிலப்பதிகாரக் காலத்திலும் இருந்திருக்க வேண்டும்; ஆகவேதான் சேரன் செங்குட்டுவன் இமயமலையிலிருந்து கல் எடுத்தவுடன்கங்கையில் நீர்ப்படை முதலிய சடங்குகளைத் தொல்காப்பியர் விதித்தபடியே செய்திருக்கிறான்; இதைச் சிலப்பதிகாரம் ஒப்புகிறது.

மேலும், இக்காலத்தைப் போல சங்க காலத்தில் உருவ வழிபாடு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் மன்றங்களில் மக்கள் வணக்கத்திற்காகக் கற்கள் நிறுவப்பட்டன. இத்தகையக் கற்றெய்வங்களைப்பற்றிப் பட்டினப்பாலைத் தெளிவாக்குகிறது. கொண்டி மகளிர் துறையிலே சென்று முழுகி மன்றத்தினை மெழுகுவர், அந்திக்காலத்திலே அவியாத விளக்கினை ஏற்றுவர்; கற்றெய்வத்தை மலரால் அணிபெறச் செய்வர்'' (பட்:246-249).

தாம் உறைந்த கற்களை விடுத்து தெய்வங்கள் நீங்க அதனால் பாழடைந்த அம்பலத்தைப் பற்றிப் புறநானூறு குறிப்பிடுகின்றது (52:12-13). புதர்கள் படரப்பெற்ற பொதியிலிடத்தே தெய்வம் கைவிட்டுப் போன வலிய தாளினையுடைய தூணைப்பற்றி அகநானூறு கூறுகின்றது (307: 11-12).

ஆகவே, சங்க காலத்தில் உள்ளது போன்றே அக்காலத்திலும் உருவ வழிபாடு இல்லாது திராவிடத் தெய்வங்கள் பல இடங்களில் வணங்கப்பட்டுவருவது தெரிகிறது. திருவிழாக் காலங்களில் புதிய கல்லை வைத்தோ, மண் உருவங்களை வைத்தோ வழிபடுகின்றனர்; தெய்வம் அதன்மீது ஏறி நிற்கின்றது; பழைய கல்லை, உருவங்களை வெளியிலோ, நீர்த்துறையிலோ விட்டுவிடுகின்றனர்; அவற்றில் தெய்வம் நீங்கியதாகக் கருதப்படுகின்றது.

இவற்றையெல்லாம் ஒப்பிட்டு பார்க்கும்போது, சேரன் செங்குட்டுவன் மங்கலதேவிக் கோயிலில் கண்ணகிக்கு இக்காலச் சிலை போன்ற அமைப்பில் சிலை வைக்கவில்லை என்றும், நடுகல் அமைப்பில்தான் கண்ணகிக்கு நினைவுச் சின்னம் எழுப்பியிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. ஆகவே பேராசிரியர் சி. கோவிந்தராசன் கொண்டு சென்ற சிலை, செங்குட்டுவன் அமைத்த கண்ணகி சிலை அல்ல; அது திருப்பணி செய்த மன்னர்களால் அமைக்கப்பட்ட கண்ணகி சிலையே ஆகும் என்று உறுதியாகக் கூறலாம்.

பேராசிரியர் சொல்லக்கூடிய சிலையின் அமைப்பும், மதுரையிலுள்ள செல்லத்தம்மன் கோயிலிலுள்ள கண்ணகி சிலையின் அமைப்பும் ஒன்றுபோல இருப்பதாகத் தோன்றுகிறது.

இக்கோயில் முன்பு மதுரையின் வடக்கு வாசல் என்று கருதப்பட்ட இடத்தில் இருக்கிறது. கண்ணகி சிலை முதலில் கோயிலின் உள்ளே-கருவறையில் இருந்ததாகவும், பின் பெயர்த்தெடுக்கப்பட்டு வெளியில் வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இப்போது, உள்பக்கத்தில் துர்க்கை சிலை போன்ற அமைப்பில் சிலை இருக்கிறது. செண்பகமாறப் பாண்டியனால் வடக்கு வாசல் காவலுக்காக வைக்கப்பட்டது தான் இக்கோயில். செண்பகமாறன் வைத்த அம்மன் ஆதலால், இது செண்பகச் செல்வி என்று அழைக்கப்பெற்று செல்வியம்மனாகி செல்லத்தம்மனாகிவிட்டது. என்று கூறப்படுகிறது (கோவில் பூசாரி; 10.6.1985).

மங்கலதேவிக் கோயில் ஒரு மாலைக்கோயில் என்றும், தெய்வம் மாலையம்மன் என்றும் முன் பகுதியில் சொல்லப் பெற்றது. மாலைத் தெய்வம், மாலையம்மன், மாலைக் காளியம்மன், தீப்பாய்ந்த அம்மன் என்று கூறுவதெல்லாம் வெவ்வேறு பகுதிகளில் வழங்கும் மாலைத் தெய்வத்தைக் குறிப்பிட்டுக் கூறும் பெயர்களாகும்; இவையெல்லாம் பொதுப் பெயராகக் கூறப்படுபவை. ஆனால், அத்தெய்வத்திற்குச் சிறப்புப் பெயர் ஒன்று இருக்கவேண்டும்; அத்தெய்வமா வதற்கு முன், மனிதனாக இருக்கும்போது வழங்கிய பெயரையே சிறப்புப் பெயராக வழங்குவர்; இதைத்தான் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும்போதும் வைப்பார்கள். இந்த முறையில் மங்கலதேவி என்பது பொதுப்பெயராக மாலை யம்மன் என்று கூறுவதற்கு வழங்கப்பெற்றது. இம்மங்கலதேவி யாகிய மாலைத் தெய்வத்தின் இயற்பெயர்-சிறப்புப் பெயர் கண்ணகி யாகும். ஆகவே இந்த மாலைத் தெய்வம் மங்கல தேவி கண்ணகி என்று அழைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

மாலைத் தெய்வத்தின் கூறுபடி, மங்கலதேவி கண்ணகியும் தீக்குழி பாய்ந்து இறந்திருக்க வேண்டும்; அல்லது தானாக, அலைந்து திரிந்த அலைச்சலால், மனத்துயர் மிகுதியால் இறந் திருக்க வேண்டும். இதை நேரில் கண்டவர்கள் அங்கிருந்த குன்றக் குறவர்களே ஆவர். இக்குறவர்கள் அன்று கண்ணகி யோடு கண்ணகி மலைமீது ஏறி வரும்போதே வருச நாட்டுப் பகுதியிலிருந்து வந்திருக்க வேண்டும். வரும்போது அவளைப் பற்றிக் கேள்வி கேட்டுத் தெரிந்து வந்திருக்க வேண்டும். அல்லது மங்கலதேவி மலைப்பக்கத்திலேயே வாழ்ந்தவர்களாக இருக்க வேண்டும். எது எவ்வாறு இருந்தாலும் கண்ணகி இறப்பதற்குமுன் அவளைப் பற்றிய முழுச் செய்திகளையும் தெரிந்து வைத்தவர்களாக குன்றக் குறவர்கள் இருந்தார்கள். ஆகவேதான் சேரன் செங்குட்டுவனிடம் செய்தியை மாறுபாடு இல்லாமல் சொன்னார்கள். கண்ணகி இறந்ததை, கணவனோடு போய்ச் சேர்ந்துவிட்டாள் என்று சொன்னார்கள். இறந்ததை இன்றும் வானுலகு அடைந்து விட்டார்கள் என்று கூறுவதைப் போல அன்றும் குறவர்கள் கண்ணகி வானுலகை அடைந்தாள் என்று கூறியிருக்க வேண்டும். இதை அவர்கள் கோவலன் வானத்தில் தோன்றி, விமானத்தில் அழைத்துச் சென்று விட்டான் என்று கூறிவிட்டார்கள். சிலம்புச் செய்தியும் அப்படியே இருக்கிறது.

குன்றக் குறவர்கள் கண்ணகியைப் பற்றிக்கூறியவுடன், சேரன் செங்குட்டுவன் பயத்தால் நடுங்கியிருக்கவேண்டும்; தன் நாட்

டிலும், மதுரையைப் போன்று நேர்ந்துவிடக் கூடாது என்று அஞ்சியிருக்க வேண்டும். இந்தப்பயம் கண்ணகிமீது மரியாதையைத் தோற்றுவித்திருக்கவேண்டும். ஆகவே, மாலைத் தெய்வத்திற்கு, மங்கலதேவிக்கு கோயில் சமைக்க விரும்பியிருக்கிறான். அதற்குச் சரியான முறையில் சிறப்புச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுந்தபோதுதான், வடநாட்டுப் படையெடுப்பு எழுந்தது. ஆகவே, அங்கிருந்தே கல் கொண்டு வந்து, சிலை அமைக்கும் எண்ணம் எழுந்து செயலாக்கியிருக்கிறான். எல்லாம் தற்செயலால் நடந்தவையாகவே இருந்துவிட்டது.

மதுரையைக் கண்ணகி எரித்தபின், அங்கு மழையில்லாமல் வாடியிருக்கிறது; இதையெல்லாம் சேரன் கேள்விப்பட்டுச் சிறப்பாக வழிபாடு நடத்தி மங்கலதேவிக் கோயில் கட்டியிருக்கிறான். ஆகவே, திராவிடத்தெய்வம் தோன்றுவதற்கான- வழிபாடு செய்வதற்கான- காரணமாக பயம் இங்கும் ஆதிக்கம் செலுத்துகிறது; மழை முக்கிய காரணமாகியிருக்கிறது: நோய் நொம்பல் பரவிவிடக் கூடாது என்ற நோக்கம் இந்தபயத்தினால் எழுந்திருக்கிறது. மன்னனைக் கோயில் கட்டத் தூண்டியிருக்கிறது. கோயில் எழுப்பப்பட்டுவிட்டது. மங்கலதேவியாக மாலையம்மன்-மழையம்மனாகி-மாரியம்மனாகி வந்திருக்கிறது. பின் மழைக்காகவே கோயில் கும்பிடும் நிலைமை வந்திருக்கிறது. இன்றும் இப்பகுதி மக்கள், மழை வேண்டியே இக்கோயிலுக்கு வழிபாடு நடத்துகிறார்கள்; மழைக்கஞ்சி ஊற்றி வழிபடுகிறார்கள். நோய் நொம்பல் தீர வேண்டியும் வழிபடுகிறார்கள்.

சேரன் செங்குட்டுவன் மங்கலதேவி மலையில் கட்டிய மாலைக் கோயில் மூலக் கோயிலாகும்; அதாவது இங்கே தான் முதன் முதலில் கண்ணகிக்குக் கோட்டம் எழுப்பப்பட்டிருக்கிறது; இதற்கு அடுத்து மன்னன் தானும் தன் ஊரிலுள்ளவர்களும் நாள்தோறும் வழிபடுவதற்காக அருகிலேயே கோயில் எழுப்பியிருக்கிறான்; இதுதான் கொடுங்கோளூர் கோயில்; இதுபிடிமண் கோயிலாகும்; இதை ஒற்றை முலைச்சியம்மன் என்றும், பகவதியம்மன் என்றும் கூறி வருகிறார்கள். உறுப்பு குறைந்தநிலையைக் குறித்தே இவ்வாறு வழங்கியிருக்க வேண்டும். ஆகவே, இது கண்ணகி கோயில்தான்; பிடிமண் கோயிலாகும். உறுப்புக் குறைந்த நிலையைக் கொண்டு தெய்வத்திற்கு அதையே பெயராக வழங்கி வருவது, திராவிடத் தெய்வ வழிபாட்டில் உள்ளதுதான். திருமங்கலத்தில் உள்ள மாலைக் காரியம்மன் கோயிலில் இடுப்புக்கு மேல் உள்ள சிலையைத்தான் வைத்திருக்கிறார்கள். நெருப்பில் எரியும்போது, கீழ்ப்பகுதி முழுவதும்

எரிந்துவிட்டதால், மேல்பகுதி உடலை எண்ணும் நோக்கில் இவ்வாறு சிலை வைத்துள்ளார்கள். ஆகவேதான், பேராசிரியர் கொண்டு சென்ற கண்ணகி சிலையும் ஒற்றை முலையில்லாது காணப்பட்டதாகக் கொள்ளலாம். இந்த முறையில்தான் கொடுங்கோளூர் கோயில் சிலையும் இருந்திருக்க வேண்டும் அதனால் தான் ஒற்றை முலைச்சி என்று வழங்கி இருக்க வேண்டும்.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் இதைப் போன்றே, நொண்டிக் கருப்பு, சப்பாணிக் கருப்பு, என்ற பெயருள்ள தெய்வங்கள் போற்றப்பட்டு வந்திருக்கின்றன. கொடுங்கோளூர் ஒற்றை முலைச்சியம்மன் பிற்காலத்தில் பகவதியம்மன் என்று வழங்கியிருக்க வேண்டும். இது மேல் மருவத்தூர் காளிகோயில் இப்போது ஆதிபராசக்தி என்று அழைக்கப்பட்டு வருவதைப் போன்றதே. மேல் மருவத்தூரில் இருந்ததுதான் காளிகோயில்; இது ஒரு சாதாரண கோயில்; ஆண்டுக்கொருதரம் பூசை கண்ட கோயில்; அதுவும் இல்லாது இருந்த காலமும் உண்டு. ஆனால், மூன்று வேளையும் வழிபாடு உள்ள கோயிலாக இன்று மாற்றப்பட்டுள்ளது போல, ஒற்றை முலைச்சியம்மனும் பகவதியம்மனாகி யிருக்கலாம்; இலங்கையின் வடபகுதியில் இருந்த கண்ணகி கோயில்கள் எல்லாம் இராஜேஸ்வரி கோயில்களாக்கப்பட்டிருப்பது போன்றுதான் இங்கும் ஆகியிருக்கிறது கந்தையா.வி.சீ. 1964 : 159).

ஒற்றை முலைச்சியம்மன் கோயில் போன்றே, பிடிமண் கோயில் தமிழகத்தின் பல பகுதிகளில் சேரன் செங்குட்டுவன் காலத்திலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும்; அவ்வாறு எழுப்பப்பட்ட கோயில்தான் இலங்கையிலுள்ள பத்தினித் தெய்வக்கோயிலென்று அழைக்கப்படும் கண்ணகி கோயில்கள். மட்டக்களப்புப் பகுதியில்தான் இக்கோயில்கள் மிகுதியாக உள்ளன. லண்டன் மியூசியத்திற்குச் சென்று இன்றும் காட்சிப் பொருளாகவுள்ள கண்ணகி சிலை இங்கிருந்துதான் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. இது ஐம்பொன்னால் ஆனது.

திருச்செங்கோட்டிலும் கண்ணகி தங்கி தெய்வமானாள் என்று சொல்லுவதும் இதைப் போன்றதே. அதாவது, கொங்கு நாட்டிலிருந்து, சேரன் செங்குட்டுவன் எழுப்பிய மங்கலதேவிக் கோயில் விழாவின்போது வந்து சென்ற மன்னன் பிடிமண் எடுத்து வந்து செங்குன்றாகிய திருச்செங்கோட்டிலும் கோயில் எழுப்பிக் கண்ணகி வழிபாடு செய்திருக்க வேண்டும்.

இதைப் போன்றே மங்களூர்ப் பகுதியிலிருந்து வந்தவர்கள் பிடிமண் எடுத்துச் சென்று மங்கலதேவிக் கோயில் எழுப்பியிருக்க

வேண்டும். ஆகவேதான், அவ்வூர் மங்களூர் என்று சிறப்புக் கருதி வழங்கி வந்திருக்க வேண்டும். கிரேக்க ரோமானியர்கள் முன்காலத்தில் இங்கு வந்துபோன மிகப் பழமையான நினைவு களையெல்லாம் இம்மங்களூர் கொண்டிருக்கிறது. தாலமி என்ற வரலாற்று அறிஞன் இதைப்பற்றித் தன்னுடைய குறிப்பில் குறிப்பிடுகிறான். (N. Ramakrishnan, mirror 1865 : 59). ஆகவே மங்களூர், சேரன் செங்குட்வன் காலத்தில் எழுப்பப்பட்ட, மங்கலதேவியைப் பிடிமண்ணாக எடுத்து வந்த காலத்திலிருந்து தோன்றியதாகக் கொள்ளலாம்.

இவ்வாறே வெவ்வேறு காலங்களில் பிடிமண் கோயில்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். தஞ்சையில் இராஜராஜன் காலத்தில் கட்டப்பெற்ற கண்ணகி கோயில், சிங்கள நாச்சியம்மன் கோயிலாகி,'செங்களாச்சியம்மனாக இன்று இருக்கிறது. இதைப் போன்றே நாட்டிலுள்ள பகவதி, செல்லியம்மன் கோயில்கள் எல்லாம் ஆகியிருக்க வேண்டும். மாரியம்மன் கோயில் நேரிடையாகவே வந்த பெயராகி இருக்க வேண்டும். மழைக் கடவுள் என்று வந்திருக்கவேண்டும். கண்ணகியைத்தான் அவ்வாறு அழைத்து வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு அழைக்கப்பெற்று வந்த கண்ணகி எந்த குலத்திற் காகவாவது குலதெய்வமாக வழிபடப்பட்டு வந்திருக்கிறதா? இனத் தெய்வமாக வழிபடப்பட்டு வந்திருக்கிறதா என்றால் இல்லை என்ற பதில்தான் கள ஆய்வில் கிடைத்தது. கவுண்டர்களும் தேவர்களும்தாம் அக்கோவிலுக்கு முக்கியமாகச் சென்று வழிபாடு செய்கிறார்கள். ஆகவே, அம்மங்கலதேவி கவுண்டர்களுக்குக் குல தெய்வமாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அதுவும் இல்லை என்பது ஆய்வில் கண்டு கொள் ளப்பட்டது. நாட்டுப்புறத் தெய்வக் கோட்பாட்டின்படி அப் பகுதி மக்களுக்குக் குலதெய்வமாகவோ இனத்தெய்வமாகவோ இருந்தால், உறுதியாக மங்கலதேவி, கண்ணகியாக இருக்க முடியாது என்று கொள்ளலாம்; அவ்வாறு இல்லாததால் மங்கலதேவி கண்ணகியே என்று அறுதியிட்டுக் கூறலாம்.

மேலும், அப்பகுதியில் மருத்துவர்களை (நாவிதர்) மங்கிலியர் என்று கூறி வருகிறார்கள்; அவர்கள் குறிப்பாக வழிபடுவதைப் பார்த்து இது அவர்கள் தெய்வமாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை எழுப்பினார்கள். மங்கலியர்களுக்குக் குல தெய்வம் மதுரைவீரன்; அதற்கு அங்கு கூடலூரில் கோயில் இருக்கிறது. அதை வழிபடும்போது, முதலில் மங்கலதேவியை வணங்கி வழிபடுகிறார்கள், கூடலூரில் எல்லா இனத்தாரும் குல தெய்வத்தை வழிபடும் முன், மங்கலதேவியை வழிபடுகிறார்கள்.

இதை அவர்கள் ஊர்த் தெய்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இம்முறையில்தான், மங்கிலியர்களும் மங்கலதேவிக்குச் சிறப்பு செய்து வருகிறார்கள்.

மங்கலதேவிதான் கண்ணகி என்றும், மங்கலதேவிக் கோயில், சேரன் செங்குட்டுவன் எழுப்பிய கண்ணகி கோட்டமே என்றும் முடிவு கூறிய நிலையில் 19. 3. 1976, 20. 3. 1976 ஆகிய நாட்களில் அறிக்கை நாளிதழ்களில் வெளியிடப்பட்டிருந்தது. இவ்வறிக்கையில் சிலசந்தேகங்கள் வலிந்து எழுப்பப்பட்டிருந்தன மங்கலதேவி கோயில் கண்ணகி கோட்டமில்லை என்று அவ்வறிக்கை கூறியது. அதில் குறிப்பிடப்படும் தடைகளும் அவைகளுக்கான ஆய்வாளரின் விடைகளும் இங்குக் கொடுக்கப்படுகின்றன.

1. தமிழ்நாட்டில் கி. பி. 6- ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கட்டடமே இல்லை.

இப்போது மங்கலதேவி கட்டடம் முற்கால சோழர்களாலும், அதற்குப்பின் பாண்டியர்களாலும் சீரமைக்கப்பட்டுத் திருப்பணி செய்யப்பட்டது என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மை; முதலில் அக்கோட்டத்தை அமைத்தவன் சேரன் செங்குட்டுவனே ஆகும். இன்று நாம் காணும் கோயில்கள் எல்லாம் ஒருவரால் கட்டப்பட்டுத் தோற்றம் அளிக்கக் கூடியவையாக இல்லை என்பதும் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மை. ஆகவே, சேரன் செங்குட்டுவன் அமைத்த மங்கலதேவிக் கோயிலுக்கு, இராசராசனும் மற்றவர்களும் திருப்பணி செய்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இது இவ்வாறிருக்க, தமிழ்நாட்டில்

கி. பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கட்டடம் எதுவும் இல்லை என்று கூறி இந்த மங்கலதேவிக் கோயில் கண்ணகி கோட்டமில்லை என்று ஒதுக்குவது சரியான வாதமாகத் தெரியவில்லை.

2. 1904-இலேயே தொல்பொருள் துறைக்குத் தெரிந்திருந்த விவரம் மங்கலதேவி கோட்டமே.

இக்கூற்று யாவரும் அறிந்ததே. கூடலூர் மக்கள் மங்கல தேவி என்று எப்போதோ சொல்லி வருகிறார்கள்; அதுதான் கண்ணகி கோயில் என்றும் கூறிவந்தார்கள். இந்தத் தொல் பொருள் ஆய்வுத் துறையின் செய்தியைக் கொண்டுதான் பேராசிரியர் வீ. ஆர். இராமச்சந்திர தீட்சிதர், தன்னுடைய ஆங்கில மொழிபெயர்ப்பான சிலப்பதிகாரத்தின் அடிக்குறிப்பில் குறிப்பிடுகிறார்; மங்கலதேவி என்பது சிலப்பதிகாரம் குறிப்பிடும் மங்கலமடந்தையே என்ற நோக்கத்தில் அவரும் எடுத்தாள்கிறார் (1978:395). தமிழ்ப்பேராசிரியர் சி. கோவிந்தராசன் செய்தி வெளியிட்டபின் விரைவாக அறிக்கை வெளியிடுவதன் நோக்கம் புரியவில்லை. அன்றைய முதலமைச்சர் கலைஞர் 1971-இல் இளங்கோவடிகள் சிலைத் திறப்பு விழாவில் வெளிப்படையாக மங்கலதேவி கோயில் கண்ணகி கோயிலே என்று பேராசிரியர் சி. கோவிந்தராசன் கருத்தைப்பின் பற்றிக் கூறும்போதும் மறுப்பறிக்கை ஏதும் அப்போது வெளிவரவில்லை. காலங் கடந்தே தமிழறிஞர்களால் கண்ணகிகோயில் என்று மெய்பிக்கப் பட்ட 10 ஆண்டுகளுக்குப்பின்னே, இவ்வறிக்கை வந்தது. இதிலிருந்து இக்கருத்து ஆதரவற்று இருக்கிறது என்பது தெரியும்.

3. கண்ணகி சிலை என்று சொல்லப்படுவது 16, 17-ஆம் நூற்றாண்டு சிலையேயாகும்.

இப்போது சிலையே கோட்டத்தில் இல்லை. இது ஆராய்ச்சியாளருக்குள்ள குறைதான்; ஆய்வாளரும் சிலையை-கண்ணகி சிலையைப் பார்த்தது இல்லை. பேராசிரியர் கோவிந்தராசன் சிலையை எடுத்துச் சென்று விட்ட விவரம் ஏற்கனவே சொல்லப்பெற்ற செய்தி. அவருடைய கூற்றுப்படி, இது சேரன் செங்குட்டுவன் அமைத்த சிலையே.

திருப்பணி செய்யும்போது, சிலைகூட மாற்றம் செய்யப் படுவது இயல்பே. இப்போது மங்கலதேவிக்கோயிலில் சிலை இல்லாது இருப்பது போல, அப்போதும் இருந்திருக்கலாம்; காட்டுப்பகுதி; யானைகள் அங்கேதான் சரணாலயம் அமைத்துக் கொள்கிறது. ஆகவே, சிலை சிதைந்திருந்த நிலையில் வேறு சிலைவைக்கப்பட்டிருக்கலாம். இப்போது கோவிந்தராசன் சிலையைக் கொண்டு சென்று விட்ட பின், கேரள அரசு, துர்க்கைதேவி சிலையை வைத்ததும், அதுவும் உடைபட்டபோது வெறுமனே காட்சியளிப்பதும் இன்று நாம் காணும் காட்சியே இந்த நிலையில்தான், காலந்தோறும் சிலை மாற்றப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு மாற்றப்பட்டு வந்திருக்கிற சிலை ஒரு வேளை, 16, 17-ஆம் நூற்றாண்டு சிலையாகவும் இருந்திருக்க லாம். ஆகவே, இதைக்கொண்டு, நாம் இதைக்கண்ணகிகோட்ட மில்லை என்று மறுத்துக் கூறுவது முற்றிலும் தவறாகும்.

4. கண்ணகியின் கோயிலைச் செங்குட்டுவன் தனது தலைநகரில் அமைத்தான் என்று இலக்கியத்தில் ஆதாரம்உண்டு.

கண்ணகி கோயிலைச் சேரன் செங்குட்டுவன் மலையில்தான் அமைத்தான் என்பதற்கு ஆதாரம் முன் பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டது; அதுவும் மங்கல தேவியான மலையிலே என்பதும் கூறப்பட்டது. இது இவ்வாறிருக்க, தலைநகரில் செங்குட்டுவன் அமைத்தான் என்பது ஒவ்வாத வாதம். தலை நகரில் கோயில் அமைத்தான் என்ற வாதத்தை ஏற்றுக் கொண்டாலும், அது மூலக் கோயிலாக இருக்காது; பிடிமண் கோயிலாகத்தான் இருக்க வேண்டும். தான் வணங்குவதற்காக செங்குட்டுவன் கோயில் அமைத்தான் என்றும் கூறப்பட்டிருக் கிறது.

5. மங்கலமடந்தைக் கோட்டம் மலையுச்சியில் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

மங்கலதேவியாகிய கண்ணகி கோட்டம் மலையுச்சியில் இருக்கிறது என்பது தெளிவாகச் சொல்லப்படுகிறது. இது

பற்றிச் சிலப்பதிகாரமே தக்க சான்றுகளைக் கூறுகிறது. உயர் வான மலை முகட்டில் - எதிரொலிக்கும் மலையில், அதுவும் யானைமுகம் போன்ற தனிக்குன்றின் பிடரிபோன்ற பகுதியில், கோயில் இருக்கிறது என்றுதான் சிலப்பதிகாரம் கூறுகிறது. (வரந்தரு காதை). ஆகவே இக்கருத்தும் தவறானதே.

இங்குக் கூறிய கருத்துக்களைக் கொண்டு, தொல்பொருள் ஆய்வுத்துறை உயர் அதிகாரியின் கருத்துத் தடை-கண்ணகி கோட்டமில்லை என்ற கருத்து சரியில்லை என்று தெரிகிறது; வேண்டுமென்றே திரித்துக் கூறிய கருத்தாகத் தெரிகிறது; அவ்வாறுதான் அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தொகுத்துக் கூறின், ஆய்வின் முடிவாகக் கீழ்க்கண்ட செய்திகளைக் கூறலாம்; கண்ணகி மதுரையை விட்டுப் புறப்பட்டு, வையையின் தென்கரை வழியாகப் புறப்பட்டுக் குன்னூரை அடைகிறாள்; அதற்குத் தெற்கில் அமச்சியாபுரத்தருகில் வையையோடு சேரும் முல்லை ஆற்றின் கரை வழியே செல்லாது மீண்டும் வையையின் தென்கரை வழியாகவே கடமலைக்குண்டு, மயிலாடும் பாறை, வருசநாடு செல்கிறாள்; அங்கிருந்து வையைக்கரை வழியாகவே சென்று, வையை ஆறு மலைமீது ஏறும் பொம்மக்காக் கடை என்ற இடத்தில் கண்ணகியும் செங்குன்றாகிய நெடுவேள் குன்றில் அடியெடுத்து வைத்து ஏறி, காடு மேடு சுற்றி அலைகிறாள்; அந்நெடுவேள் குன்றில் கண்ணகி, நெடுவேள் குன்றின்வழியே அமைந்த தொடர்ச்சியும் தனிக் குன்றுமாகிய மங்கலதேவி மலைக்கு வருகிறாள்; குன்று யானையின் முகம் போன்ற அமைப்புள்ளது; இவ்வானைக் குன்றின் பிடரியில பூத்த வேங்கை மரக் கானல் மூன்று இருக்கின்றன; அவற்றில் இடையதாகிய சோலையில் கண்ணகி களைப்பால் வந்து தங்கினாள்; குன்றக் குறவர்கள் காண இறந்து தெய்வமாகிறாள்; மாலைத் தெய்வமாகிறாள்; மங்கலதேவி எனப் பெயர் பெறுகிறாள்; மங்கலதேவியின் செய்தியைக் குன்றக் குறவர்கள், பேரியாற்றங்கரைக்கு-மங்கலதேவி மலைக்குத் தெற்கிலுள்ள ஆற்றங் கரைக்கு மலைவளம் காண வந்திருந்த சேரன் செங்குட்டுவனிடம் கூறுகிறார்கள்; மங்கலதேவி மலையில் தெய்வமான இடத்திற்கருகில் நீர் சுனை ஒன்று இருக்கிறது. மன்னனும் மங்கலதேவியாம் கண்ணகிக்குக் கோட்டம் சமைக்கிறான்; இமயத்திலிருந்து கொண்டு வந்த கல்லில், கண்ணகியாம் பத்தினித் தெய்வத்திற்குச் சிலை வடிக்கச் செய்து நிலைநிறுத்துகிறான்.

இவ்வாறு, சிலப்பதிகாரத்தில் கூறியபடியே மலையில் இன்றும் காட்சி இருக்கிறது. அம்மங்கலதேவிக் கோட்டத்தைப்

பத்தினித் தெய்வ வழிபாட்டின்படி, முதலாம் இராசராசன் சீரமைத்துத் திருப்பணி செய்து வைக்கிறான்; இதற்கு அவனுடைய கல்வெட்டும் சான்று பகருகின்றது; அவன் தஞ்சையில் பத்தினித் தெய்வ வழிபாட்டிற்காக கோயிலும் கட்டியிருக்கிறான்; இவனை யடுத்து பாண்டியர்கள் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்திருக்கிறார்கள்; அவர்களை யடுத்து நாயக்கர்களும் அவர்கள் வழிவந்த பூஞ்ஞை யாத்துத் தம்பிரான் போன்ற கேரள மன்னர்களும் திருப்பணி செய்திருக்கிறார்கள் சாத்து என்ற வணிகக் கூட்டத்தினரும் இதற்குத் திருப்பணி செய்து வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு காலந்தோறும் மாறுபாடடைந்து வந்திருக்கின்ற மங்கலதேவிக் கோயில் இன்று இந்தக் கட்டடங்களைக் கொண்டிருக்கிறது. கூடலூர் கம்பம் பகுதி மக்கள் அன்றிலிருந்து இன்றுவரை ஊர்த் தெய்வமாகப் போற்றி வழிபட்டு வருகிறார்கள்; மழைத் தெய்வமாக, நோய் நீக்கும் தெய்வமாக வணங்கி வருகிறார்கள்; எல்லைத் தகராறு காரணமாகச் கோயிலில் நுழையக் கூட உரிமையில்லாத நிலையில் இம்மக்கள் வாட்டத்தோடு இருக்கிறார்கள்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு அமைத்த கோட்டம் மங்கலதேவி கோயிலேயாகும்; கொடுங்கோளூர், மங்களூர், இலங்கை, தஞ்சை, திருச்செங்கோடு ஆகிய இடங்களில் கண்ணகியின் பிடிமண் கோயில்களே இருக்கின்றன; மங்கலதேவி கோயிலே கண்ணகி மூலக் கோயிலாகும்.

# 7. மங்கலதேவி கண்ணகி கோட்ட அமைப்பு

கூடலூர் குமுளிச் சாலையில் பொன்னையாக் கவுண்டர் மேல்நிலைப்பள்ளிக்கு அருகில் நின்று பார்த்தால், மங்கலதேவி மலை தெரியும். யானைமுகம் போன்ற தோற்றம் அளிக்கும்; இதைத்தான் சிலப்பதிகாரம் ''பிணிமுகம்'' என்று கூறுகிறது. இந்த யானை முகப் பிடரியில் மூன்று சோலைகள் தெரிகின்றன. நடுச்சோலையில்தான் மங்கலதேவிக் கோட்டம் இருக்கிறது.

கூடலூரிலிருந்து இரண்டு வழிகளில் இம்மலைக்குச் செல்லலாம். கூடலூரிலிருந்து தெற்காக மூன்று மைல்தூரம் கால் நடையாக நடந்து சென்றால் மலையடிவாரத்தை அடையலாம்; அங்கிருந்து 4 மைல் மலைமீது ஏறிச் செல்ல வேண்டும்; சரியான பாதையில்லை. ஒற்றையடிப்பாதை; வழுக்கல் பாறை வழி; சறுக்கிவிழ ஏதுவாகும் பாதை. இப்பாதையும் கோயிலும் வண்ணாத்திப் பாறை பாதுகாக்கப்பட்ட வனத்தில் இருக்கிறது. இப்பாதை வழியாகச் சென்றால் வடக்கு வாசல் வழியாகக் கோயிலை அடையலாம்; வனவிலங்குகள் நம்மைத் துன்புறுத்தும் காட்டு வழியாகத்தான் செல்ல வேண்டும்.

குமுளி வழியாகச் சென்றால், பேருந்து மூலம் செல்லலாம்; ஆனால், குமுளி வரைத்தான் இப்படி. அதன் பின் குமுளியிலிருந்து தேக்கடிக்குச் செல்லும் பாதையில் கேரள வனச் சரக சாலையில் செல்ல வேண்டும். தனியாக வாகனம் அமர்த்திக் கொண்டு செல்ல வேண்டும். இப்பாதை வழியாகச் சென்றால் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் வாகனம் நின்றுவிடும்: இப்பகுதி தமிழ் நாட்டு எல்லைக்குள் இருக்கிறது. இங்கிருந்து நடந்து மங்கலதேவி கோயில் உள்ள சோலையை வலம் வருவது போன்று வலமாகச் சுற்றி நடந்து கோயிலின் தெற்கு வாசலை அடைய வேண்டும். தெற்கு வாசல் பேரியாற்றங்கரையை நோக்கி இருக்கிறது. கோயிலிலிருந்து பார்த்தால் தென்பக்கத்

திலுள்ள பெரியாறு நீர்த்தேக்கம் தெளிவாக ஓவியம் வரையப் பட்டதுபோல் கண்ணுக்குக் காட்சியளிக்கும்; அதுவும் தற்கால சுவர் ஓவியம் போன்று இருக்கும் வடக்கு வாசல் வழியாகப் பார்த்தால் கூடலூர் தெளிவாக சாலை முதல்கொண்டு தெரியும்.

கூடலூரிலிருந்து ஒற்றையடிப் பாதைவழியாக வரும்போது, மங்கலதேவிக் கோட்டத்தை நெருங்கும்போது சற்றுத் தொலை வில் தோரணவாயில் இருக்கிறது. இது சிதைந்த நிலையில் உள்ளது. மேல் வளைவும், தூண்களும் கீழே விழுந்து கிடக் கின்றன. குலசேகர பாண்டியனின் நாலாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (ஏ. ஆர். எண். 279-1966) திருவாசல் மாடம் பற்றிக் கூறுகிறது. இந்தத் தோரண வாயில் அடைப்புள்ள மாடத்தை இக் கல்வெட்டுக் குறிப்பிடுவதாகக் கருதலாம். (இராசு, செ. 1976:15). வடஇந்தியச் சிற்ப முறையில் இது உள்ளது. இத் தோரண வாயில் அமைப்பின்படியே. பூம்புகார் கலைக்கூடத்தின் வாயில் அமைக்கப்பட்டிருக்கிறது (ப.11)

இந்தத் தோரண வாயிலைக் கடந்து சென்றால், கோயிலுக் கருகில்-வடக்கு வாசலுக்குப் பக்கத்தே நீர்ச்சுனை இருக்கிறது, இது சிலப்பதிகாரம் குறிப்பிடும் சுனையாகவே இன்றும் இருக் கிறது. சிறிய கற்களையுடைய சுனைநீர் மாவைக் கரைத்தாற் போன்று இருக்கும்; இன்றும் அப்படியே இச்சுனைநீர் இருக் கிறது.

இச்சுனையிலிருந்து மேற்காகச் சென்றால், வாகனங்கள் நிற்கக் கூடிய குமுளிப் பாதைக்குச் செல்லலாம். சுனையிலிருந்து மேலே சென்றால் வடக்கு வாசல்; நன்கு செதுக்கப்பட்ட படிக் கல்லுடன் வாசல் அமைக்கப்பட்டிருக்கிறது. நன்கு அடித்துச் செதுக்கப்பட்ட கல்தூண் நிறுத்தப்பட்டு பக்கங்களில் திண்ணைகள் போடப்பட்டிருக்கின்றன. இப்போது மேற்பகுதி அழிவுற்று தூண்கள் மட்டும் ராயகோபுரம் நிற்பதுபோல் இருக் கின்றன. வாசலை விட்டு இறங்கி, உள்ளே சென்றால் முற்ற வெளி.

இம்முற்றவெளியில் நான்கு கோயில்கள் இருக்கின்றன. சுற்றுச் சுவர் கற்களால் ஆனது. 220 அடி நீள அகலங்களை யுடையது. இக்கோயில் கேரள எல்லையிலிருந்து 44 அடி விலகி தமிழ் நாட்டுக்குள் இருக்கிறது. சுற்றுச் சுவரின் மேற்கு பக்கச் சுவரில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

வடக்கு வாசல் பக்கம் உள்ள கோயில் செம்மையாகச் செதுக்கப்பட்ட கற்சுவர்களைக் கொண்டதாக இருக்கிறது.

அடிப்பகுதி தகடு போன்று பளபளப்பாக்கப்பட்டக் கல் இணைப்பால் கிரேஸ் மட்டம் வரைக் கட்டப்பட்டிருக்கிறது; கற்கோயிலாகும். மேல் விதானமும் கல்லாலே ஆனது. கோயில்கள் எல்லாம் முற்காலச் சோழர் பாணியில் கட்டப்பட்டிருக்கின்றன; எல்லாம் அழிவுற்ற நிலையிலிருக்கின்றன. இக்கோயிலில் கல்வெட்டு இருக்கிறது; ஆனால் சிலை இல்லை.

இதற்கு அடுத்ததும் இதுபோன்ற அமைப்புள்ள கோயிலாகும். ஆனால், முதற்கோயிலைப் போன்று அடிப்பகுதி செம்மையாகக் கட்டப்படவில்லை. இங்கு இடுப்புக்குக் கீழே உள்ள சிலை இருக்கிறது. மேல் பகுதி சிதைந்து கிடந்திருக்கிறது. இதைத்தான் கண்ணகி சிலை என்று பேராசிரியர் சி. கோவிந்தராசன் 1963-இல் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டார்; எஞ்சிய பகுதி இடது காலை மடித்து, வலது காலை தொங்கவிட்ட நிலையில் இருக்கிறது. இக்கோயிலில்தான் கண்ணகி சிலை இருந்தது என்று மக்கள் வழிபாடு நடத்தி வந்தார்கள். இக்கோயிலும் சிதைந்தே கிடக்கின்றது. முதற் கோயிலுக்குள் செல்ல முடியாதபடி இடிந்திருக்கிறது. இக்கோயிலில் உள்ளே சென்று வழிபடலாம். முதற் கோயிலின் முன்பகுதி சரியாக இருக்கிறது.

இக்கோயிலுக்கு அடுத்தது வெளியாக இருக்கிறது. ஆனால் முன்பு கோயில் இருந்த அடையாளம் இருக்கிறது. இப்போது தரைமட்டமாக இருக்கிறது.

இதற்கு அடுத்து மூன்றாவது கோயில் இருக்கிறது. இதுவும் இரண்டாவது கோயிலைப் போன்ற அமைப்புள்ளதுதான். இடிந்த நிலையில் இருக்கிறது. இங்குதான் இராசராச சோழன் கல்வெட்டு இருந்திருக்கிறது. இப்போது பெயர்த்து எடுக்கப்பட்டதுபோல் இருக்கிறது; இக்கோயிலின் உள்ளே பெரிய லிங்கம் இருந்திருக்கிறது. ஆனால், அது சிதைந்து தூக்கி எறியப்பட்டிருக்கிறது. அடையாளச் சின்னம் காணப்படுகிறது. இப்போது அந்த அடிப்பாகத்தில் கேரள அரசு துர்க்கை சிலையை வைத்து இருந்தது. அதுவும் 1985-ஆகஸ்டு 17-க்கு முன் இடுப்புக்கு மேலே உடைக்கப்பட்டுத் தூக்கியெறியப்பட்டிருந்தது; ஆக இப்போது எங்கும் சிலை இல்லாத நிலை. விநாயகர் சிலை மட்டும் இக்கோயிலுக்கு மேல்புறம் சுற்றுச் சுவரை ஒட்டி இருக்கிறது. அச்சிலைக்கு அது முன்னிருந்த இருப்பாக இருக்காது; தனியே கிடந்ததை அங்கே வைத்திருக்கிறார்கள்.

இக்கோயில், தெற்கு வாசலை ஒட்டி இருக்கிறது. இக்கோயிலுக்கு முன் தெற்கு வாசலை ஒட்டி, வடக்கு நோக்கி ஒரு கோயில் இருக்கிறது, மற்ற மூன்று கோயில்களும் கிழக்கு நோக்கியே இருக்கின்றன. இக்கோயிலில் சிலை ஒன்றும் இல்லை.

இக்கோயில்களின் முன்னால், வெளியாகத்தான் இருக்கிறது. அங்கங்கே திட்டுத் திட்டாக கல்லை அடுக்கி வைத்திருக்கிறார்கள். அதிக அளவில் கோயில்கள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. சுற்றுச் சுவர்களும் அதுபோன்றே பழுதடைந்திருக்கின்றன. யானைக் கூட்டம் அடிக்கடி வந்து தங்கும் சரணாலயமாகக் காட்சியளிக்கிறது. அருகில் உள்ள கேரள எல்லைப் பகுதி பெரியாறு வனவிலங்கு சரணாலயமாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இக்கோயிலுக்கு சேரன் செங்குட்டுவன் காலந்தொடங்கி பூஞ்ஞையாத்துத் தம்பிரான் போன்ற நாயக்க மன்னர்கள் வரையிலுள்ள மன்னர்கள், வெவ்வேறு காலங்களில் திருப்பணி செய்தும், நிவந்தம் கொடுத்தும் வந்ததாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. மன்னர்களைத் தவிர வணிகக் கூட்டமும் இக்கோயிலுக்கு நிவந்தம் கொடுத்து திருப்பணி செய்து வந்திருக்கிறது.

மங்கலதேவிக் கோட்டம் இருப்பது யானை போன்ற தனிக் குன்றாகும். இவ்வானைக் குன்றின் பிடரியிலுள்ள மூன்று வேங்கைக் கானல்களில் நடுவில் உள்ள கானலில்தான் கோயிலுள்ளது. இதுவும் சிலப்பதிகாரச் செய்தியின்படி அமைந்துள்ளது. இது எதிரொலிக்கும் மலையாகும்; சிலம்பு மலை. இதையும் சிலம்பு குறிப்பிடுகிறது. பக்கத்தே பெரியாற்றங்கரை உள்ளது; இப்பெரியாற்றங்கரையில்தான் சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணவந்து தங்கினான். வனவிலங்குகளும், மலைத் தோட்டப் பயிர்களும் இன்னும் நிரம்பி வழியும் பூமி. சிலம்பு குறிப்பிடுவது போன்று வரையாடு துள்ளி விளையாடும் மலை.

இத்தகு அமைப்புக் கொண்ட மங்கலதேவிக் கோட்டத்துக்குச் சென்று வழிபட தமிழ்நாட்டு மக்களுக்குச் சரியான வழித்தடம் இல்லாதது பெருங்குறையே. மக்கள் சொல்லவொண்ணாத் துயரோடு சென்று வழிபடுகிறார்கள். இப்போது கேரள அரசின் கெடுபிடி வேறு சேர்ந்து கோயிலுக்குச் சென்று வழிபடுவதையே நிறுத்திவிட்டநிலை.



கூடலூரிலிருந்து பார்க்கும்போது கண்ணகி கோட்டம்
தென்படும் மங்கலதேவி மலை



மங்கலதேவி மலையில் வேங்கைக்கானல் காட்சி



மங்கலதேவி கண்ணகி கோட்டமுள்ள வேங்கைக் கானல்



சிதைந்து கிடக்கும் தோரண வாயில்



கண்ணகி கோட்டத்திற்கு அருகிலுள்ள நீர்ச்சுனை



கண்ணகி கோட்டத்தின் நுழைவு வாயில்



கண்ணகி கோட்ட முழுத்தோற்றத்தின் ஒரு பகுதி



கண்ணகி கோட்டத்தில் இராசராசனால் கட்டப்பெற்ற
சிவன் கோயில்



கண்ணகி கோட்டத்திலுள்ள பெரிய கோயில்



கண்ணகி கோட்டத்தின் தெற்குத் தோற்றம்



கண்ணகி சிலை உள்ள கோயில்



கேரள காவல்துறையின் பாதுகாப்பில் கண்ணகி கோட்ட
வழிபாடு



கண்ணகி கோட்டத்திலுள்ள இரண்டாவது கோயில்



சுற்றுச் சுவரிலுள்ள கல்வெட்டு



கண்ணகி கோட்டத்தில்
வழிபாட்டில் இருக்கும் கண்ணகி
சிலையின் கீழ்ப்பகுதி



உடைத்தெறியப்பட்டுள்ள சிலையின்
ஒரு பகுதி



கோட்டத்திலுள்ள விநாயகர்
சிலை



பேராசிரியர் சி. கோவிந்தராசன்
எடுத்துச்சென்ற கண்ணகி
சிலையின் மேற்பகுதி

# 8. திராவிடச் சக்தி வழிபாட்டில் கண்ணகியின் இடம்

சக்தி என்பது பெண் தெய்வம். இந்து சமயத்திலும் பெண் தெய்வம் இடம்பெற்று இருக்கிறது. திராவிடச் சமயத்திலும் பெண் தெய்வம் இருக்கிறது. ஆனால், இந்து சமயத்தில் -ஆரிய சமயத்தில் பெண் தெய்வத்திற்குக் கொடுக்கப்பெற்ற உயர்வை விட திராவிடச் சமயத்திலுள்ள பெண் தெய்வத்திற்குத்தான் ஏற்றம் மிகுதியாகக் கொடுக்கப்பட்டு இருந்தது; இன்றும் இருந்து வருகிறது. மதுரை மீனாட்சி இதற்கு விளக்கமாக இருந்து வருகிறாள்.

சக்தி என்ற சொல் வடசொல்; இதற்கு பலம் என்பதுதான் பொருள்; திறன் மிக்கது என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது. திராவிடர்களுடைய மொழியில் வடமொழி புகுந்து ஆதிக்கம் செலுத்திய காலத்தில், ஆரியர்களின் பண்பாட்டில் திராவிடர் களின் பண்பாடு கலந்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

இந்தச் சமயத்தில்தான், திராவிடர்களின் சக்தி வழிபாடு ஆரியர்களின் சமயமான இந்து சமயத்தில் பின்பற்றப்பட்டது. முதலில் ஆரியர்கள், ஆண் தெய்வங்களை வணங்கி வந்தவர்கள்; அவைகளுக்குத்தான் ஏற்றம் கொடுத்து வந்தார்கள்; ஆரியர்கள் போரை விரும்பியே, அவர்கள் அவ்வாறு ஆண் தெய்வங்களுக்கு ஏற்றம் கொடுத்தார்கள்; ஆனால், திராவிடர்கள் வேளாண் மையை விரும்பிப் போற்றியவர்கள்; ஆகவே, வளமைத் தெய்வமான பெண் தெய்வத்திற்கு முதன்மை கொடுத்தார்கள்.

இந்த அடிப்படையில்தான் மத வேறுபாடு இருந்து வந்தது. காலப் போக்கில் ஆரியர்கள் பண்பாட்டுக் கலப்பால், திராவிடர் களைத் தமதாக்கிக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பால், அடிமைகளாக்கிக் கொள்ள வேண்டுமென்ற உந்துதலால் பெண் தெய்வ வழிபாட்டை ஏற்றுக் கொண்டார்கள்; ஆண் தெய்வத்தின் துணையாக்கிக் கொண்டார்கள். ஆணின்

துணையாக-ஆணுக்குப் பணியும் தெய்வமாகப் பெண் ஆக்கப் படுகிறாள்; அப்போது சக்தி பிறக்கிறது. இதுதான் ஆரியர்களின் பெண் தெய்வம்; சக்தி. அதுதான் இந்துசக்தி. ஆரிய சக்தியாகிய பெண் தெய்வம் ஆண் தெய்வத்தின் மனைவியாகவே போற்றப் படுவாள். ஆனால், திராவிடச் சக்தி அவ்வாறல்ல; தனித்தே இருந்து வந்திருக்கிறது. திராவிடச் சக்தி என்பது பெண்தெய்வம் என்ற பொருளில்தான் வழங்கி வந்திருக்கிறது. ஆனால், இந்த பெண் தெய்வங்களை இப்போது இந்து சமயத்தின் ஆண் தெய்வத்தின் மனைவிக்கு அவதாரமாக்கி விட்டிருக்கிறார்கள். இதுதான் இன்றுள்ள நிலை.

ஆகவே, திராவிடச் சக்தி வேறு; இந்து சக்தி வேறு. திராவிடச் சக்தி ஒன்றல்ல; பல பெண் தெய்வங்கள் இருக்கின்றன. அவற்றில் முதன்மை இடத்தைப் பெற்றதுதான் பத்தினித்தெய்வம் கண்ணகி. சக்தி வழிபாட்டைத் தான் தாய்த் தெய்வ வழிபாடு என்று கூறுகிறோம். இந்த தாய்த் தெய்வ வழிபாடு ஹரப்பா, மொகஞ்சதோரா நாகரிக - சிந்துவெளி நாகரிகக் காலத்திலும் இருந்து வருவதுதான்.

இன்று, கிராமங்களில் பெண் தெய்வங்களே மிகுதியாக இருக்கக் காண்கிறோம். ஆண் தெய்வங்கள் அருகியே இருக்கின்றன. பெண் தெய்வத்தை அம்மன் தெய்வம் என்று கூறி வருகிறார்கள்; ஆண் தெய்வங்களை ஐயனார், ஐயன் என்று அழைத்து வருகிறார்கள். நீலகிரி மலைவாழ் மக்களும் ஆண் தெய்வங்களை ஐயனார் என்றும், பெண் தெய்வங்களை அம்மனார் என்றும் வழங்கி வருவதிலிருந்து இக்கருத்து வலுப் பெறுகிறது. ஐயனார் என்பதை இப்போது நாம் ஒருகுறிப்பிட்ட தெய்வத்திற்குப் பெயராக இட்டு அழைத்து வருகிறோம்.

கேரளத்தில் இதைப் போன்றே, பகவதி என்று அழைக் கிறார்கள்; பெண் தெய்வங்களுக்குத்தான் பகவதி என்ற பெயர்; அது இன்று குறிப்பிட்ட தெய்வத்திற்குப் பெயராக இருந்து வருகிறது. இந்த குறிப்பிட்ட பெயராக அழைத்து வரும் கோயில்கள் எல்லாம், கண்ணகி கோயில்களே ஆகும். கொடுங் கோளூர் பகவதி, ஒற்றை முலைச்சியம்மன் என்று அழைக்கப் பெறுகிறாள். இதுதான் கண்ணகிக்கு, கேரளாவில் பெரிய கோயி லாக மதிக்கப்படுகிறது; இந்த பகவதியே, மூத்த பகவதியாக போற்றப்படுகிறது. இது மங்கலதேவி கண்ணகி கோயிலி லிருந்து பிடிமண் எடுத்து வைக்கப்பட்டக் கோயிலாகவே இருக்க வேண்டும். பங்குனி (மீன) மாதத்துப் பரணி நாளில் இப்பக வதிக்குப் பலிகள் கொடுத்து விழாக் கொண்டாடுகிறார்கள்.

விஷாரிகாவு என்ற இடத்திலுள்ள பகவதி கோயில் இளைய பகவதி கோயிலாகப் போற்றப்படுகிறது. விஷாரிகாவு பகவதி கோயிலில், ஆடுகளை வெட்டி நவதானியங்களோடு கலந்து 'குருசி' யாக்கிப் பலியிடுவது வழக்கம். இந்தப் பலியை இரவு 11 மணிக்குக் கொடுப்பார்கள். பலியைக் கோயிலைச் சுற்றி வீசு வார்கள்; விஷாரி காவில் இருக்கும் இளைய பகவதி பலியை ஏற்றுக்கொண்டு ஆடுவாள். அந்த நடு இரவில் கொடுங்கோளூரில் உள்ள மூத்த பகவதி கோயிலில் உள்ள கிணற்றின் வழியாக வந்து இளைய பகவதியுடன் சேர்ந்து ஆடுவதாக நம்பப்படுகிறது. (சாமி. பி. எல். 1976:114-115). ஆகவே, இந்த விஷாரிகாவி லுள்ள பகவதி கோயில் கொடுங்கோளூர் பகவதி கோயிலிலிருந்து எடுத்து வந்து வைத்தப் பிடிமண் கோயிலாக இருக்க வேண்டும். இதைச் செட்டியார்கள் கூறும் மந்திரப் பாட்டிலும், கொடுங் கோளூர் பகவதி கோயில் பற்றிய செய்தி வருவதிலிருந்து உறுதி யாக்கிக் கொள்ளலாம்.

இக்கோயிலில் செட்டியார்கள் செய்யும் சடங்கு முதன்மை யானது. இவர்கள் மிகக் குறைந்த அளவிலே உள்ளனர்; மாகி என்ற ஊருக்கு அருகிலும் தெல்லிச் சேரியிலும் உள்ளனர்; இவர்கள் மலையாளமே பேசி வருகிறார்கள். தமிழோ பிற மொழிகளோ அறியாதவர்கள். கோயில் விழா, இவர்களுக்கு ஓலை அனுப்பிய பின்னரே தொடங்கப்படுகிறது. முதல் ஓலை இவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இந்தச் செட்டி யார்கள் விஷாரி காவிற்கு வந்து 'செட்டி பறம்பு' என்ற இடத்துச் சத்திரத்தில் தங்கி விழாவை மந்திரங்கள் சொல்லித் துவக்குகின்றனர். யானைமேல் விழாவின் போது அனுப்பப்படும் வாளை இந்தச் செட்டியார்கள் செய்து கொண்டு வருகிறார்கள். இந்தச் செட்டியார்கள் தலையில் சிகப்புத் துணியால் தலைப் பாகைக் கட்டி மந்திரப் பாட்டைச் சொல்லி வருகிறார்கள். ஊர்வலமாக வரும்போது 'கோழி நடே நடே' என்று உரக்கச் சொல்லி வருகிறார்கள். ஊர்வலமாக வரும்போது 'தமிழ் மந்திரத்தை மலையாள எழுத்தில் எழுதி வைத்து படித்துக் கொண்டு வருகிறார்கள், இந்த மந்திரப் பாட்டில் கண்ணகி கதை வழங்குகிறது. தமிழ் என்று அறியாது சொல்லி வருகிறார்கள். இதை விருத்தம் என்று செட்டியார்கள் கூறி வருகிறார்கள்,

1. "ஆதி முதல் காவேரிப் பூம்பட்டினத்து
ஆடாரவர் வங்கிசத்தில்
அரியகண் ணகை அம்மன் ஆகவேதான்
பிறந்து அதிரூபமான பொழுது
தீதிலா கோவிலருடன் பாரி யாளாகவும்

சிறிது காலம் சென்றபின்
திங்கள் முகமாய் வந்து தனிக்காக
மதுரையில் சிலம்பு கூறினாளில்
நீதியரசனென்றான் பாண்டியன் வாசரில்
நிகரிற்ற மழுவரனாம்
நித்தினபுறக்கவே பாண்டினாடெத்திநீ
நீறாயெரித்த சோதி
ஆதிகாலத்திலும் மகிமையாய் நீ வந்த
அதிசயமும் ஆரறிவாரோ
ஆனைக்குளம் வளர் பகவதி அம்மையே
ஆனந்த மகமாயே''

2. அக்ரசாலக் குளவளர் பகவதி அம்மையும்
ஆனைதளியில் தேவரும்
திக்கெல்லாம் புகழ்வரும் கொல்லத்து
பகவதி திசவரக்கல் பகவதி
தினந்துதி கொண்டாடும் புத்தூரில்
அம்மையும்
ஸ்ரீகுறும்ப பகவதி பக்கமது விளையாடும்
நரங்கோரி பதிலிலாளிக்கல் பகவதி
பரிபால கிருஷ்ணனும் கொடுங்களூர் அம்மையும்
பலகாலம் வாழு நமக்கு
அக்கினியிடம் பொருள் அரிச்சேத்திர
பாலனும் அடிபணிந்தருளும்
ஆனைக்குளங்கரை பகவதி அம்மையே
ஆனந்த மகமாயே.

3. காரொத்த கூந்தலும் குப்பியும் தொங்க
லும் கமல முகவதனமழகும்
கழில்விழிகண்களும் முத்து மூக்குத்தியும்
காதினொடு புழையினழகும்
பாரொத்த பூமுலை கழுத்தணி பதக்கமும்
நங்கலானாணினழகும்
வஞ்சிரி செங்கையும் சுற்றிடை தன்னி
லொருமாந்தினர் பொட்டிலழகும்
சீரொத்த தொந்தியும் பாத சலங்கையும்
செம்பவள மேனி னழகும்
தேவியின் பாதமே நண்ணுமடியேனுமே
சிந்தித்து வந்த கரிமம்

நேராப்ப வாகவே இந்தருள் பொறுத்
தருள் தேநமூ அபிராமி கவுரி
நல்ல நாக மேவிய அனவரது ஆனந்த
மானமொழினீ''

(சாமி. பி. எல். 1976: 117-118)

இந்தப் பாட்டில் கண்ணகி கண்ணகையம்மன் என்று அழைக்க பெற்றிருக்கிறது; இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் கண்ணகி கோயில்களை கண்ணகையம்மன் கோயில்களென்றே அழைத்து வருவதை இன்றும் பழக்கத்தில் கொண்டுள்ளனர்; இப்பாட்டு கண்ணகி வரலாற்றைக் கூறுகிறது. மூன்றாம் பாட்டு கண்ணகியின் வர்ணனையாக இருக்கிறது. இப்பாட்டில் கண்ணகி யின் காதின் புழையினதழுகு கூறப்பட்டிருப்பது நோக்கத் தக்கது. இலண்டன் பொருட்காட்சிச் சாலையில் உள்ள கண்ணகிச் சிலையில் காது வடிந்து தொங்கிய பெரிய துளை யுடன் இருக்கிறது. அதாவது தொள்ளைக் காதோடு இருக்கிறது.

பகவதியைப் பற்றி வழங்கும் பழைய நாட்டுப் பாடல்களில், ஒற்றை முலைச்சிப் பாட்டு கொடுங்கோளூர்க் கோயிலுக்குப் போகும்போது பாடப்படுகிறது. இக் கோயிலில் பாடப்பெறும் தோத்திரப் பாட்டில் சில வரிகள் மறைமுகமாகக் கண்ணகியைக் குறிப்பிடுகின்றன. 'விதவாரூபையாம் தூமவதியை நான் தொழுன்னேன், திங்கள் சூடும் டகான்டே பத்தினியை நான் தொழுன்னேன், என்று வரும் வரிகளில் கண்ணகியை விதவை யென்றும் பத்தினியென்றும் மறைமுகமாகக் குறிப்பிடுவதைக் காணலாம் என பி. எல். சாமி கூறுகிறார் (1976 ; 129). தமிழ் இனத்தார் எனக் கூறப்படும் மலையன்மார் பாலக்காட்டுப் பகுதியில் வாழ்கின்றார்கள். ஆனால், இவர்களுக்கு இன்றுதமிழ் தெரிவதில்லை. மலையாளம்தான் பேசுகின்றார்கள். இவர்கள் கண்ணகியைப் பற்றிப் பாட்டுப் பாடுகிறார்கள். நல்லம்மைத் தோற்றம் என்பது அப்பாட்டின் பெயர். கண்ணனூர்க்கருகி லுள்ள குறும்பக்காவில் உள்ள பகவதி கோயிலைக் கோட்டம் என்றே அழைக்கிறார்கள். பழைய காலங்களில் குறிப்பாக சிலப்பதிகாரத்தில் கோயிலைக் கோட்டம் என்று கூறியிருப்பதை இங்கு நினைவு கொள்ள வேண்டும்.

கேரளத்தில் பகவதி கோயில்கள் எல்லாம் சாதிக்கொரு கோயிலாகவும், ஊருக்கொரு கோயிலாகவும் இருப்பதைக் காணலாம். தமிழ்நாட்டில் மாரியம்மன் காளியம்மன் சாதிக் கொன்றாகவும், இருப்பதைப் போன்றதுதான் இது. ஆகவே, கேரளத்தில் பகவதி கோயில்கள் என்று அழைக்கப்பெறும்

அம்மன் கோயில்கள் எல்லாம் பத்தினித் தெய்வமாகிய கண்ணகி கோயில்களாக இருப்பதைக் காணமுடிகிறது.

மங்கலதேவி கண்ணகி மங்களநாள் விழாவின்போது வெவ்வேறு நாடுகளிலிருந்து அரசர்கள் வந்திருந்து வழிபட்டார்கள். அப்படி வழிபட்ட நிலையில் கண்ணகியின் சிறப்பைத் தெரிந்துகொண்டு தங்கள்நாட்டிலும் பிடிமண் கோயில்கள் எழுப்பி வழிபட்டு வந்திருக்கிறார்கள். இப்படி வந்ததுதான் குடகு நாட்டிலுள்ள மங்கலதேவிக் கோயில். மங்கலதேவிக் கோயிலை வைத்துத்தான் மங்களூர் வந்ததாகக் கூறுவர். இதை டாக்டர் உ. வே. சா. அவர்களும் 'மங்கல மடந்தை' என்ற சொல்லுக்குப் பொருள் கூறுமிடத்தில் ஒப்புக்கொள்கிறார். ஆக கர்நாடகத்தில்இப்படியாகவே பத்தினித் தெய்வ வழிபாடு பெருகியது. தாய் மூகாம்பிகையும் இவ்வாறே தோன்றியிருக்க வேண்டும்.

ஆந்திரத்தில் இதைப்போன்றே அம்மன் வழிபாடு தோன்றியிருக்கிறது.

கர்நாடகத்தில் தமிழ்ச் சிலப்பதிகாரக் கதைபோன்றே கண்ணகிக் கதை வழங்குகிறது. இறுதியில் மட்டும் வெட்டுண்ட கோவலன் கண்ணகியின கற்பினுக்கிரங்கிய சிவனருளால் உயிர் பெற்றெழ, அப்பால் இருவரும் தமமூர் சென்று சுகமாக வாழ்ந்தாரென்றுதிரிவுகொண்டு வழங்குவதாக அறிகின்றோம். கண்ணகி, கோவலன், மாதவி என்பார் முறையே சந்திரா, கொய்லா, மெலீ என்ற பெயர்களுடன் அங்கு வழங்கவும் பெற்றுள்ளனர் (கந்தையா. வி. சீ. 1964 : 165). வீரசைவம் என்று அழைக்கப் பெறும் லிங்காயத் சமயம் தழைத்தோங்கும் நாடாகையால், கண்ணகி கதையிலும் சிவனுடைய 'அருள்மாட்சி' நுழைக்கப் பட்டிருக்கிறது.

மாளுவ நாட்டு நாகோட்ஸ் சமஸ்தானத்தில் 'பதைனிதேவி' என்ற எழுத்திற் பொறிக்கப்பட்டு விளங்கும் கோயிலே சிலப்பதிகாரத்திற கூறப்பட்ட மாளுவ வேந்தன் கண்ணகிக்கு எடுத்த கோயிலாக இருக்கலாம் என்று கருத இடம் உண்டு (கந்தையா. வி. சீ. 1964: 165).

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெழுப்பி வழிபட்ட நாளில் பல நாடுகளிலிருந்தும் மன்னர்கள் வந்தார்கள் என்பது தெரிந்ததே. இதைச் சிலப்பதிகாரமே தெளிவாக்குகிறது.

''வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவன் நின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்

பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட்டாங்கண் இமய வரம்பன் இந்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்''

(சிலப்பு. வரங். 155-164).

ஆகவே, இங்குக் குறிப்பிடப்படும் மன்னர்களின் நாடுகளி லெல்லாம் பத்தினித் தெய்வம் கண்ணகி வழிபாடு இருந்திருக்க வேண்டும்; காலப்போக்கில் இப்பத்தினித் தெய்வ வழிபாடு வேறுபெயர்களில் மாற்றம் பெற்றிருக்க வேண்டும். தமிழகத் திலும், இலங்கையிலும் மாற்றம் பெற்றிருப்பது போல ஆகியிருக்க வேண்டும்.

சிலப்பதிகாரம் குறிப்பிடுவதுபோல கயவாகு வேந்தன் அனுராதபுரியைத் தலை நகராகக் கொண்டு கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்தவன் என்றும் தமிழகத்தில் கண்ணகி கதை நடந்த காலத்திலேயே ஈழத்துக்கு அவள் வழிபாடு இவனால் கொண்டுவரப்பட்டதென்றும் தெரிய வருகிறது (கந்தையா. வி. சீ. 196: 155). இந்தியாவிலிருந்துதான் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு வந்தது என்பதை ''இராசாவளி'' என்னும் நூல் உறுதிப்படுத்துகிறது. கயவாகு மன்னன் சோழநாடு நோக்கித் தமிழகம் புகுந்து பல வெற்றிகளீட்டி மீண்டு வருகையில் கண்ணகி தேவியின் காற்சிலம்பு ஒன்றினைக் கொண்டு வந்தானென்றும் பின்னர் ஈழத்தில் பல இடங்களிலுப் அவளுக்குக் கோயில்கள் எடுப்பித் தானென்றும் இராசாவளி கூறுகிறது. சிங்கள மக்களிடையே பரம்பரை பரம்பரையாகக் கேட்கப்பட்டு வந்த பத்தினித் தெய்வத்தின் ஈழநாட்டு வருகை, கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் இந்நூலிலேதான் முதன்முதல் எழுத்துருவில் பொறிக்கப்பட்டுள்ளது (கந்தையா. வி. சீ. 1964: 154).

கயவாகு மன்னன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பும்போது, முதலில் 'கம்பு கோளா' எனப்படும் கம்புத் துறைமுகம் வழியாக வந்தனன் என்பது வரலாறு. இத்துறை யாழ்ப்பாணத்தில் மாதகலுக்குக் கிட்டவுள்ள 'திருவடிநிலை' என்பதேயாகும் என்றும், அரசன் தான் இறங்கிய இடத்துக்கு அருகிலிருந்த 'அங்கணாமைக் கடவை' என்னும் இடத்திலே

ஒரு கண்ணகி கோயிலை முதலில் கட்டினானென்றும் பத்தினி வழிபாடு பற்றி ஈழத்திலே எழுந்த பழமையான கோயில் இதுவேயாகும் என்றும் கலாநிதி. கணபதிப்பிள்ளை கூறுவதாக வி. சீ. கந்தையா குறிப்பிடுகிறார் (1964:155). அங்கணாமைக் கடவை பழமையும் பெருமையும் உள்ள கண்ணகி கோயிலாகும் என்பதற்கு மட்டக்களப்பிலே வழங்கும் 'உடுகுச்சிந்து' என்னும் நூல் குறிப்புகளும் பயன்படுகின்றன. மட்டக்களப்பிலுள்ள கண்ணகி கோயில்களையெல்லாம் தனித்தனியே கூறி வழிபாடு செய்யும் காரணத்தால் இந்நூல் 'ஊர்சுற்றுக் காவியம்' என்று அழைக்கப்படுகிறது.

இலங்கையில் கயவாகு மன்னனால் தொடங்கப்பெற்ற கண்ணகி வழிபாடு முதலில் அனுராதபுரத்தில் நிறுவப்பெற்றது. மன்னன் கண்ணகிக்கு ஆடிமாதந்தோறும் விழாவெடுக்க இசைந்து வந்தான் என்று சிலப்பதிகார உரைபெறு கட்டுரைகூறும். கயவாகு வேந்தன் காலத்திலிருந்து ஆடி (எசலா) மாதப் பூரணை தோறும் பெரஹரா என்ற பெயரில் பத்தினித் தெய்வத்துக்கான திருவிழா தவறாது நடத்தப் பெற்றுவந்தது. ஊர்வலமாக வரும் திருவிழா என்பதுதான் 'பெரஹரா'—வுக்குப் பொருள். சிங்கள மக்கள் இந்த விழாவை மிகுந்த பயபக்தியோடு கொண்டாடி வந்தார்கள். சிங்கள மன்னர்கள் காலந்தோறும் இந்த விழாவைத் தம் தலைநகரங்களிலே இடம்பெறச் செய்தனர். இன்றும் இத்தகைய திருவிழா 'எசலா பெரஹரா' என்ற பெயரில் கண்டியில் நடக்கக் காணலாம். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் சீய நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த புத்தப் பிக்குகள் சிலருடைய விருப்பப்படி புத்தர்பிரானின் புனித தந்தப் பேழையும் கண்டி நகரில் நடந்துவந்த இப்பெரஹராவிலே இடம்பெற்றது. சுமார் இரண்டாயிரம் வருடம் பழமை வாய்ந்த பத்தினித் தெய்வ ஊர்வல விழாவில் காலப்போக்கில் புத்தரின் புனித தந்தத்துக்கே சிங்கள மக்கள் முதலிடம் கொடுத்து விட்டார்கள். இருந்த போதிலும்,சிங்கள மக்கள் தம் வழிபாட்டு நிலையங்களுக்கு அருகிலெல்லாம் 'பத்தினித் தெய்யோ' வினுக்கும் கோயில் அமைத்து வைக்கத் தவறியது இல்லை. (கந்தையா, வி. சீ. 1964:156)

இவ்வாறு கயவாகுவால் தொடங்கி வைக்கப்பெற்ற கண்ணகி வழிபாடு அனுராதபுரத்திலிருந்து முல்லைத் தீவைச் சேர்ந்த வற்றாப் பழைக்கும், அங்கிருந்து கடல் வழியாக மட்டக்களப்புக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது எனப் பலர் கூறிவருவது தெரிந்ததே. இன்று மட்டக்களப்புப் பகுதியில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட கோயில்கள் இருக்கின்றன. இங்கெல்லாம் கண்ணகியைக் கண்ணகையம்மன் என்றே அழைத்து வருகின்ற

னர். இக் கண்ணகி கோயில்களிலே வருடந்தோறும் வைகாசி மாதம் வளர்பிறை நாட்களில் மட்டும் பூசனை நடத்தப் பெறும்.

ஆண்டு முழுவதும் பூட்டப்பெற்றுக் கிடக்கும் கண்ணகி கோயிலெல்லாம், வைகாசி மாதம் பிறந்ததும் பூரணையினை அடுத்துள்ள சில நாட்களுக்கு முன்னர் திறக்கப்படும். மந்திரப் பூசனைகளோடு தேங்காயுடைத்தவுடன் முதல்நாள் விழா 'கதவு திறத்தல்' ஆரம்பமாகிறது. பின்னர் நாள்தோறும் மதியம், இரவு ஆகிய இருவேளைகளிலும் சடங்கு நடக்கும். அம்மனுக்கு நடைபெறும் பூசையில், தெய்வம் ஏறியோர் உருவேறப்பெற்று ஆடும்போது, உடுக்கு வாத்தியங்களை இசைத்து அம்மன் காவியம், உடுகுச் சிந்து என்பனவற்றைப் பாடுவார்கள். இது நம் ஊர்களில் பாடப்பெறும் உடுக்கடிப் பாடல் போன்றதேயாகும். அம்மானைக்காய், சிலம்பு என்பனவற்றைச் சிறுவர் 'கிலுக்குதல்' (குலுக்குதல்), மகளிர் இடும் பேரொலிக் குறவை, ஆலத்தி முதலியன நடக்கும். இவற்றையெல்லாம் சடங்கு என்றே அழைக் கின்றனர். கதவு திறந்த ஐந்தாவது நாளில் 'கலியாணக்கால் வெட்டுதல்' என்னும் விசேடச் சடங்கும், கலியாணப் படிப்பும் நடக்கும். குறித்ததோர் தூய இடத்தில் வளர்ந்து நிற்கும் பூவரசங்கம்பு ஒன்றை மங்கல முழவுகளொலிப்ப வெட்டிக் கொண்டு வருதலும், அப்படி வந்த கலியாணக்காலினைக் கோயில் மண்டபத்தில் நட்டு, ஆடை அணிகளால் ஒரு பெண்ணைக் கோலம்செய்து கண்ணகையம்மனாகப், பாவித்துக் கோவலனார்க்கு அவ்வம்மையினைத் திருமணம் செய்வித்தலும் கலியாணப் படிப்புக்கான சடங்கு நாளில் நடப்பனவாகும். அன்றெல்லாம் வீதிகள் தோறும் கலியாணக்கால் ஊர்வலத்துக் காக அமைந்த தோரணங்களும், பந்தர், நிறைகுடம், குத்து விளக்குகள் என்பனவும் ஊர் முழுவதையுமே ஒரு திருமண அரங் காக அழகுசெய்து நிற்றல் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும். தினமும் முறைப்படி சடங்கு நடந்துஇறுதி நாளன்று ''குளுத்தி'' என்னும் பெயரினைப் பெற்று விழா நிறைவெய்தும். ''குளுத்தி நாள், நிறைமதி சேர்ந்த நாளில் மட்டக்களப்பையே மகிழ்விக்கும் பொன்னாளாய் விளங்குகிறது. இரவெல்லாம் மக்கள் கண்ணகி கோயில்களில் தங்கியிருப்பர்; சடங்கு நாட்களில் சிலவற்றை மக் கள் 'கோயில் காத்தல்' என்னும் நேர்த்திக் கடனுக்காக அம்மன் வீதியிலேயே தங்கிக் கழிப்பது முண்டு, ''குளுத்தி யன்றிரவு நடக் கும் சடங்கிலே பொங்கல் இடுதல் மிக முதன்மையான ஒன்றாக இடம்பெறும். நடு இரவுக்குப்பின் அம்மன் சன்னதியில் கோயிற் பொங்கலுக்குரிய 'விநாயகப்பானை' யினை அடுப்பேற்றுத லோடு பொங்கல் தொடங்கும். எல்லோரும் வீதி முழுவதும்

சூழ்ந்து கொண்டு தனித்தனியே பொங்கலிடுவர். இது தமிழகத் திலுள்ளது போன்று நடக்கிறது. விநாயகப் பானையிலிருந்து குளுத்திப் பானகத்துக்காகக் கொதிக்கும் பால் 'கட்டாடி' (பூசாரி) யின் கைகளினால் அள்ளிக் கொள்ளப்படும். பின்னர் நடக்கும் சுண்ணமிடித்தல் அழகிய காட்சியினையும் பக்திப் பெருக்கினையும் தருவதொன்று. முடிவில் பொங்கலைப் படைத்து இறுதிநாட் சடங்கை மக்கள் நிறைவேற்றுவர். பொழுது உதயமாகும்வேளையில் நடைபெறும் அச்சடங்கினைத் தொடர்ந்து 'குளுத்தி' ஏடு படிக்கப் பெறும். கண்ணகி அம்மனது மதுரையை எரித்த கோபமானது தம் பூசனைகளால் தணிந்து குளிருமாறு அவளை வேண்டுதல் செய்யும் குளுத்திப் பாடல்களைப் பாடிய பின்னர் 'வாழி' பாடப்பெறும்: தமிழகத் திலும் தெய்வத்தினைச் சாந்தப்படுத்த வைக்கப்பெறும் பொங் கலை குளிர்மைப் பொங்கல் என்று அழைக்கின்றனர். அம்மனை வரம் வேண்டி வாழ்த்தும் அந்நிகழ்ச்சிக்குப் பின்னர் எல்லோரும் 'குளுத்திப் பானக்கம்' பெறுவார்கள். பொங்கல் பானையிலிருந்து எடுக்கப்பட்ட பாலோடு சர்க்கரை, தோடம்பழம், மாதுளம் பழம், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, நெய், தேன் முதலான பூசனைத் திரவியங்கள் கலக்கப்பெற்று, இனிமை யும் குளிர்மையும் நிறைந்த ஓர் அமிர்தம் போன்று விளங்கும் இப்பானக்கம் எல்லா அன்பர்களையும் உளம் குளிரச் செய்வதா யிருக்கும். (கந்தையா, வி. சீ. 1964: 163—168). கண்ணகி வழக் குரைத்த காதையை மையமாகக் கொண்டு விளங்கும் 'வழக் குரை' யும் திருவிழாக்களில் படிக்கும் பழக்கம் இன்றும் மட்டக் களப்புப் பகுதிகளில் இருக்கிறது. இவ்வழக்குரை, வழக்குரைக் காவியம் என்றும் அழைக்கப்படுகிறது. கண்ணகி உரைத்த வழக் கினைச் சிறப்புறக் காட்டி மதுரையை அவள் எரியூட்டிய வரலாற் றோடு இந்நாளும் நிறைவுறுகிறது. இந்த வழக்குரையானது வரம்பெறு காதை முதல் குளிர்ச்சிக் காதை ஈறாகப் பதினொரு காதைகளால் நடக்கின்றது.

இலங்கையில் மட்டக்களப்புத் தவிர யாழ்ப்பாணத்திலும் கண்ணகிக்கான பல கோயில்கள் அமைக்கப்பட்டன என்று தெரி கிறது. ஆனால் அக்கோயில்களில் பல பிற்காலத்தில், சைவ நெறி வளர்க்கும் பாங்கிலே கண்ணகி சைவத் தொடர்புடையவள் என்பதற்காக இராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயில்களாக் மாற்றப்பட்டு விட்டன (கந்தையா. வி. சீ. 1964:159). இதை இலங்கை அரசாங்கப் பழைய மந்திரியும் தமிழறிஞருமான திரு. சு. நடேசபிள்ளை தமது ஆராய்ச்சியில் குறிப்பிடுகிறார். ஆயினும் கண்ணகி பெயரால் வழங்கும் ஒருசில கோயில்கள் இன்றும்

அங்கே இருக்கின்றன. முல்லைத் தீவைச் சேர்ந்த வற்றாப்பளை யில் இருக்கும் கண்ணகையம்மன் கோயில் வட இலங்கையிலே மிகப் பிரசித்திப் பெற்றுள்ள தலமாகும். வைகாசிமாதப் பூரணை யினை அண்டிய திங்கட்கிழமையில் அக்கோயிலில் நடக்கும் பொங்கலுக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும், திருகோணமலையி லிருந்தும் பெருந்திரளாக மக்கள் ஒன்று கூடுதல் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

லண்டன் அருங்காட்சியகத்திலுள்ள கண்ணகி சிலைதான் இன்று கிடைத்திருக்கும் கண்ணகி சிலைகளிலே முழு உருவச் சிலையாகும். இது ஐம்பொன்னால் செய்யப்பட்ட சிலையாகும். இடது கால் ஒடிந்து போன நிலையில் இன்னோர் அழகிய கண்ணகி சிலையும் அங்குள்ளது. இக்கண்ணகியின் முழு உருவச் சிலை, திருகோண மலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் உள்ள ஓரிடத்தில் கிடைத்திருக்க வேண்டுமென்பது கே. ஆனந்த குமாரசாமியின் கருத்து.

இலங்கையில், ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் (ஏறத் தாழ 1730–இல்) ஒரு கண்ணகி சிலை மட்டக்களப்புக் குளக் கட்டு ஒன்றில் இருந்த புளிய மரத்தின்கீழ் அவர்களால் கண் டெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. எனினும், மட்டக்களப்புத் தமிழகத்தில் இதன் தொடர்பாகக் கூறப்படும் ஊர்கள் பல வற்றுள் உண்மையாக எவ்விடத்திலிருந்து இது இங்கிலாந்து சென்றதென்று திட்டமாகச் சொல்லமுடியவில்லை. ஒல்லாந்தர் (Dutch) தம் ஆட்சிக் காலத்தில் மட்டக் களப்பிற் செல்வம் நிறைந்து விளங்கிய சைவக் கோயில்கள் சிலவற்றைக் கொள்ளை யடித்து வந்தனரென்றும், அன்னாருடைய துன்பப் பிடிப்பி னின்றும் தமது உயிருக்குயிரான கண்ணகி தேவியைக் காப் பாற்றுவதற்காக அவளுடைய இச்சிலையினை முதியோர் சிலர் கோயிலிலிருந்து வேறிடம் பெயர்த்து மறைத்து வைத்தார் களென்றும் தெளிவாகத் தெரிகிறது (கந்தையா. வி. சீ. 1964: 160). தில்லை நடராஜர் சிலையைக்கூட ஒரு சமயம், புளியமரத் தின் அடியில் இக்கட்டான சூழலில் மறைத்து வைத்த செய்தி யும் சொல்லப்படுகிறது. ஆகவே, அக்காலங்களில் சாமி சிலை களை புளிய மரத்தடியில் மறைத்து வைத்த மரபும் இருந்து வந்திருக்கிறது.

இலங்கையிலும் மற்றும் உள்ள இந்திய மாநிலங்களிலும் பத்தினித் தெய்வம் கண்ணகி வழிபாடு நிலைத்தோங்க, தமிழ் நாட்டில் அது மறையக் காரணம் என்ன? மறைந்ததா அல்லது வேறு பெயரால் அக்கண்ணகி வழிபாடு நிலைத்திருக்கிறதா?

தென்னிந்தியாவெங்கும் கண்ணகி வழிபாடு இருந்து வந்தது. குறிப்பாகத் தமிழகத்தில் கண்ணகிக்குக் கோயில்கள் நாடெங்கும் இருந்திருக்கின்றன. சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர், தென் இந்தியாவில் இவ்வணக்கம் வேறு உருவில் மாறுபெற்றது. பத்தினித் தேவியைத் துர்க்கை என மக்கள் கொள்ளலாயினர். கண்ணகியின் தோற்றம் அவளைத் துர்க்கையாக ஏற்றுக் கொள்ள வைத்துள்ளது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தோற்றத்தைத் துர்க்கை என்று காவலன் வர்ணிக்கிறான். இந்த அடிப்படையில் தமிழகத்திலுள்ள சில கண்ணகி கோயில்கள் துர்க்கைக் கோயிலாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும்.

சென்னை நகருக்கு வடக்கிலுள்ள, திருவொற்றியூரில் இருக்கும் சிவாலயத்தின் வடக்கு வீதியில் ஒரு துர்க்கை கோயில் தனியாக உள்ளது. அதிலுள்ள தேவியும் பத்தினிக் கண்ணகியின் மாறுபாடு கொண்டவளே எனக் கூறுகின்றனர். தமிழகத்திலே வழங்குகின்ற கோவலன் கதையிற் கூறப்படும் வரலாறும் இக் கூற்றுக்குச் சான்று பகருகின்றது. காளியம்சமாக இருந்த பத்தினித்தேவி திருவொற்றியூருக்கு வந்து 'வட்டபுரியம்மன்' ஆகி, விழாக் கொண்டிருந்தாள் என்பது அந்நூற் கதைக் கூற்று. திருவொற்றியூரில் இவ்விழாக்கள் பதினைந்து நாட்களுக்கு நடப்பதும் முடிவில் கண்ணகி மதுரையை எரித்த நிகழ்ச்சியை நினைவூட்டுவதாகப் பொய்ப் பந்தலொன்று அமைத்து அதனை எரியூட்டுவதும் இக்கோயிலைக் கண்ணகிக் குரியதாக்குகின்றன.

நீலகிரி மலையில் வாழும் தோடர்களின் தெய்வமான, துர்க்கா தெய்வமான துர்க்கா பகவதியைப் பற்றியச் செய்தியும் கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடையதாகிறது. துர்க்கா பகவதி பாண்டிய நாட்டை எரித்தவள் என்றும், சிலம்பு காரண மாகத் தன் கணவனைக் கொலைசெய்த அரசன்மீது கொண்ட கோபத்தால், ஒரு நாட்டையே எரியூட்டிய அத்தெய்வத்தின் பெயரைத் தங்கள் வீடுகளிலே சாதாரணமாகச் சொல்லுவது மில்லை என்றும் தோடர்கள் கூறுகிறார்கள். தங்களிடம் வந்து தான் கோபம் ஆறப்பெற்றவள் அப்பகவதி. ஆதலால், தங்களுக்குத் தீங்கு ஒருபோதும் செய்யாது அருள் சொரியும் அன்னை அவளென்ற நம்பிக்கையும் அவர்க்குண்டென்ற செய்தி யும் தெரிகிறது. (கந்தையா. வி. சீ. 1964:164).

ஆக, தமிழகத்தின் சில பகுதிகளிலுள்ள துர்க்கைக் கோயில் கள் கண்ணகி கோயிலாக இருந்து, பெயர் மாற்றம் பெற்ற வையே என்று தெரிகிறது.

சூட்டு நோய்களான, வைசூரிக்குக்கல், வெப்பு, சின்னம்மை, பெரியம்மை, வயிற்றுக் கடுப்பு, மங்கமாரி, கண்ணோய், பெருஞ் சுரம்போன்றவை கண்ணகியின் கோபத்தினாலேயே பரவுகின்றன என்று மக்கள் நம்புகின்றனர். இதையே இலங்கையிலும் நம்பு கின்றனர். "அன்றுதொட்டுப் பாண்டிய நாடு மழைவறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற் கொல்லராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழாவோடு சாந்தி செய்து, நாடுமலிய மழைபெய்து நோயுந் துன்பமும் நீங்கியது என்ற சிலப்பதிகார உரைபெறு கட்டுரையிலும் கண்ணகி காரணமாக வெம்மை நோய்கள் வந்து நீங்குதல் அறியப்பட்டுள்ளது. இந்த வெம்மை நோய்கள் பத்தினீத் தெய்வத்தின் கோபம் காரணமானவையே என்றும் இவைகள் வராமற் காப்பதற்கே இத் தேவியருக்கு வழிபாடு நடத்தப் படுகிறது என்றும் 'சிலம்ப கதா', 'பத்தினிபடிமா' என்ற சிங்கள நூலகளாலும் அறிய முடிகிறது. இது பற்றிய ஆராய்ச்சியை 'இலங்கையின் பழமையானவை' என்ற நூலிலும் காணலாம் (கந்தையா, வி. சீ. 1964:166). கண்ணகி தேவியின் கோபம் தணிப்பதற்கென்றே, மட்டக்களப்பில் 'கொம்பு முரித்தல்' என்னும் ஆடலினை ஆடுகின்றனர்.

தமிழ்நாட்டில் மேற்கூறிய சூட்டு நோய் வராமல் தடுப்ப தற்கும், மழைக்கும் மாரியம்மனை வணங்கி வருகின்றனர். அ.கி. பரந்தாமன் போன்ற அறிஞர்கள் மாரியம்மனைக் கண்ணகி யாகவே கொள்கின்றனர். மழையம்மனைத்தான் மாரியம்மன் என்று அழைத்தனர். இந்த மழையம்மனாகிய மாரியம்மன்தான் கண்ணகி. மங்கல தேவி கண்ணகியையும் மழைக்காகவும் நோய் தடுப்பதற்காகவும் வணங்கிவருவது அறிந்ததே. ஆகவே, மாரியம்மன் கண்ணகியே என்பது தெளிவாகும். இலங்கையில் இராஜ ராஜேஸ்வரியாக மாற்றம் பெற்றதுபோல் இங்கு இல்லை. இங்கு கண்ணகி கோயில் அவள் கொடுக்கும் மழையால் மாரி யாக மாற்றுப் பெயரால் சிறப்புப் பெயரால் அழைக்கப் பெற்று இருக்கிறாள்.

மாரியம்மன் திராவிடச் சக்தியாகும்; இந்து சக்தியல்ல. பராசக்தியாக மாறறப் பெற்றதெலலாம இக்காலத்திலேதான் அவள் முன்னைய காலத்தில் பத்தினித் தெய்வம் கண்ணகியாக இருந்து சிறப்புப் பெயராக மாரியம்மனாகியிருக்கிறாள்.

இலங்கையில் கண்ணகிக்கு; உடுக்குச் சிந்து பாடப்படுவது போல, மாரியம்மனுக்கும் உடுக்குப் பாட்டுப் பாடி வருவதும் காணக்கூடியதுதான்.

மங்கலதேவி கண்ணகியின் கோயில்களில் சிறப்பான கோயில் கம்பம் பள்ளத்தாக்கில் வீரபாண்டியில் இருக்கிறது; இருக்கன் குடி மாரியம்மன், சமயபுரம் மாரியம்மன், மாங்காடு மாரியம்மன், தேவி கருமாரியம்மன் போன்ற கோயில்கள் எல்லாம் மாரியம் மனாகிய கண்ணகியின் கோயில்களேயாகும். தமிழகமெங்கும் உள்ள மாரியம்மன் கோயில்கள் எல்லாம் மங்கலதேவியின் ஆலயங்களேயாகும். மாரியம்மன் கிராமங்களின் ஊர்த் தெய்வ மாக இருக்கிறது.

மாரியம்மன் எந்த இனத்திற்கும், குலத்திற்கும் உரிய தெய்வமில்லை. ஊரில் உள்ள எல்லா இனத்திற்கும் பொது வான கோயிலாகும். ஊரைக் காக்கும் ஊர்த் தெய்வமாகும். ஆகவே மாரியம்மன் கண்ணகி தெய்வமாகக் கொள்ளப்படு கிறது.

ஒரு காலக்கட்டத்தில் தமிழகம் முழுவதும் பரவி இருந்த மாரியம்மன் வழிபாடு வட மாவட்டங்களில், குறிப்பாக தென் ஆற்காடு, வடஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் திரௌபதியம்மன் வழிபாடாக மாற்றம் கொண்டது. இது எப்படி நிகழ்ந்தது. திரௌபதிக்கும் தமிழகத்திற்கும் என்ன தொடர்பு? என்பது கேள்விக்குறியாக இருந்தது. இப்போது அதற்கும் விளக்கம் கிடைத்துவிட்டது.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த பல்லவ மன்ன னாகிய பரமேஸ்வரவர்மன் காலத்தில் ஒரு நெருக்கடியான போர் ஏற்பட்டு, மிகுதியாக அளவில் போர் வீரர்கள் மாள தோல்வி ஏற்படுகிறது. அப்போது, மன்னன் படைக்கு ஆள் திரட்ட வேண்டிய நெருக்கடியிலிருக்கிறான். ஆள் கிடைக்காத நிலையிலும், கிடைக்கும் ஆட்களுக்குப் போர்க் குணத்தை ஏற்படுத்தும் நிலையிலும் கிராமங்கள் தோறும் பாரதக் கதை களைப் படிக்க ஏற்பாடு செய்கிறான்: அதற்கென நிவந்தங்களை கொடுக்கிறான்: இது கல்வெட்டில் கிடைக்கும் செய்தி.

இவ்வாறு பாரதக் கதைகளைப் படிக்கும்போதுதான், திரௌபதியம்மன் கோயில்கள் ஏற்படுகின்றன; மாரியம்மன் கோயில்கள் திரௌபதியம்மன் கோயில்களாக மாற்றப்படு கின்றன; கிராமத்தில் மக்கள் அரசன் வழி செயல்பட ஆரம்பிக் கிறார்கள். கதைகள் படிக்க வசதியாக திரௌபதியம்மன் பூஜை நடத்தப்படுகிறது. இந்த முறையில்தான்-இக்கதை வழியாகத் தான் இம்மாவட்டங்களில் நடத்தப்படும் தெருக்கூத்துக் கதை கள் பெரும்பாலும் பாரதக் கதைகளாகவே இருக்கின்றன. தெருக்கூத்து திரௌபதியம்மன் கோயில் திருவிழாவிலேயே

நடத்தப்பட்டு வருகின்றது. கூத்தின் முடிவில் திரௌபதியம்மன் கோயிலுக்குச் சென்று திரௌபதி கூந்தல் முடிக்கும் காட்சியும் நடத்தப்படுகிறது. கண்ணகி வரலாறும் மாரியம்மன் கதையும் படிக்கப்பட்டக் கோயில்களில் பாரதக் கதைகள் படிக்கப்படும் நிலை வந்தது. பேராசிரியர் ஆ. சிவலிங்கனாரும், கண்ணகி கோயிலாகவே திரௌபதியம்மன் இருந்திருக்க வேண்டுமென்ற கருத்தை உறுதிப்படுத்துகிறார் (4. 5. 85).

இவ்வட மாவட்டங்களில் திரௌபதியம்மன் கோயில்கள் இல்லாத ஊர்களே இல்லை எனலாம். மாரியம்மன் கோயில்கள் மாற்றப்பட்டிருந்தன. ஆனால், ஆட்சி மாற்றத்திற்குப் பின், பல இடங்களில் திரௌபதியம்மன் கோயில்கள் இருக்க, புதியதாக மாரியம்மன் கோயில்கள் கட்டப்பெற்று வழிபாடு நடத்தப்படுகின்றன. இது இன்றைய நிலையாக இருக்கிறது. திரௌபதியம்மனுக்கும் உள்ள ஏற்றம் மாரியம்மனுக்கு இல்லை.

ஆக, தொகுத்துக் கூறும்போது திராவிடச் சக்தி வேறு; ஆரிய-இந்து சக்தி வேறு என்பது தெரிகிறது. திராவிடச் சக்தி என்பது பெண் தெய்வங்கள்; ஆனால், இந்து சக்தி என்பது ஆண் தெய்வத்தின் மனைவியே என்பதும் புலனாகிறது. திராவிடச் சக்தியே, தாய்த் தெய்வம். இந்த திராவிடச் சக்தியில் மிகுதியான அளவில் ஏற்றம் கொண்டிருப்பது கண்ணகியாகிய பத்தினித் தெய்வம். இப்பத்தினித் தெய்வம் பகவதியாகக் கேரளத்திலும், கண்ணகியாக இலங்கையிலும் மங்கலதேவியாக, சந்திராவாகக் கர்நாடகத்திலும், பத்தினித் தெய்யோவாக சிங்களத்திலும், மாரியம்மனாகத் தமிழ்நாட்டிலும் பரவி வழிபடப்பட்டு வந்திருக்கிறது. திராவிடச் சக்தியில்-தமிழர்களின் தாய்த் தெய்வ வழிபாட்டில் பத்தினித் தெய்வம் கண்ணகி முதன்மையான இடத்தைப் பெற்று இலங்குகிறாள் என்பதும் தெரிகிறது.

# 9. மங்கலதேவி கண்ணகி கோட்டம் இருப்பு பற்றிய சிக்கல்

மங்கல தேவி கோயில் என்று சொல்லி வந்த அளவில், இக்கோயிலைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை; உதாசீனப் படுத்தினார்கள். அப்போது கம்பம் பள்ளத்தாக்கு மக்கள், கோயிலுக்குச் சென்று வந்தார்கள்;விழாக்கொண்டாடினார்கள்; மூன்று நாட்கள் அங்கு தங்கி இருந்து வந்தார்கள். அப்போ தெல்லாம் இவர்களை யாரும் பொருட்படுத்தவில்லை. அப்போதும் கண்ணகிதான் மங்கல தேவி என்ற நோக்கில்தான் வழிப்படப்பட்டது.இது கூடலூர் மக்களுக்குத் தெரிந்த செய்தி. ஆனால், 1971-இல் மங்கலதேவிதான் கண்ணகி என்று மேடை களிலும் பத்திரிக்கைகளிலும் செய்தி விளம்பரப்படுத்தப்பட்ட போதுதான், சிக்கல் உருவெடுத்தது.

மங்கலதேவியை வழிபடும் போதெல்லாம் வாளாவிருந்த கேரள அரசு;பெரியாறு வனவிலங்கு சரணாலயத்தைப் பக்கத்தே வைத்துள்ள கேரள அரசு, மங்கலதேவிக்கோயில் தன்னெல்லை யில் இருக்கிறது என்று அடாவடித்தனம் பண்ணஆரம்பித்தது. வழிப்படச்செல்லும் மக்கள் குமுளிப்பாதையில் செல்லுவதில்லை. கூடலூர் ஒற்றையடி பாதையில்தான் சென்று வந்தார்கள். அப்போது கோயிலுக்குள் விடாது தடுத்து நிறுத்தியது. இது வனவிலங்கு சரணாலயப்பகுதி; இங்கு வந்து தொந்தரவு செய்யக் கூடாது என்று அறிக்கைவிட்டுத் தடுத்தது. காரணம்? கண்ணகி என்றவுடன் விழித்துக் கொண்டது. ஐயப்பக் கோயிலுக்குப் பல பகுதியிலிருந்தும் மக்கள் பெருகிவந்து கேரளாவுக்கு வருவாயைப் பெருக்குவது போல, இக்கண்ணகி கோயிலையும் சுற்றுலா மையமாக்கலாம். தமிழர்கள் வரலாற்றுச் சிறப்புக் கருதி கூட்டம் கூட்டமாக வருவார்கள்; காசை அள்ளித் தரு வார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆகவேதான், எல்லைத் தகராறு பண்ணி, தனக்கே சொந்தம் என்று சொல்லி பயமுறுத்துகிறது. வனத்துறை மூலம் கட்டணம் வசூல் பண்ணி

கோயிலுக்கு ஆட்களை அனுப்புகிறார்கள். தனி ஆளுக்கு இரண்டு ரூபாயும், வாகனம் செல்லுவதற்குத் தனியாக 5 ரூபாயும் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் எல்லைப் பகுதி நகரப் பகுதி; ஆகவே, அங்கு போலீஸை வைத்து அடாவடித்தனம் பண்ணுகிறார்கள்; நம் பகுதி காட்டுப் பகுதி. ஆகவே, நம் எல்லையிலுள்ள மக்கள் பயப்படுகிறார்கள். இவர்களை அவர்கள் மிரட்டுகிறார்கள். அவர்கள் எல்லைப்பகுதியில், நம்மவர்களின் ஏல விவசாயத் தோட்டங்கள் இருக்கின்றன. சொத்திற்கு நாசம் வரும் என்று அஞ்சி, அமைதியாக இருக்கிறார்கள்.

உண்மையில் எது எப்படியிருப்பினும் அனுபவப் பாத்தியம் உள்ளவன் விட்டுக்கொடுக்க மாட்டான். இது தவிர, அக்கோயிலே நம் பகுதிக்குள் இருக்கிறது. விட்டுக்கொடுக்கத் தேவையே இல்லை. நம்மவர்கள் வழிபாடு நடத்தும்போது அவர்கள் வந்து தடுக்கும்படியாக நம் அரசு எப்படி வழியமைத்து கொடுத்தது; அவர்கள் போலீஸ் வரும் போது தமிழ் நாட்டுக்குப் போலீஸ் துறை இல்லாமலா இருந்தது. தமிழ் நாட்டுமக்களின், அரசின் மெத்தனப் போக்கை காட்டுகிறது இது. இப்போது அவர்கள் வந்து ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

கண்ணகி கோயில் என்று தெரிந்தவுடன் அவர்கள் விழித்துக் கொண்டது போல், இவர்களும் விழித்திருக்க வேண்டும். அப்போது இந்த அரசு அவ்வரசிடம் கோயிலைச் சீரமைக்க அனுமதி கேட்டது; நம் பகுதி என்று தெரியாமலா கேட்டார்கள்; நம் அதிகாரிகளுக்கு எல்லை பற்றியே தெரியாதா; அமைச்சர்களுக்கு ஆலோசனை சொன்னவர்களுக்கு வரைபடம் பற்றித் தெளிவில்லையா என்பன போன்ற ஐயப்பாடுகள் தோன்றுகின்றன.

மங்கலதேவி மலையும் கோயிலும் கோயிலுக்குச் செல்லும் பாதையும் நம்முடைய-தமிழ் நாட்டின் வண்ணாத்திப்பாறை பாதுகாக்கப்பட்ட வனத்துறையில் இருக்கிறது. 1883-இல் கூடலூர் மக்கள் கோயிலுக்குச் செல்லும் பாதையைச் சீரமைப்பதற்காக அரசிடம் அனுமதி கேட்டார்கள். அப்போதைய அரசு அனுமதி வழங்கியது. 12 அடி அகலத்திறகுப் பாதை அமைத்துக் கொள்ளலாம் என்றும், வேறு காட்டு வெள்ளாமை செய்யக் கூடாது என்றும் அனுமதி வழங்கப் படுகிறது. இது 15. 11. 1883-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புனித ஜார்ஜ் கெசட் 719-721-ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட

வெளியீட்டுப் பிரிவு 25-இல் இருக்கிறது. இதிலிருந்தே, மங்கல தேவிக் கோயில் தமிழ்நாட்டுக்குச் சொந்தம் என்பது தெரிகிறது. 1839-1896-ஆம் ஆண்டுகளுக்கான நில அளவை ஆவணங்கள் இக்கோயில் தமிழகத்திற்குள்ளேயே அமைந்திருப்பதைக் காட்டு கின்றன (நெடுமாறன் : 1983:6); 1893-ஆம ஆண்டு இந்திய நில அளவை வரைபடம், 1916-ஆம் ஆண்டு இந்திய சர்வேயர் ஜெனரல் வரைபடம் ஆகியவை மங்கலதேவிக்கோயில் தமிழ் நாட்டிற்குள் அமைந்துள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றன. 1934-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள மாவட்ட கெசட்டில் இக்கோயில் தமிழகத்திற்குள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. மதுரை மாவட்ட பெரியகுளம் தாலுகா வண்ணாத்திப்பாறை பாதுகாக்கப்பட்ட காட்டில் இக்கோயில் உள்ளது என்பதும், கூடலூர் மக்கள் காட்டு வழியே போக அனுமதித்த விபரமும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1. 5. 1916 அரசு ஆணை எண். 183 (பொது அரசியல்) படி சென்னை மற்றும் திருவாங்கூர் அரசுகள் மாநிலங்களுக்கும் மதுரை மாவட்டத்தில் உள்ள எல்லை ஆற்றுப் பள்ளத்தாக்குக்கு ஏற்ப அமைந்ததை ஏற்றுக் கொண்டிருக் கின்றன.

முன்காலத்தில் - விஜயநகரப் பேரரசு காலத்தில் பூஞ்ஞை யாத்து தம்பிரான் ரவிவர்மாவுக்கும் மதுரை ஆண்ட ராணி மங்கம்மாவிற்குமிடையே எல்லைப்போர் மூண்டது. கி.பி. 1772-ஆம் ஆண்டு, காட்டூர் என்று அழைக்கப்படும் உத்தமபாளையத் தில் தகராறு தீர்த்து வைக்கப்பட்டது. இதற்குப்பின் உத்தம பாளையம் முழுவதும் தமிழ்நாட்டைச் சேர்ந்தது என அக்கேரள மன்னன் ஒத்துக் கொண்டார் (நெடுமாறன் ப. : 1981:7-8).

இந்த எல்லைத் தகராறு மீண்டும் இப்போது எழுப்பப்பட்டி ருக்கிறது. 1952, 1957, 1959 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட தமிழ்நாட்டின் வரைபடங்களில் மங்கலதேவிக் கோயில் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. இந்திய அரசின் டைரக்டர் ஜெனரல் ஆப் சர்வே 1978-இல் வெளியிடப் பட்ட [எண். 58-ஜி/2] மதுரை மாவட்டம் இடுக்கி மாவட்டம் பற்றிய தமிழ்நாடு கேரள வரைபடம் தெளிவாக மங்கலதேவிக் கோயில் வண்ணாத்திப்பாறை பாதுகாக்கப்பட்டுள்ள வனத்தில் இருப்பதாகக் காட்டுகிறது. இதுபோலவே 1979-இல் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட உத்தமபாளையம் தாலுகா வரை படத்தில் வண்ணாத்திப்பாறை பாதுகாக்கப்பட்ட காட்டில் மங்கலதேவிக் கோயில் இருப்பதாகத் தெளிவாக்கப்பட்டிருக் கிறது. எல்லையில் இல்லை; எல்லையை விட்டு விலகி தூரத்தில் தமிழ்நாட்டில் இருக்கிறது. 1983-இல் வெளியிடப்பட்ட

மதுரை மாவட்டச் சுற்றுலா வரைபடத்தில், விளக்கத்தில் உத்தமபாளையம் வட்டத்தில் சிலம்பின் நாயகியாகச் சிலப்பதி காரத்தில் புகழப்படும் கண்ணகிக்கு இங்கிருந்து சற்றுத் தொலை வில் கண்ணகி கோயில் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆனால், வரைபடத்தில் கோயில் உள்ள இடம் குறிப் பிடப்படவில்லை. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் அதிகாரப்பூர்வமாக இன்றுவரைக்கும் மங்கலதேவிக்கோயில் தமிழ்நாட்டில் இருப்பதாக ஒத்துக்கொண் டுள்ளன; இதற்கு ஆதரவாகக் கேரள அரசின், தேக்கடிச்சுற்றுலா மையத்திலுள்ள சுற்றுலா வரைபடத்தில் மங்கலதேவிக் கோயில் தமிழகத்தின் எல்லைக்குள் இருப்பதாகக் காட்டியிருந்தது. ஆனால் சமீபகாலத்தில் தகராறுக்குப் பின் அந்த இடத்தை மட்டும் அழித்திருக்கிறார்கள் [தேவி : 18. 5. 1983].

197்-ஆம் ஆண்டு ஏப்ரல் 18-ஆம் நாள் தமிழ் நாடு அரசின் நில அளவைப் பதிவேடுகள் துறை இணை இயக்குநர் திரு. கணேசன், கேரள மாநிலப் பதிவேடுகள் துறைத் தலைவருடன் கண்ணகி கோட்டத்திற்குச் சென்ற தமிழக - கேரள எல்லைப் பகுதிகளைக் கூட்டு சர்வே செய்து கேரள எல்லையிருந்து 44 அடி தூரம் தமிழக எல்லை கடந்து மங்கலதேவி கண்ணகி கோயில் அமைந்திருக்கிறது என அறிவித்தனர். கேரள நில அளவுப் பதிவேடுகள் துறையின் ஒப்புதலோடு தமிழ்நாடு அரசுக்கு இதுபற்றி ஒரு அறிக்கையினைத் திரு. பி. கணேசன் சமர்ப்பித்துள்ளார்.

இது குறித்து 29. 4. 1975-இல் தினமலரில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். 1855 சர்வே வரைகோட்டுப் படத்தின்படி பார்க்கும்போது வரைகோட்டில் கோயில் இருக்கும் இடமும் காண்பிக்கப்பட்டுள்ளது. கோயில் அளவும் குறிக்கப்பட்டுள்ளது. அந்தக்கோவில் தமிழ்நாட்டு எல்லைக்குள்தான் உள்ளது என்பதற்கு அரசு குறிப்பின்படி சான்று உள்ளது என்கிறார்.

1976-இல் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. ஆகவே. அன்றைய தமிழக ஆளுநர் மேதகு. சுகாதியா அவர்கள் இக்கோயில் பற்றிய தகராறைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதினார். அதற்கு மத்திய அரசிடமிருந்து வந்த பதில் ''மத்திய கல்வெட்டு ஆராய்ச்சித்துறை டைரக்ட ருடன் இரு மாநிலச் செயலாளர்களும் கூட்டாக இப்பிரச்சினை யைப் பரிசீலனை செய்யலாம்'' என்று எழுதப்பட்டிருந்தது. இதற்கு முன்பாக சட்டமன்ற உறுப்பினர் கே. பி. கோபால் சட்ட சபையில் பேசினார், கண்ணகி கோட்டத்தைச் சீர்செய்ய வேண்டு

மென்றார். அதையொட்டி தமிழக நில வருவாய் வாரியத்தின் தலைவர் திரு. அனந்த பத்மநாபன் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. யூ. எஸ். நடராஜன் ஆகியோர் கோயிலுக்குச் சென்று சர்வே செய்து இது தமிழ்நாட்டு எல்லையில் தான் உள்ளது என முடிவு செய்தார்கள்.

உலகத் தமிழ் மாநாட்டின்போது இந்தியப்பிரதமருக்கு முதலமைச்சர் இக்கோயில் பற்றிக் கடிதம் எழுதினார். மத்திய உள்துறை அமைச்சர் ஜயில்சிங் இக்கடிதத்திற்கு எழுதிய பதிலில் கேரள அரசும் தமிழக அரசும் சேர்ந்து பேசி இக் கோயில் பற்றி முடிவு எடுக்க வெண்டுமென்று கூறினார்.

ஆதாரங்கள் தமிழ்நாட்டின் பக்கம் இருந்தும், மத்திய அரசு வெறுமனே இரு அரசும் கூடிப் பேசித் திர்த்துக் கொள்ளுங்கள் என்றுதான் எழுதியிருந்தது. நடுவரிடம் முறையிட்டால் சண்டைக்காரர்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வது எந்த நியாய முறையோ?

28. 7. 1981-இல் மத்திய உள்துறை அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில், மங்கலதேவிக் கோயில் தமிழ்நாட்டுக்குச் சொந்தம் என்பதற்கான ஆதாரங்களையும் வரைபடங்களையும் அனுப்பி, இதில் வேறு யாரும் உரிமை கொண்டாட முடியாது என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டிருந்தார். 20. 10. 1981 - இல் உள் துறை அமைச்சர் இரு அரசும் கூடி முடிவெடுத்துக் கொள்ளுங்கள் என்றுதான் எழுதினார். கேரளாவில் அப்போது ஜனாதிபதி ஆட்சி நடந்தது. ஆகவே மக்களரசு வந்தவுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால், 5. 5. 1982 - இல் சித்திரை பௌர்ணமியன்று கண்ணகி கோவிலில் நடைபெறும் விழாவிற்குச் சென்ற மக்களை, கேரள அரசு கைது செய்தது. சட்டமன்ற உறுப்பினர் ஆர். டி. கோபால், கம்பம் நடராஜன், எம். பி., ஆகியோர்களைக் கேரளப் போலீஸார் மரியாதையின்றி நடத்தினர். இதைச் சுட்டிக்காட்டி கேரள ஆளுநருக்கு முதலமைச்சர் தந்தி ஒன்று அனுப்பினார், ஆனால், அங்கிருந்து எந்த பதிலும் இல்லை.

3. 2. 1983- இல் மத்திய உள்துறை அமைச்சருக்கு நமது முதலமைச்சர் எழுதிய கடிதத்தில் இக்கோவிலைப் புதுப்பித்துச் சில மாறுதல்களைச் செய்ய கேரளாவில் சிலர் முயலுகிறார்கள் என்று புகார் சொல்லியிருந்தார். 11. 3. 83- இல் மத்திய உள்துறை அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் கேரள முதலமைச்

சருக்கு இது குறித்துக் கடிதம் எழுதினார்; அதன் நகலை முதலமைச்சருக்கு அனுப்பினார். இரு மாநிலங்களும் பேச்சு வார்த்தை மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கும் வரையில் இக்கோயிலுக்குள் எத்தகைய மாற்றமும் செய்யக் கூடாது என வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், இதை மீறி முங்கலதேவி கோட்டத்தினுள் மூன்றாவது கோயிலில் கேரள அரசு துர்க்கை சிலையை வைத்தது. போலீஸ் உதவியுடன் இது நடந்தது; இந்தச் சிலை தான் இப்போது உடைக்கப்பட்டிருக்கிறது. 1985 ஆகஸ்டு 17 - ஆம்தேதிக்கு முன் உடைக்கப்பட்டிருக்கிறது.

இதுபற்றிய பத்திரிகைச் செய்தியில் 1982-இல் தமிழக அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி இச்சிலை வைக்கப் பட்டது; கோயில் பராமரிப்புக் கேரள அரசிடம் இருந்து வருகிறது என்று கூறப்பட்டிருந்தது. இது எந்த அளவிற்கு உண்மை? 1982- க்குப் பின்னும் முதலமைச்சர் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிக் கொண்டு தான் இருந்திருக்கிறார்; தடுத்து வருகிறார். ஆனால், கேரள அரசு இப்படிக் கூறுகிறது. இதில் எது உண்மை. இதை மறுத்துத் தமிழகஅரசும் மறுப்பு வெளியிட வில்லை. ஆனால், கூடலூர் மங்கலதேவி கோட்டச் சீரமைப்புக் குழுவினர் இது குறித்து மறுப்பு அறிக்கை விட்டனர்.

மங்கலதேவிக் கோயிலின்மீது உரிமை கொண்டாட கேரள அரசு தொடர்ந்து அத்துமீறல் காரியங்களைச் செய்து வருகிறது. 19.9.1985-இல் உள்ள செய்தியின்படி இக்கோயில் கேரளஅரசின் தொல்பொருள் துறையின்கீழ் இயங்குவதாகத் தெரிகிறது (இந்தியன் எக்ஸ்பிரஸ், 19. 9. 1985).

கண்ணகி கோயிலைப் பாதுகாப்பதற்காகக் கேரளாவில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஐயப்ப சேவா சங்கமும், கேரளாவிலுள்ள கோயில் பாதுகாப்புக் கழகமும், தமிழகக் கோயில் பாதுகாப்புக் கழகமும் கூட்டாகச் செயல்படும் என்று அறிக்கை கூறுகிறது. இக்குழுவிடம் இக்கோயிலை ஒப்படைக்க வேண்டும் என்றும் கோயிலைச் சுற்றியுள்ள 10 ஹெக்டேர் நிலத்தையும் ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார் கள். இக்கோரிக்கையை வலியுறுத்தி 29. 9. 1985-இல் போராட்டம் நடத்தப் போவதாக அறிக்கை விட்டிருக் கிறார்கள்.

இக்குழுவில், தமிழ்நாட்டுக்காரர்கள் ஏன் அங்கம் வகிக்க வேண்டும். கேரளாவிலுள்ள இரு அமைப்பும் தங்கள் நாட்டுக்கு

ஆதரவான வேலைகளில் இறங்கியுள்ளன. இவ்வாறாவது தங்களுக்கு உரிமைபடுத்திக் கொள்ளலாம்; ஐயப்பக் கோயில் போன்று அமைத்துக் கொள்ளலாம் என்று கேரள அரசு நினைக்கிறது போலும். தமிழ்நாட்டு மக்கள் இக்குழுவில் அங்கம் வகிப்பது முறையல்ல. இக்கோயில் இவர்களுக்கே சொந்தமானதாகும் என்று எண்ணுகிறார்கள்.

தமிழ்நாட்டுக்குச் சொந்தமான இக்கோயில் உள்ள இடத்துக்கு எல்லை, குமுளிக்குக் கிழக்கு, வண்ணாத்திப் பாறைக்குத் தெற்கு, சுருளி மலைக்கு மேற்கு; பெரியாற்றுத் தேக்கத்திற்கு வடக்கு உள்ள பகுதிதான் மங்கலதேவி கண்ணகி கோட்டம் உள்ள இடம். 1883-ஆம் வருடம், நவம்பர் மாதம் 13-ஆம் தேதி வெளியிட்ட புனித ஜார்ஜ் கெசட்டில் குறிப்பிடும் கோயில் பற்றிய இடத்தின் அளவு:

மங்கலதேவி அம்மன் கோயிலும் அதைச்சுற்றியுள்ள இடமும்:

## கண்ணகி கோட்டம் தமிழகத்திற்கு சொந்தம் என்பதற்கான ஆங்கிலேய அரசின் ஆணை:

1882-ம் வருடத்து மதராஸ் பாரஸ்ட் 5-வது ஆக்ட், 18-வது செக்ஷன்படி மதராஸ் பாரஸ்ட் சீப் கன்சர்வேட்டர் அவர்கள் கூடலூர் கிராமத்தார்களுக்கு மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகாவில் 1883-ஆம் வருடம் நவம்பர் மாதம் 13 போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டின் 1-வது பாகத்தின் நெ. 719 முதல் 721 வரையுள்ள பக்கங்களில் 1883-ம் வருடம் அக்டோபர் மாதம் 11உ விளம்பர நெ. 187ல் மேற்சொன்ன ஆக்ட்டின் 25-வது செக்ஷன்படி பிரசுரம் செய்யப்பட்டுள்ள வண்ணாத்திப் பாறை ரிசர்வ்டு பாரஸ்டிற்குள் இருக்கும் மங்கலதேவி அம்மன் கோவிலில் சுவாமி கும்பிடவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளபடி அந்த கோவிலுக்குப் போகும் பாதையை, 12 அடி அகலத்திற்கு மேற்படாமல் மராமத்து முதலானதுகள் செய்து கொள்ளவும் அப்பாதையை உபயோகித்துக்கொள்ளவும் அனுமதிக்கிறார்.

2. இதனால் எவ்விதமான காட்டு மகசூலுக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை.

## ஷெட்யூல்

மங்கல தேவி அம்மன் கோயிலும் அதைச்சுற்றியுள்ள இடமும்: இது மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகா, வண்ணாத்திப் பாறை ரிசர்வ்டு பாரஸ்டிற்குள் 86 செண்டு

விஸ்தீர்ணமும், 390 லிங்க்ஸ் நீளம், 220 லிங்க்ஸ் அகலமுள்ள நான்கு பக்கத்திலும் சுவருடைய ஒரு சவுக்கு இடம்; இந்த இடத்திற்குள் உள்ள கட்டிடங்கள் ஜீரணித்த நிலமையில் இருக்கின்றன. அங்குள்ள தரையில் புல், பூண்டுகள் வளர்ந்திருக்கின்றன. அதற்குள் நான்கு கல் கட்டடங்கள் கல் கூரையுடன் இருக்கின்றன. மற்றொரு பெரிய கட்டடத்தில் ஒரு விக்ரகம் இருக்கிறது. இந்த விக்ரகத்தை உத்தேசித்துத்தான் ஜனங்கள் அங்குப் போகின்றனர். சுத்துப்பக்கத்து சுவற்றிற்கு வெளியே ஒன்றுமில்லை. பெரிய கட்டடத்தின் கோபுரம் சுத்துப்புரத்து சுவரின் தென் பாகத்தில் கோவிலின் தென் கிழக்கு மூலையிலிருந்து 140 லிங்க்ஸ் மேற்கே, 297டிக்ரி பேரிங்கில் இருக்கிறது. அது வண்ணாத்திப்பாறை ரிசர்வ்டு பாரஸ்டிற்கும் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கும் மத்தியில் உள்ள பொது எல்லையிலிருக்கிற சுமார் 4380 அடி உயரமுள்ள ஒரு மலை சிகரத்திலிருந்து 560 லிங்க்ஸ் தூரத்திலும் 64 டிக்ரி பேரிங்கிலும் இருக்கிறது. கோவிலின் வட கிழக்கு மூலை அதனுடைய தென்கிழக்கு மூலையிலிருந்து 290 லிங்க்ஸ் தூரத்திலும், 347 டிக்ரி பேரிங்கிலும் இருக்கிறது. இந்த கோவிலுக்கு அடியில் விஸ்தரிக்கப்பட்டுள்ளதும் 12 அடி அகலமுள்ளதும் மனிதர்களால் மாத்திரம் உபயோகிக்கக் கூடியதுமான பாதை ஒன்று உண்டு. இந்தப்பாதை ரிசர்வின் வட பக்கத்திலுள்ள மேல கூடலூர் கிராமத்தின் ரீ சர்வே நெ. 2751-ன் தென் பக்கத்தில் மேற்படி சர்வே நம்பரின் தென் கிழக்கு மூலையிலிருந்து எண்ணி வந்த இரண்டாவது கண்டம் சர்வே கல்லிற்கு 123 லிங்க்ஸ் மேற்கே உள்ள ஒருஇடத்திலிருந்து ரிசர்வுக்குள் பிரவேசித்துகீழ்க்கண்ட தூரங்களுடனும், பேரிங்ஸ்களுடனும், தென்மேற்குத் திசையில் போய் கோவிலின் வட கிழக்கு மூலையிலிருந்து 140 லிங்க்ஸ் தூரத்திலும், 267 டிக்ரி பேரிங்கிலும் உள்ள கோயிலின் வடக்கு வாசலைச் சேருகிறது.

இந்த அறிக்கையின்படிதான், மத்திய அரசு நில அளவை மேல் அதிகாரி திரு. சுப்பையா சர்வே செய்து கண்ணகி கோட்டம் தமிழகத்திற்குத்தான் சொந்தம் என்று சிபாரிசு செய்தார்; மத்திய அரசு சர்வே இலாகா இதற்கான ஆணையை பிறப்பித்தது.

ஆக, மங்கலதேவிக் கோயிலாகிய கண்ணகி கோட்டம் தமிழ்நாடு, கேரளம், இந்தியஅரசு ஆகிய அரசுகள் வெளியிட்ட சுற்றுலாத்துறை, வனத்துறை நில அளவைத்துறை ஆகியவற்றின் வரைபடங்களில் தமிழகத்தின் எல்லைக்குள் இருப்பது தெளிவாகத் தெரிந்த செய்தியே. இவ்வாறு இருந்தும் கேரள அரசு அத்துமீறி உரிமை கொண்டாடி வருவது வேடிக்கை

யானதே; தமிழக மக்களை-மங்கலதேவியை ஊர்த் தெய்வமாகக் கொண்டாடிவரும் கம்பம் பள்ளத்தாக்கு மக்களைத் துன்புறுத்தி வருவது கண்டிக்கத் தக்கதேயாகும்.

எந்த முறையில் பார்த்தாலும், மங்கலதேவிக் கோயில் கேரள அரசுக்கு உரிமையாகாது; தமிழ்நாட்டுக்கே உரியதாகும்; குறிப்பாக இது கூடலூர் மக்களுக்குப் பாத்தியப்பட்ட கோயிலே யாகும்; அனுபவ பாத்தியதை அவர்களுக்கே உண்டு. இதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

மங்கலதேவி கண்ணகி கோட்டம் தமிழ் நாட்டிற்கே உரியது என்ற இப்போதைய நிலையிலும் கேரள அரசு விட்டுக் கொடுக்காது இருப்பது வருந்துதற்குரியதே. நம்முடைய கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழுவினரும், இதற்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்; தமிழ் நாடு அரசுக்கு தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் அரசியல்வாதிகள் கட்சி வேறுபாடின்றி இதற்கா கப்போராடி வருகிறார்கள். திரு. ப. நெடுமாறன், திரு. குமரி அனந்தன் ஆகியோர் வன்மையாகப் போராடி வருகிறார்கள். மறைந்த கம்பம் நடராசன் கண்ணகி கோட்டத்திற்காக நாடாளு மன்றத்தில் வாதாடியதை மறக்க முடியாது; அவரைத் தொடர்ந்த திரு. ஆர். டி. கோபால் எம். பி. சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது கண்ணகி கோட்டத்திற்காகப் போராடியதைவிட இப்போது அதன் சீரமைப்பிற்கும் உரிமைக் கும் அதிகமாகப் போராடி வருகிறார். அவரைத் தொடர்ந்து திரு. சுப்பாராயர் எம்.எல்.ஏ.வும் கண்ணகி கோட்ட வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ளார். கூடலூர் கே. பி. கோபால் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதும் சரி இப்போதும் சரி இதற்காகவே உழைத்து வருகிறார். கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழுவின் புரவலராக இருந்த மறைந்த வள்ளல் திரு. கே. பி. காமராசு இவரின் தம்பி என்பது குறிப் பிடத்தக்கதாகும் திரு. செல்வேந்திரன் எம். பி, கம்பம் திரு. ஐக்கையன் திரு. மகேந்திரன் ஆகியோரும் கண்ணகி கோட்ட வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ளனர். இவர்களின் தொடர்ந்த தூண்டுதலால் தமிழக அரசும் செவி சாய்த்திருக்கிறது. கண்ணகி கோட்டத்தைப் புதியதாகவே கட்ட முடிவெடுத்திருக்கிறது.

மதுரையில் நடந்த உலகத் தமிழ்ச் சங்கம் தொடக்க விழாவில் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். கண்ணகி கோட்டத்தைத் தமிழகத்தோடு இணைக்க தமிழக அரசு தொடர்ந்து போராடி வெற்றி பெறும் என்றும் உரிமையை

விட்டுக்கொடுக்க மாட்டோம் என்றும் கூறினார்; அது மட்டு மல்ல, புதியதாக மங்கலதேவி கண்ணகி கோட்டம் உள்ள மலையிலேயே கோட்டம் அமைக்கும் என்றும் கூறினார். புதிய கோட்டத்தில் சிலப்பதிகாரக் காட்சிகளையெல்லாம் பொறித்து வைக்கும் பணி நடந்தேறும் என்றார்; இதற்காக தமிழக அரசு ஒரு கோடி பணம் ஒதுக்கி உள்ளதாகவும் விரைவில் கோட்டம் அமைக்கும் பணி நடக்கும் என்றும் அறநிலையத் துறை அமைச் சர் மாண்புமிகு வி. வி. சுவாமிநாதன் அண்மையில் கூறியிருக் கிறார்; கண்ணகி சிலை அமைக்கும் பணி தொடங்கி விட்டதாக வும் அதுவும் ஐம்பொன்னில் செய்யப்படுகிறது என்றும் செய்தி வெளியிட்டார்.

மங்கலதேவி மலைக்கு அருகிலுள்ள பழியக்குடிக்கு அருகில் கண்ணகி கோட்டம் அமைக்க இடம்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சாலைகள் அமைக்கும் பணி நடந்துவருகிறது. தமிழ் நாடு அரசு பழைய கோட்டத்திற்கும் சாலை வசதி செய்து தரவேண்டும். புதிய கோட்டத்திற்கு வரும் மக்கள் பழைய கோட்டத்திற்கும் தங்குதடையின்றி போய்வரும் வசதியும் உரிமையும் பெற வேண்டும். இதற்கு தமிழ்நாடு அரசு ஆவன செய்யவேண்டும்.

1987-ஆம் ஆண்டில் கேரள அரசு தமிழ்நாடு அரசு ஆகிய இரு காவல் துறையினரின் பாதுகாப்போடு சித்திரை முழுநிலவு வழி பாடு கண்ணகி கோட்டத்தில் நடந்திருக்கிறது. கூடலூர் கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழுவினர் இதற்கான ஏற்பாடு களைச் செய்துள்ளனர்.

மங்கலதேவி கண்ணகி கோட்டத்தைச் சிறந்த சுற்றுலா மையமாக ஆக்கலாம். பெரியாற்றங்கரைக்கருகில் மலைவளம் செழிக்க உள்ள பகுதி. இதைச் சுற்றுலா மையமாக்கி, இம் மலைக்கு அடுத்த பகுதியிலுள்ள இராசபாளையத்திற்கு மகாலிங் கம் மலைவழியாகப் போக்குவரத்து வசதி செய்து கொடுத்தால் தமிழகத்தின் எல்லாப் பகுதியினரும் இக்கோட்டத்தைக் கண்டு வர வசதி ஏற்படும். எவ்வளவோ செய்ய இருக்கும் தமிழக அரசு இதையும் செய்யாது விடுமா என்ன? பார்ப்போமே.

# 10. முடிவுரை

தொகுத்துக் கூறும்போது, கண்ணகி வழிபாடு நாட்டுப் புறத் தெய்வ வழிபாடு ஆகும் என்பது தெரிகிறது; இந்நாட்டுப் புறத் தெய்வ வழிபாடே திராவிடத் தெய்வ வழிபாடாகும். திராவிடத் தெய்வம் என்பதுதான் திராவிடர்கள் மத்தியில் நிலவிவந்த தெய்வக் கொள்கையாகும்; அவர்கள் முன்னோர் வழிபாடாகவே அதைக் கொண்டு வணங்கி வந்தார்கள் என்பதும் தெரிகிறது.

கம்பம் பள்ளத்தாக்கு என்பதும் வருசநாடு என்பதும் வேறு வேறான பகுதிகள்; இரண்டுக்கும் தொடர்பு உண்டு. கம்பம் பள்ளத்தாக்கு என்பது ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆளத் தொடங்கிய போது வழக்கில் வந்ததொன்று. கம்பம் பள்ளத் தாக்கு சுருளி மலைக்கு மேற்புறமுள்ள பகுதியினைக் குறிப்ப தாகும்.

கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள நாட்டுப்புறத் தெய்வங்களில்— திராவிடத் தெய்வங்களில் பெரும்பாலானவை பெண் தெய்வங் களே ஆகும். இந்தப் பெண் தெய்வங்களில் முதன்மை இடத்தைப் பெறுவது மங்கலதேவி ஆகும்.

மங்கலதேவி, திராவிடத் தெய்வங்களின் பகுப்பு முறையில் மாலைத் தெய்வமாகும்; இதை அக்காலத்தே மங்கலதேவி என்றும் மங்கல மடந்தை என்றும் குறிப்பிட்டு வந்திருக்கிறார் கள்.

மங்கலதேவிக் கோயில், மங்கலதேவி மலையில் பேரியாற்றங் கரைக்குப் பக்கத்தே இருக்கிறது. சிலப்பதிகார வருணனைப் படியே இக்கோயில் இன்றும் மாறுபடாது இருக்கிறது. மலையும் இருக்கிறது. இக்கோயிலே, சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வம் கண்ணகிக்கு எழுப்பிய முதற் கோயிலாகும்; இன்றுள்ள சிலைகளும் கட்டடங்களும் காலந்தோறும் திருப்பணி செய்த மன்னர்களால் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. பேராசிரியர் சி. கோவிந்தராசன் எடுத்துச் சென்ற சிலை சேரன் செங்குட்டு

வன் அமைத்த கண்ணகி சிலையாக இருக்கமுடியாது என்பதும் தெரிய வருகிறது. இக்கோயிலை மூலக் கோயிலாகக் கொண்டு திருச்செங்கோடு, கொடுங்கோளூர், மங்களூர், தஞ்சை, இலங்கையிலுள்ள அனுராதபுரம் போன்ற பகுதிகளில் பிடிமண் கோயில்கள் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

மங்கலதேவிக் கோயிலிலிருக்கிற தோரணவாயில் அமைப்பின்படியே, பூம்புகார் கலைக் கூடத்தின் வாயில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திராவிடச் சக்தி வேறு: ஆரிய சக்தியாகிய இந்துச் சக்தி வேறு: திராவிடச் சக்தி என்பது பெண் தெய்வம்; அதாவது தாய்த் தெய்வம்: ஆரிய சக்தி என்பது ஆண் தெய்வத்தின் துணையைக் குறிப்பிட்டுக் கூறப் பயன்படும் சொல்லாக்கம் திராவிடச் சக்தியில் மிகுதியான அளவில் ஏற்றம் கொண்டிருப்பது கண்ணகியாகிய பத்தினித் தெய்வம். இப்பத்தினித் தெய்வம் பகவதியாகக் கேரளத்திலும் கண்ணகை — கண்ணகியாக இலங்கைத் தமிழ்ப் பகுதிகளிலும் மங்கலதேவியாக—சந்திராவாகக் கர்நாடகத்திலும் பத்தினித் தெய்யோவாக சிங்களத்திலும் மாரியம்மனாக தமிழ்நாட்டிலும் பரவி வழிபடப்பட்டு வந்திருக்கிறது. திராவிடச் சக்தியில்—தமிழர்களின் தாய்த் தெய்வ வழிபாட்டில் பத்தினித் தெய்வம் கண்ணகி முதன்மையான இடத்தைப் பெற்றுத் துலங்குகிறாள் என்பது தெரிகிறது.

# துணை நூற் பட்டியல்


## தமிழ் இலக்கிய நூற்கள்

1. அகநானூறு, (த. மு. வேங்கடசாமி நாட்டார் உரை.) சென்னை, 1944.
2. ஐங்குறுநூறு, (தி. சதாசிவ ஐயர் பதிப்பு:) யாழ்ப்பாணம் 1943.
3. சிலப்பதிகாரம், (உ. வே, சா. பதிப்பு) சென்னை, 1944.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை) கழகப் பதிப்பு, சென்னை, 1953.
5. பத்துப்பாட்டு, நச்சினார்க்கினியர் உரை, (உ, வே. சா. பதிப்பு,) சென்னை, 1935.
6. புறநானூறு, (உ. வே. சா. பதிப்பு) சென்னை, 1935.
7. மணிமேகலை. (உ. வே. சா. பதிப்பு) சென்னை, 1931.

## தமிழ்நூற்கள்

1. இராசு, புலவர், செ., கம்பம் கூடலூர் மங்கலதேவி, கண்ணகி கோட்டமா?, திருப்பூர், 1976.
2. இராமசாமி, டாக்டர், துளசி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், சென்னை, 1985.
3. கந்தையா, வி. சீ., மட்டக்களப்புத் தமிழகம், இலங்கை, 1964.
4. சாமி, பி. எல்., தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, சென்னை, 1976.
5. நெடுமாறன், ப., கண்ணகி கோட்டம் தமிழருக்கே சொந்தம், மதுரை, 1983.

7. வித்தியானந்தன், டாக்டர், சு. தமிழர் சால்பு, சென்னை, 1971.

## தமிழ் இதழ்கள்

1. ஆனந்த விகடன், 1971.
2. இதயம் பேசுகிறது, மே 15, 1983.
3. தமிழரசு, ஜூலை 16, 1972.
4. தமிழரசு, ஆகஸ்டு 1, 1972.
5. தமிழ்ப்பொழில், ஜனவரி, பிப்ரவரி, 1965.
6. தின மணி(மதுரைப் பதிப்பு), 20. 3. 1976.
7. தினமலர், (மதுரைப் பதிப்பு) 29. 4. 1975.
8. தேவி, மே 18, 1983.
9. புனித ஜார்ஜ் கெசட், 1—வது பாகம், நவம்பர், 13, 1883.
10. ஜனநாயகம், ஏப்ரல், 1959.
11. ஜனநாயகம், மே, 1959.

## கல்வெட்டு

| | | | |
|---|---|---|---|
| ஏ. ஆர். எண். | 278 | — | 1966 |
| ‘‘ | 279 | — | ’’ |
| ‘‘ | 280 | — | ’’ |
| ‘‘ | 281 | — | ’’ |
| ‘‘ | 282 | — | ’’ |
| ‘‘ | 283 | — | ’’ |
| ‘‘ | 284 | — | ’’ |

## English Journals

1. Ramakrishnan, N. , Mirror, May, 1965.
2. Indian Express, Madurai, 19. 9. 1985.
3. Indian Express, Madurai, 19. 3. 1976.

## English Book

V. R. Dikshitar-, Silappathikaram, Madras, 1978.

## நேர்காணலில் பங்கேற்றோர்:

1. இராமச்சந்திரன், வி. , கூடலூர், 8. 8. 1985.
2. இராஜமாணிக்கம், எஸ். , கூடலூர், 15. 7. 1985.
3. கணபதிராசன், இரா. , கூடலூர், 10. 8. 1985.
4. காமராஜ், புலவர், கம்பம், 18. 8. 1975.

5. கோவிந்தராசன், இரா. ,கூடலூர், 17. 8. 1985.
6. சரஸ்வதி, மு. , கூடலூர், 15. 8. 1985.
7. பெருமாள், சி. ,கூடலூர், 13. 8. 1985.
8. ரெங்கநாதன், கூடலூர், 15. 7. 1985.
9. வேலுச்சாமி,கூடலூர், 25. 7. 1985.
10. ஜோதிமணி, கம்பம், 18. 8. 1982.
11. இராஜகோபால், ஒ. சி. கம்பம், 18. 8. 1985.
12. முருகப்பன், பேராசிரியர், வே., கோயம்புத்தூர், 5. 5. 1985
13. இராமசாமி, தா..கூடலூர், 17. 8. 1985,
14. அக்கிம், சா., கூடலூர், 17. 8. 1985.
15 கோபால், ஆர், டி., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், கம்பம், 17. 8. 1985.
16. துளசிராம், தலைமைஆசிரியர், கே. பி. என். மேல்நிலைப்பள்ளி, கூடலூர், 17. 8. 1985.
17. பழமலை, விழுப்புரம் 15. 6.1985.
18. சக்தி வேல், சி. குமுளி, 15, 8. 1987
19. திருநாவுக்கரசு. க. த., சென்னை. 20. 12. 1986
20. சிவலிங்கனார். ஆ., சென்னை. 4-5-1985

# சொல்லடைவு


அக்கீம் சா, -4
அக்னி வீரபத்திரன் - 24
அகநானூறு - 49, 51
அங்கணன் - 21
அங்கணாமைக் கடவை - 71
அங்காளம்மன் - 20
அடையாளக்கல் - 9
அடையாளக்கல் வழிபாடு - 10
அந்தணர் - 40
அப்துல் ரகுமான் - 4
அம்மன் தெய்வம் - 66
அம்மன் வழிபாடு - 70
அமச்சியாபுரம் - 12, 16, 36, 59
அம்மணி - 30
அய்யனார் - 18
அழகர் - 7
அழகர் கோயில் - 23
அழகர்சாமி - 26
அழகர் சாமி கோயில் - 14, 46
அறக்களத்து அந்தணர் 35
அனந்த பத்பநாபன - 84
அனுபவப் பாத்தியம் - 81
அனுராதபுரம் - 71, 72, 91
ஆங்கிலேய அரசு - 86
ஆண்டிப் பட்டி - 37
ஆண்டிப்பட்டிக்கரை வாய் - 11
ஆண்தெய்வங்கள் - 26
ஆதிபரா சக்தி 154
ஆந்திரா - 32, 70
ஆரியர்கள் - 7, 66
ஆரிய அரசர்கள் - 35
ஆரிய சக்தி - 66
ஆரியர்கள் பண்பாடு - 66
ஆரியத்தெய்வங்கள் - 79
ஆவி வழிபாடு - 6
ஆளுடைய நாச்சியார் - 45
ஆனந்த குமார சாமி - 75
இடுக்கி மாவட்டம் - 82
இந்து சக்தி - 66
இந்து சமயம் - 66
இந்து தெய்வங்கள் - 19
இமய மலை - 35, 46
இரசக்க நாயக்கனூர் - 13
இராத்தியம்மன் - 24
இராசராசன் - 43, 44, 46, 55, 6

இராமச்சந்திர தீட்சிதர். வீ, ஆ - 57
இராமசாமி தா. – 2
இராமசாமி- துளசி, - 7
இராஜராஜேஸ்வரி - 74, 77
இருக்கன் குடிமாரியம்மன் - 78
இருளன் - 49
இலங்கை - 43, 60, 71, 72, 91
இலிங்க வழிபாடு - 9
இளங்கோவடிகள் - 4, 36, 54
இனத் தெய்வம் – 19, 24
இனத் தெய்வ வழிபாடு 55
ஈழ நாடு - 71
உசிலம்பட்டி - 11, 14
உத்தமபாளையம் - 2, 1, 13 15, 83
உடுக்குச்சிந்து - 72, 73, 77
உருவ வழிபாடு – 10, 50, 51
உலகத் தமிழ் மாநாடு - 84
உலகத் தமிழ்ச் சங்கம் - 86
உறுமி - 22
உளதுறை அமைச்சர் - 84
ஊர்சுற்றுக் காவியம் - 72
ஊர்த்தெய்வம் - 60
ஊராளியர் - 13, 40
எசலாபெரஹர - 72
எம். ஜி. ஆர் - 83, 88
ஏழுமலை - 11
ஏந்தலார் கும்புக் கோயில் - 29
ஏரகம் - 12
ஐங்குறு நூறு - 49
ஐந்தாம் மகிந்தன் - 43
ஐம்பொன் - 89
ஐயப்பசேவாசங்கம் - 85
ஐயப்பன் கோயில் - 80
ஐயன் - 66
ஐயனார் - 66
ஐயை - 35
ஒக்கில்லியக் கவுண்டர் 18
ஒக்கலியர் 25
ஒட்டர் - 22
ஒல்லாந்தர் 75
ஒற்றை முலைச்சியம்மன் - 54, 66, 69
கட்டாடி - 74
கட்டியங்காரன் - 29
கடமலைக்குண்டு - 16 59
கண்டமனூர் - 15

கண்டமனூர் ஜமீன் - 16
கண்டி - 22
கண்ணகி கோட்டம் - 5, 34, 39
கண்ணகி கோட்டச் சீரமைப்புக்குழு - 4, 48
கண்ணகி சிலை - 89
கண்ணகையம்மன் - 59, 72
கணபதிப்பிள்ளை - 72
கணபதிராசன்; இரா. - 2
கந்தையா, வி. சீ - 72
கப்பம் - 13, 14, 60
கம்பம் ஏலவிவசாயிகள் ஐக்கிய மேல்நிலைப்பள்ளி - 34
கம்பம் பள்ளத்தாக்கு - 1, 15, 16
கம்பம் நடராசன் - 84, 88
கம்புகோளா - 71
கம்புத்துறை - 71
கயவாகு - 43
கர்நாடகம் - 32
கரந்தைக் கல்லூரி - 2
கரந்தைத் தமிழ்ச்சங்கம் - 48
கருணா நிதி. மு. - 4
கருப்பசாமி - 18, 26
கருமாத்தூர் - 22
கல்முனை - 44
கலியாணக்கால் வெட்டுதல் - 73
கறுப்பன் - 49
கன்னடம் - 8
கன்னிக் காளிபுரம் - 24
கன்னிமார்கோயில் - 19,26
கன்னிக்காளியம்மன் - 24
கன்னிமார் தெய்வங்கள் - 19
கனகவிஜயன் - 46
காஞ்சி வரதராயர் - 29
காட்டூர் - 14
காந்தி கிராமம் - 21
காப்பிலியர் - 14
காமயக்கவுண்டன்பட்டி - 11, 12, 35
காமராசு, கு. - 2
காமராசு. கே. பி. , - 2, 88
காவேரிப்பூம்பட்டினம் - 35
காளியம்மன் - 22
கிராம தெய்வங்கள் - 7
கிருஷ்ணன். கே. ஜி - 3, 4, 45
கெச்சிக்கரை - 15
கெஞ்சையன் - 15
கேணை - 21
கேரளா - 11
கேரள எல்லைப்பகுதி - 12
கேரள மன்னன் - 14, 82

கிரேக்கர் - 55
குடகு - 70
கும்புக்காரர்கள் - 29
கும்புக் கோயில்கள் - 28, 29
குமரி அனந்தன் - 85
குமுளி - 86
குமுளிச்சாலை - 61
குமுளிமலை - 11, 17
குருசி - 67
குலசேகரபாண்டியன் - 45, 62
குலதெய்வக் கோயில் - 23, 26, 30
குலதெய்வ வழிபாடு - 55
குளுத்தி - 73
குளுத்திப் பானகம் - 74
குறவர்கள் - 34, 52
குறும்பக்கா - 69
குன்றக்குறவர்கள் - 52
குன்றிவீரப்பன் - 27
குன்னூர் - 12, 16, 37, 59
கூடலூர் - 1, 20, 21, 22, 24, 26, 28, 60, 61, 62, 80
கூடலூர் பகவதியம்மன்கோயில் - 2, 3
கூத்தநாச்சியம்மன் கோயில் - 12
கொங்கு - 4
கொடுங்கோளூர் - 41, 53, 54, 60, 69, 91
கோணியம்மன் - 25
கொம்பு முரித்தல் - 77
கோபால், கே. பி. - 83
கோபால், ஆர். டி. - 84, 88
கோவலன் - 14
கோவிந்தராசன், சி, - 3, 34, 35, 36, 47, 51, 57, 58, 63, 90
சக்தி - 66
சக்திவழிபாடு - 5
சங்ககாலம் - 50, 51
சங்கிலி - 2
சடையாண்டியப்பன் கோயில்கள் - 23
சண்முகநாதன் கோயில் - 12
சதுரகிரிமலை - 11, 13
சந்தனக்கா - 16
சப்பாணிக்கருப்பு - 54
சமயபுரம் மாரியம்மன் 78
சமாதித் தெய்வங்கள் - 8, 9
சவுடம்மன் - 21, 30
சன்னிப்பசுத்தொழு - 29
சாப்டூர் - 11
சாமாண்டியம்மன் - 25
சாமியாடி - 33
சாயாரு கும்பு - 36

சாஸ்தா - 28
சிங்களம் - 91
சிங்களநாச்சியார் - 43
சித்திரை பௌர்ணமி - 27, 31
சிந்துவெளி நாகரிகம் - 66
சிலப்பதிகாரகாட்சி - 89
சிலப்பதிகாரம் - 13, 36, 38, 39, 48, 57, 59, 62, 69, 70, 71, 72, 77
சிலைமலை - 27
சிவராத்திரி - 21
சிவலிங்கம் - 46
சிவலிங்கனார் - 79
சிறுமரபுத் தெய்வங்கள் - 7
சின்னமனூர் - 12, 45
சின்னமனூர்ச்செப்பேடு - 14
சுகாதியா. மேதகு - 83
சுப்பாராயர் - 88
சுப்பையா - 87
சுமங்கலி - 8
சுருளி அருவி - 11, 36, 37
சுருளிஆண்டவர் கோயில் - 13
சுருளிஆறு - 12, 27, 36
சுருளி - 27
சுருளிமலை - 24, 35, 36, 37, 38, 86
சுருளிமலைத்தொடர் - 3, 11, 12, 13, 16, 17
சுருளிநீர்மின்திட்டம் - 23
சுவாமிநாதன், வி. வி. - 89
சுற்றுலாமையம் - 89
செங்களநாச்சியர் - 43
செங்குட்டுவன் - 41, 47, 58
செங்குன்றம் - 12, 41
செங்கோடு - 12
செண்பகச்செல்வி - 51
செண்பகமாறப் பாண்டியன் - 51
செல்லத்தம்மன்கோயில் 51
செல்லாண்டியம்மன் - 25
செல்லியம்மன் - 51, 55
செல்வேந்திரன் - 88
சேத்தி; பி. சி. - 84
சேரமன்னர் - 14
சேரன் செங்குட்டுவன் 3, 34, 35, 38, 39, 40, 42, 46, 51, 52, 53, 54, 56, 60, 64, 70, 90
சேவையாட்டம் - 22
சொக்கர் - 7
சோழநாடு - 71
டாடா ஆராய்ச்சிநிலையம் - 47
தஞ்சை - 43, 55, 60
தம்பிரான் மாட்டுத்தொழு - 28

தமிழ்ப்பல்கலைக் கழகம் - 34
தமிழ்ப்பொழில் - 3
தாத்தப்பசாமி - 29
தாத்தப்பன்கண்மாய் - 29
தாய்த்தெய்வ வழிபாடு – 66
தாலமி - 55
தாலி - 33
திராவிடச்சக்தி - 66, 79
திம்மக்கம்மாள் - 25
திராவிடச் சமயம் - 66, 77
திராவிடத் தெய்வக்கோயில் - 50
திராவிடத் தெய்வங்கள் - 1, 7, 19, 48, 53
திராவிடத் தெய்வ வழிபாடு - 1, 53
திராவிடர்கள் - 9, 48, 66
திராவிடமரபு – 40
திருகோணமலை - 75
திருச்செங்கோடு - 41, 54, 60
திருநாவுக்கரசு, மறை, - 2
திருமங்கலம் - 53
திருவாங்கூர் அரசு - 82
திருவாங்கூர் சமஸ்தானம் - 87
திருவொற்றியூர் – 76
திரௌபதியம்மன் வழிபாடு - 44, 78
தில்லை நடராஜர்சிலை – 75
தினமலர் - 83
தீக்குழி - 8
தீப்பாய்ந்த அம்மன் - 32, 33, 52
துர்க்கை - 22, 44, 85
தெருக்கூத்து -78
தேக்கடி - 12, 61, 83
தேவந்தி - 35, 38, 41
தேனி - 12, 15
தொண்டைமான் - 46
தொல்காப்பியர் - 49, 50
தொல்பொருள் ஆய்வுத்துறை - 14, 57
தோரணவாயில் - 91
நடராசன். து - 4
நடராசன். யூ. எஸ் - 84
நடுகல் - 48, 49
நடேசபிள்ளை - 74
நடைக்கல் பகவதி - 23
நவஇந்தியாபத்திரிகை - 4
நாகசாமி, இரா. - 4, 56
நாகதேவதை - 23
நாகமலைத்தொடர் - 11, 36, 37
நாகலாபுரம் - 30
நாட்டாசாரியன் - 45

நாட்டுப்புறம் - 1
நாட்டுப்புற ஆட்டங்கள் - 22
நாட்டுப்புறத் தெய்வங்கள் - 1, 7, 18, 19, 49
நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு - 54
நாட்டுப்புறப் பண்பாடு - 1
நாயக்க மன்னர் - 46, 64
நிலஅளவை ஆவணங்கள் - 82
நீர்ச்சுனை - 62
நீலகிரி - 19
நீலகிரி பழங்குடி மக்கள் - 18
நெடுமாறன். ப. - 82, 88
நெடுவேள் குன்றம் - 36, 38, 59
நெல்விச்சேரி - 67
நெல்லூர்பகவதி - 23
நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள் - 8
நொண்டி - 49
நொண்டிக்கருப்பு - 54
பகவதி - 55, 66, 69, 91
பகவதியம்மன் - 22, 53, 54
பச்சி மாங்குளம் - 15
பச்சி நகர் 15
பச்சி ராஜா - 15
பச்சைக் காமாட்சி - 16
பசிலார் கும்பு - 24
பத்தினிக் கோட்டம் - 35, 38
பத்தினித்தெய்வம் - 60, 66, 71
பத்தினித் தெய்வவழிபாடு - 43, 70, 72
பட்டத்துமாடு - 28
பணியர் - 13, 40
பத்தினித் தெய்யோ - 43, 72, 91
பத்தினித் தெய்வம் - 59, 90
பரமேஸ்வரவர்மன் - 44 78
பராசக்தி - 77
பல்லவ மன்னன் - 44, 78
பழங்குடி - 13
பழனி மலைத்தொடர் - 11, 36
பழியர் - 13, 19, 40, 89
பழிச்சியம்மன் - 19
பழையகோட்டம் - 89
பாண்டியர் - 44
பாண்டியநாடு - 77
பாரதக் கதைகள் - 44, 78
பாலதாயம்மாள் - 30
பாலாறு ஓடங்கல் - 1c
பிடிமண் கோயில் - 29, 53, 70
பிளாக்கம்மன் - 25
புகார் - 25
புத்தப்பிக்குகள் - 72

புதியகோட்டம் - 89
புலவர் சோமசுந்தரனார் - 2, 34
புறஞ்சேரி - 40
புனித ஜார்ஜ்கெசட் - 81, 86
பூக்குழி - 8
பூஞ்சையாத்து தம்பிரான் - 14, 20, 46, 60, 63
பூம்புகார் கலைக்கூட்டம் - 47, 62, 91
பூரணி - 43, 44, 45
பூரணை நாள் - 43, 44
பெண்தெய்வ வழிபாடு - 43
பெரஹார - 72
பெரிய கும்பிடு - 23, 24
பெரிய குளம் - 82, 88
பெரியாறு நீர்த்தேக்கம் - 40, 62
பெரியாறு நீர்மின்திட்டம் - 23
பெரியாறு வனவிலங்குச் சரணாலயம் - 64, 80
பெருமாள் - 10
பெருமரபுத் தெய்வங்கள் - 7
பெறந்தாளு வழிபாடு - 8, 32
பேயத்தேவர் - 27
பேரியாற்றங்கரை - 59, 61, 89
பேரியாற்று நீர்தேக்கம் - 12
பொம்மக்காள் கடை - 16, 38, 89
போலஜ்ஜியம்மன் - 29
பௌத்தர்கள் - 43
மகராசியம்மன் - 23, 24
மகாலிங்க மலை - 11
மகேந்திரன் - 88
மங்கலதேவி - 15, 17, 34, 46, 53, 55
மங்கலதேவிக் கோயில் - 35, 42
மங்கலம்மன் - 33
மங்கல மடந்தை - 32, 41, 57
மங்கலமடந்தைக் கோட்டம் - 58
மங்கலதேவி எஸ்டேட் - 1
மங்கலதேவி காடு - 1
மங்கலதேவி கோட்டம் - 11
மங்கலதேவி கோட்டச் சீரமைப்புக்குழு - 85
மங்கலதேவி மலை - 1, 42, 43, 45, 61, 81
மங்கலியர் - 23, 55
மங்களம்மா - 32
மங்களூர் - 55, 70, 91
மசானம் கருப்பசாமி - 21
மட்டக்களப்பு - 44, 54, 74, 77
மணிபல்லவத்தீவு - 40
மணிமேகலை -40
மணுக்குச் சௌந்திரியர் - 30

மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை - 3
மந்தையம்மன் - 24
மதிவாணன். க; - 4
மதுரை - 11, 14, 24, 34, 35, 37, 40, 51, 53
மதுரை அழகர் - 26
மதுரை மீனாட்சி - 66
மதுரை வீரன் - 23, 49, 55
மந்திரப்பாட்டு - 67
மயிலாடும் பாறை - 16, 59
மழையம்மன் - 53
மருதன் இளநாகனார் - 42
மல்லையசாமி - 30
மாங்காடு மாரியம்மன் - 77
மாகி - 67
மாலைக்காரியம்மன் - 32
மாலைக்கோயில் - 52
மாலைத் தெய்வம் - 8, 28, 31 59, 90
மாலையம்மன் - 32, 33
மாராளிய கும்பு - 29
மாரியம்மன் - 53, 77, 90
மாவிளக்கு - 20
மாளுவ நாட்டு நாகோட்ஸ் சமஸ்தானம் - 70
மாளுவ நாடு - 70
மாறவர்மன் குலசேகரன் - 3
மிஞ்சு - 33
மீனாட்சி - 7
முத்தாலம்மன் - 21
முதுமக்கள் தாழி - 14
முதுவர் - 40
முருகன் - 7
முருகன் கோயில் - 13
முல்லையாறு - 12, 16, 36, 38
முளைப்பாரி - 20
முன்னோர் வழிபாடு - 97
மூங்கிலாறு - 16
மூணு சாமிக்கோயில் 22
மூலக்கோயில் - 29
மேல்மருவத்தூர் காளிகோயில் - 54
மைசூர் - 4
மொகஞ்சதோரா - 66
மொகரம் பண்டிகை - 27
யாழ்ப்பாணம் - 71, 75
ரவிவர்மா - 14
ராணிமங்கம்மா - 14
ராஜேஸ்வரி கோயில் - 23
ரெங்கநாதன் 27
ரோமானியர்கள் - 35

லண்டன் அருங்காட்சியகம் - 75
லிங்கம் - 48
லிங்காயத் சமயம் - 70
லெப்பை முஸ்லீம் - 15
லோக்னவர் கும்புக் கோயில் - 29
லோயர்கேம்ப் பகுதி - 12
வஞ்சி மாநகர் - 40
வட்டப்புரி அம்மன் கதை - 42, 76
வடமலை மொட்டையாண்டி - 27
வண்ணாத்திப் பாறை - 61, 81, 86
வத்திராயிருப்பு - 11
வருசநாடு - 1, 15, 16, 38, 36
வருசநாட்டுப் பகுதி - 16
வளமைத் தெய்வங்கள் - 66
வழக்குரை - 74
வித்தியானந்தன். சு. - 49, 50
விநாயகர் சிலை - 47, 48, 74
விபுலானந்தம் அடிகள் - 44
விஜயநகரப்பேரரசு - 82
விஷாரிகாவு - 67
வீரசைவம் - 70
வீரப்பன் ஆர். எம் - 56
வீரபாண்டிக் கோயில் - 12, 25, 38
வீரவன் ஆறு -12, 37
வெங்கடாசலபதி - 30
வெண்கோடு - 13
வெண்குன்று - 12
வெள்ளிமலே - 16
வெற்றிவேற்செழியன் - 77
வேங்கைக்கானல்கள் - 13, 34, 38, 59
வேங்கைமரச்சோலை - 35, 39
வேலப்பர் – 27
வையை - 15, 35, 36, 37, 38, 59
வைரவசாமி - 29
ஜக்கம்மாள் - 22
ஜக்கையன் - 88
ஜயில்சிங் - 84
ஜேனாம்பிகை - 30
ஹரப்பா - 66

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | ரூ. பை |
|---|---|---|
| 1. | தமிழில் விடுகதைகள் | ... 12-00 |
| 2. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | ... 6-00 |
| 3. | தமிழர் தோற்கருவிகள் | ... 10-00 |
| 4. | தமிழும் தமிழரும் | ... 5-00 |
| 5. | தமிழர் இசை | ... 70-00 |
| 6. | ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள்-ஓர் மதிப்பீடு | ... 20-00 |
| 7. | இளங்கோவின் இலக்கிய உத்திகள் | ... 12-00 |
| 8. | திராவிட மொழி இலக்கியங்கள் | ... 35-00 |
| 9. | உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள் | ... 12-00 |
| 10. | தமிழ் இலக்கியக் கொள்கை - 9 | ... 20-00 |
| 11. | தொல்காப்பியம் - புணரியல் | ... 10-00 |
| 12. | தொல்காப்பியம் - வேற்றுமை மயங்கியல் | ... 12-00 |
| 13. | தொல்காப்பியம் - விளிமரபு | ... 6-00 |
| 14. | தொல்காப்பியம் - பெயரியல் | .... 12-00 |
| 15. | தொல்காப்பியம் - வினையியல் | ... 20-00 |
| 16. | வர்மசூத்திரம் | ... 10-00 |
| 17. | தன்வந்தரி குழந்தை வாகடம் | ... 14-00 |
| 18. | வெள்ளைக்காரன் கதை | ... 7-00 |
| 19. | மெய்க்கீர்த்திகள் | ... 20-00 |
| 20. | சிந்து இலக்கியம் | ... 8-00 |
| 21. | தமிழ்ச் சுவடிகள் அட்டவணை | ... 6-00 |
| 22. | தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... 12-00 |
| 23. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 1 | ... 12-00 |
| 24. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 2 | ... 22-00 |
| 25. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ... 15-00 |
| 26. | உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | ... 10-00 |
| 27. | டாக்டர் உ. வே சா. காப்பியப் பதிப்புகள் | ... 10-00 |
| 28. | தமிழரின் தாயகம் | ... 10-00 |
| 29. | பாவாணரும் தனித்தமிழும் | ... 12-00 |
| 30 | தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு | ... 10-00 |
| 31. | செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... 25-00 |
| 32. | மொழிபெயர்ப்பியல் | ... 10-00 |
| 33. | தமிழர் திருமணம் | ... 25-00 |
| 34 | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | ... 35-00 |
| 35 | தமிழ் தந்த வ. உ. சி. | ... 15-00 |
| 36. | எண்பத்திரண்டில் தமிழ் | ... 90-00 |
| 37. | மகாமதிப்பாவலர் | ... 11-00 |
| 38. | உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு | ... 15-00 |
| 39. | உலக முதன்மொழி தமிழ் | ... 12-00 |
| 40. | மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | ... 15-00 |
| 41. | தொல்காப்பியம் - இடையியல் | ... 22-00 |
| 42. | வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை | ... 15-00 |
| 43 | வாத்திய மரபு | ... 20-00 |
| 44. | Dissertations on Tamilology | ... 10-00 |
| 45. | Siddha Medicine (Heritage of the Tamils) | ... 45-00 |
| 46. | Literary Heritage of the Tamils | ... 50-00 |
| 47. | Tamil Drama | ... 20-00 |
| 48. | Tamil- Text (An Auto Instructional Course) | ... 25-00 |
| 49. | Siddha Medical Manuscripts in Tamil | ... 8-00 |
| 50. | Karaikkal Ammaiyar | ... 6-00 |
| 51. | Heritage of the Tamils- Temple Arts | ... 50-00 |
| 52. | Tolkappiyam (An English Translation) | ... 25-00 |
| 53. | Heritage of the Tamils- Education & Vocation | ... 50-00 |